ஆகஸ்ட் 2025

@NewsRotary /RotaryNewsIndia

# ரோட்டரி நியூஸ்

இந்தியா


www.rotarynewsonline.org

Vol.8, Issue 3 | Annual Subscription ₹ 480
Rotary News, August 2025, Chennai



Rotary

ADVT.


Rotary
District 3212
UNITE FOR GOOD
PROJECT PREMKUMAR
A Project by
Rotary Club of Virudhunagar RI Dist-3212
SAARCHI
95% of the students don't read beyond their text books.
Project Premkumar is reinforcing their reading habit.
• Reading enriches the mind by expanding knowledge and vocabulary.
• It enhances imagination and creativity by transporting readers to different worlds.
• Regular reading improves focus, concentration, and critical thinking skills.
• It reduces stress and provides a healthy escape from everyday life.
• Reading nurtures empathy by allowing us to see through others' perspectives.
As on July, 2025
No. of Programs 60
No. of Beneficiaries 14578
No. of Institutions Covered 60
Man Hours Spent 62520 Hrs
Project Premkumar is a remarkable project of RID 3212 & Rotary club of Virudhunagar which focuses on encouraging the students and enhancing their reading skills. Rtn. S.Nagalingam, IRS (Rtd.), Founder and Head Coach of Nikhil Foundation, is the key speaker of the programme.
Project Premkumar is Conducted in Two Phases.
First Phase - 'Breathe Reading' Training Program
Second Phase - 10 Student Volunteers will be reviewing the book assigned to them
* Best 5 Reviews will be awarded with Rs.5000 Worth of Books.
LEKHA ads/Aug 25/ Rotary/FIW
Do you wish to organize "PROJECT PREMKUMAR" in your School / College?
We are waiting to partner with you.
CONTACT
Project Chairman
Rtn. S. NAGALINGAM IRS(Rtd.)
90036 59270
IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

# உள்ளே




12 கொடைக்கானல் பழங்குடியினருக்கு வீடுகள்



20 RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவுடன் ஒரு உரையாடல்



24 கிராமப்புறப் பெண்களை மேம்படுத்துதல்



28 அமைதி: துப்பாக்கிகளின் மௌனம் அல்ல



38 கல்கரி மாநாட்டின் தருணங்கள்



44 மகாராஷ்டிரத்தின் வறண்ட கிராமங்களுக்கு தண்ணீர்!



50 செயற்கைக் கை, கால் முகாம்களை நடத்திய RC டின்சுகியா


Rotary

A publication of Rotary Global Media Network

சுற்றுச் சூழலைக்காக்க மின்பதிப்புக்கு மாறவும்

**மின்னிதழ் கட்டணம் குறைப்பு**

ஜூலை 1, 2024 முதல் எங்கள் மின் பதிப்பு சந்தா ₹420-லிருந்து **₹324**-ஆக குறைக்கப்பட்டுள்ளது.

## தரமான பத்திரிகை; நல்ல தலையங்கங்கள்.

*ரோட்டரியின் ஈகை மற்றும் தன்னலமற்ற சேவை பற்றிய கொள்கைகளை பற்றி ஜூலை மாத தலையங்கத்தில் ஆசிரியர் ரஷீதா பகத் அழகாக எழுதியுள்ளார், இது மிகவும் பொருத்தமானது. உலகில் எது நடந்தாலும் அது காரணம் மற்றும் விளைவினால் நடக்கிறது, உதாரணத்திற்கு ஒருவர் போக்குவரத்து நெரிசலால் விமானத்தைத் தவறவிட்டு, விபத்துக்குள்ளான ஏர் இந்தியா விமானத்தைத் தப்பியது போல. ரோட்டரியின் தன்னலமற்ற கொள்கையை வலியுறுத்தி, ஆசிரியர் அழியும் உலகையும் சமீபத்திய விமான விபத்தையும் சரியாக இணைத்து, வசதி உள்ளவர்கள் மற்றவர்களுக்கு உதவவும் அதிகமாகக் கொடுக்கவும் வேண்டும் என்று சுட்டிக்காட்டினார்.*


*சுரேந்திரன் TPV, RC கல்பேட்டா — D 3204*

*உங்கள் ஜூலை மாத தலையங்கம் சரியான நேரத்தில் வந்துள்ளது. தற்போதைய புவிசார் அரசியல் பதட்டங்கள் மற்றும் வர்த்தகப் போர்கள் நிறைந்த காலகட்டத்தில், ரோட்டரியின் “நன்மைக்காக ஒன்றிணைவோம்” என்ற செய்தியை நாம் முழு பலத்துடன் கொண்டு செல்ல வேண்டும். இந்த ஆண்டு மேலும் பல ரோட்டரி செய்திகளை எதிர்பார்க்கிறேன். தலையங்கக் குழுவிற்கு எனது வாழ்த்துக்கள்.*

*சோம் துவா, RC டெல்லி சவுத் — D 3011*

*ரோட்டரி நிகழ்வுகளைத் தளராமல் கவரேஜ் செய்து, அவற்றை சுவாரஸ்யமான கட்டுரைகளாக வழங்கிய உங்கள் அயராத முயற்சிகளையும் திறனையும் பாராட்டி, முன்னாள் சர்வதேச தலைவர் இயன் ரைஸ்லி அளித்த பாராட்டுகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்கள்.*

*“தானத்தில் தோன்றும் கிருபை” என்ற தலையங்கம் உத்வேகம் அளிக்கிறது, மேலும் “ஆபரேஷன் சிந்தூர்” குறித்த முந்தைய தலையங்கம் பயங்கரவாத தாக்குதல் பற்றிய மிகச்சமமான பகுப்பாய்வாக இருந்தது. ஜூன் மாத*




*இதழின் அட்டைப்படத்தில் ஒரு தாய் தனது மாற்றுத்திறனாளி மகனுக்கு உதவிக்கரம் நீட்டும் புகைப்படம் மனதைத் தொடுகிறது. RC ஆக்ரா பள்ளிகளில் கணினிகள் மற்றும் ஆய்வகங்களை வழங்கி அற்புதமான திட்டங்களைச் செயல்படுத்துவது குறித்துப் படிப்பது மகிழ்ச்சியளித்தது; மாற்றுத்திறனாளி குழந்தைகளுக்கான “ஸ்பீட் வாக்” நிகழ்வு ஒரு பாராட்டத்தக்க முன்முயற்சி. “பறவைகளை விடுவிக்கவும்” என்ற “கோ க்ரீன்” பத்தி, பறவைகளைக் கூண்டில் அடைக்கக் கூடாது என்ற செய்தியை வலியுறுத்துகிறது, ஏனெனில் கடவுள் அவற்றுக்குப் பறக்க இறக்கைகளைக் கொடுத்துள்ளார்.*

*ராஜ் குமார் கபூர், RC ரூப் நகர் — D 3080*

*ஜூலை இதழ் கிடைத்தவுடன், நான் எப்போதும் செய்வது போல், முதலில் ஆசிரியர் குறிப்பைப் படித்தேன். ரஷீதா அறப்பணிகளின் பெருமை, வாழ்க்கை குறுகியது, மற்றும் ஈகையின் முக்கியத்துவம் குறித்து உண்மையைப் பேசுகிறார். நாம் வாழ்க்கையில் சம்பாதித்த பணத்தை சரியாகப் பயன்படுத்த வேண்டும் மற்றும் தாராள மனப்பான்மையுடன் இருக்க வேண்டும். இயக்குனர் M முருகானந்தம் மற்றும் அறங்காவலர் பரத் பாண்டியாவின் செய்திகள் விலைமதிப்பற்றவை மற்றும் ஊக்கமளிப்பவை.*

*மாயா மிகானி, RC ஹிங்கன்காட் — D 3030*

*ஜூன் மாத இதழில் வெளியான “போர் வெறி என்னும் மனநோய்” என்ற தலையங்கம் சுவாரஸ்யமாக இருந்தாலும், சேவை சார்ந்த இந்த இதழில் அது பொருத்தமற்றதாக உணர்ந்தேன். ரோட்டரி நியூஸ் தனிநபர்கள் மற்றும் சங்கங்கள் செய்யும் சேவை மற்றும் மனிதாபிமான பணிகளை மட்டுமே முன்னிலைப்படுத்த வேண்டும்.*

*H R சீத்தாராம், RC பெங்களூரு இந்திராநகர் — D 3192*

### நன்றி, ரோட்டரி நியூஸ்!

ஜூலை மாத இதழில் எங்களது இரண்டு முக்கிய சமூகப் பொறுப்புணர்வு முயற்சிகளான ரோட்டரி கி பாட்ஷாலா மற்றும் மாவட்ட அளவிலான நீரிழிவு நோய் விழிப்புணர்வு திட்டம் குறித்த அற்புதமான மற்றும் விரிவான கவரேஜுக்கு, RID 3132 சார்பாக எங்களது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். உங்கள் சிந்தனைமிக்க வெளியீடும், ஐந்து பக்க சிறப்புப் பகுதியும் எங்களை பெருமைப்படுத்துவதுடன், RID 3132க்கு ரோட்டரி உலகம் முழுவதும் மிகப்பெரிய அங்கீகாரத்தை அளித்துள்ளது.

IPDG சுரேஷ் சாபூ மற்றும்
DGE ஜெயேஷ் படேல் — D 3132

எங்கள் சங்கத்தின் திட்டங்களான ஆம்புலன்ஸ் சேவை மற்றும் பிரணமா இறுதிச் சடங்கு மேலாண்மை ஆகியவை ஜூலை மாத இதழில் இடம்பெற்றதைக் கண்டு மகிழ்ச்சி யடைந்தோம். உங்கள் உதவிக்கும் ஆதரவிற்கும் நன்றி.

ஆபிரகாம் வர்கீஸ்
RC கோழஞ்சேரி — D 3211

### டப்பா போராட்டம்

TCA சீனிவாச ராகவன் தனது LBW பத்தியில் (ஜூலை) டப்பாக்களை (மதிய உணவுப் பெட்டிகள் மற்றும் பாத்திரங்கள்) திரும்பத் தரும் விஷயத்தில் பெண்கள் காட்டும்

தீவிரத்தைப் பற்றி விவரிப்பது முற்றிலும் சரியானது. நண்பர்களுடன் விருந்தின் போது, எங்கள் மனைவிகள் நாங்கள் எடுத்துச் செல்லும் ஒவ்வொரு கிண்ணம், தட்டு மற்றும் கரண்டியும் கழுவி, துடைக்கப்பட்டு, பளபளப்புடன் மீண்டும் கொண்டு வரப்படுவதை உறுதிசெய்கிறார்கள்.

இது அண்டை வீட்டாருக்கும் பொருந்தும். வேலியின் அக்கரையிலிருந்து உணவு வந்தால், அந்த பாத்திரம் ஒருபோதும் காலியாகத் திரும்பப் பெறப்படாது. சில இனிப்புகள், ஒரு சிற்றுண்டி, அல்லது குறைந்தபட்சம், உலர் பழங்கள் அதில் திரும்பிச் செல்ல வேண்டும். இது வெறும் மரியாதை மட்டுமல்ல, பாரம்பரியம், இராஜதந்திரம், மற்றும் நல்லெண்ணப் பரிமாற்றம் ஆகியவை ஒன்றிணைந்தது. நடுத்தர வர்க்க நாகரிகத்தின் எழுதப்படாத விதிகள் உண்மையில் கவர்ச்சியானவை. டப்பா என்பது ஒரு கொள்கலன் மட்டுமல்ல - அது நல்லெண்ணம், பரஸ்பர மரியாதை மற்றும் ஒரு பேசப்படாத சமூக உணர்வின் ஒரு பாத்திரமாகும்.

அமித் கோயல், RC டெல்லி
சவுத் எண்ட் — D 3011

**ரோட்டரி அல்லாத உள்ளடக்கத்தைப் பாராட்டுகிறோம்**

ரோட்டரி நியூஸ் பல்வேறு ஆர்வமுள்ள துறைகளைத் தொழில்ரீதியான விளக்கத்துடன் ஆராயும் ஒரு இதழாக படிப்படியாக மாறிவருவதைப் பார்ப்பது மகிழ்ச்சியளிக்கிறது. சீனிவாச ராகவனின் LBW பத்தி மற்றும் சந்தியா ராவின் வேர்ட்ஸ்வொர்ல்ட் போன்ற சில வித்தியாசமான கட்டுரைகளை நான் எப்போதும் எதிர்பார்க்கிறேன். ப்ரீத்தி மேஹ்ராவின் சுற்றுச்சூழல் குறித்த கட்டுரைகளும், உடல்நலம் மற்றும் ஊட்டச்சத்து குறித்த கட்டுரைகளும் வரவேற்கத்தக்க அம்சங்களாகும்.

உறுப்பினர் விவரங்கள் மற்றும் TRF பங்களிப்பு தொடர்பாக, இந்தியாவின் வரைபடத்தில் மண்டலங்களுடன் RI மாவட்டங்களின் புவியியல் பரவலைச் சேர்ப்பது அனைத்து ரோட்டேரியர்களுக்கும், குறிப்பாக புதிய உறுப்பினர்களுக்கும் மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இது ஒரு பரிந்துரை.

பித்யுத் B சென், RC பம்பாய்
ஏர்போர்ட் — D 3141

*உங்கள் பரிந்துரைக்கு நன்றி. இந்த இதழில் அது செயல்படுத்தப்பட்டுள்ளது.*
***ஆசிரியர்***

ஜூலை இதழின் அட்டைப்படம், குருகுலப் பின்னணியில் அமைந்த ஒரு அற்புதமான காட்சியாகும். இது மரபுகளை சமரசம் செய்யாமல் நவீன கல்வி முறைகளைப் பின்பற்றுவதன் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுகிறது. திறந்த வகுப்பறைகள் திறந்த மனதை உருவாக்குகின்றன. இதை வடிவமைத்தவர் நிறைய பாராட்டுகளைப் பெறத் தகுதியானவர்.

சந்தியா ராவின் வாசிப்பு பற்றிய கட்டுரைகள், ப்ரீத்தி மேஹ்ராவின் சுற்றுச்சூழல் பற்றிய கட்டுரைகள், மற்றும் சீனிவாச ராகவனின் LBW ஆகியவை ஒவ்வொரு இதழுக்கும் ஒரு புத்துணர்ச்சியைக் கொடுக்கின்றன.

K ரவீந்திரகுமார், RC கரூர் — D 3000

ஜூன் மாத இதழில் போஷ் உதவியுடன் வங்காளத்தில் கிராமப்புற இளைஞர்களுக்கு அதிகாரம் அளிப்பது போன்ற மிகவும் சுவாரஸ்யமான கட்டுரைகளைக் கண்டேன். RC கல்கத்தா பிரசிடென்சி மேற்கொண்ட நடவடிக்கைகள் குறிப்பிடத்தக்கவை.

சிறப்பு குழந்தைகளுக்கான மாரத்தான் RC கல்கத்தா மகாநகர் மேற்கொண்ட மற்றொரு அற்புதமான நடவடிக்கையாகும்.

அஜித் C ஷா, ரோட்டேரியர்
அல்லாதவர், அகமதாபாத்

தனது கடைசி செய்தியில், RI தலைவர் ஸ்டெபனி அர்ச்சிக், உலகளாவிய தனிமை நெருக்கடிக்கு மத்தியில் ரோட்டரி நட்பு, நோக்கம் மற்றும் சொந்தம் என்ற உணர்வை வழங்குகிறது என்று கூறுகிறார். ஆசிரியர் குறிப்பில், ரஷீதா பகத், பெரிய IMF கடன் பாகிஸ்தானை போர் நிறுத்தத்திற்கு ஒப்புக்கொள்ள கட்டாயப்படுத்தியிருக்கலாம் என்று கூறுகிறார். அது உண்மையாக இருக்கலாம். இருப்பினும், பாகிஸ்தான் விமான தளங்கள் முற்றிலுமாக அழிக்கப்பட்டு, அணுசக்தி வசதிகளும் சேதமடைந்திருக்கலாம். இதுவும் போர் நிறுத்தத்திற்கான அவர்களின் அவசரத்திற்கு மற்றொரு காரணமாக இருக்கலாம். சமூக தொடர்பு மற்றும் பிற நேர்மறையான நடவடிக்கைகள் மூலம் குணப்படுத்துவதற்கு அழைப்பு விடுக்கும் PRID அசோக் மஹாஜான் எழுதிய கடிதம் மிகவும் பொருத்தமானது,

K M K மூர்த்தி
RC செகந்திராபாத் — D 3150

ஜூன் மாத இதழில் வெளிவந்த கிராமப்புற ஜார்க்கண்டில் கண் பராமரிப்பு பற்றிய ஊக்கமளிக்கும் கட்டுரைக்கு நன்றி. ரோட்டரியின் உலகளாவிய மானியத் திட்டத்தின் தாக்கத்தை இக்கட்டுரை அழகாகப் படம்பிடித்துள்ளது. சமூகத்தில் உள்ள நண்பர்களுடன் இந்த இதழைப் பகிர்ந்துள்ளேன், அவர்கள் அனைவரும் ரோட்டரியின் சிறந்த பணியைப் பாராட்டியுள்ளனர். சிலர் ரோட்டரியில் சேரவும் ஆர்வமாக உள்ளனர்.

மதுமிதா சாந்த்ரா
RC ஜாம்ஷெட்பூர் — D 3250

**அட்டையில்:** கொடைக்கானல், வாலைகிரி கிராமத்தில் RC கொடைக்கானலின் வீட்டு வசதித்திட்டத்திலிருந்து ஒரு புதிய வீட்டைப் பெற்றதில் மல்லிகா மகிழ்ச்சியில் துள்ளிக் குதிக்கிறார்.
**படம்:** ரஷீதா பகத்

தங்கள் கருத்துக்கள் வரவேற்கப் படுகின்றன. மேலும் உங்கள் சங்கத்தின் நலத்திட்டங்கள் புகைப்படங்களுடன் rushbhagat@gmail.com அல்லது rotarynewsmagazine@gmail.com என்ற மின்னஞ்சலிற்கு அனுப்பலாம். WHATSAPP செய்திகள் ஏற்றுக் கொள்ளபடமாட்டாது.



# இந்த மாதமும் ஒவ்வொரு மாதமும்

ஆகஸ்ட், உறுப்பினர் மாதம். ஆனால், வளர்ச்சி, இணைப்புக்கான நம் உறுதிப்பாடு ஆண்டு முழுவதும் தொடரும். நாம் ரோட்டரியை வளர்ப்பதில் கவனம் செலுத்தும்போது, நாம் சேவை செய்கிற, வழிநடத்துகிற, நீடித்த மாற்றத்தைக் கொண்டுவருகிற நம் திறனை வளர்க்கிறோம்.

உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி என்பது வெறும் எண்ணைப்பற்றியது இல்லை. அது, திறக்கப்படும் கதவுகளைப்பற்றியது. அது, தங்களைவிடப் பெரிய ஒரு காரணத்துக்காகத் தங்கள் நேரம், திறமைகள், இதயங்களைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிற இன்னும் பலரை அழைப்பதைப்பற்றியது. நாம் புதிய உறுப்பினர்களை வரவேற்கும்போது, நாம் புதிய யோசனைகள், புது ஆற்றலை உள்ளே கொண்டு வருகிறோம். நாம் நம் தாக்கத்தை விரிவாக்குகிறோம், நம் சங்கங்களை வலுவாக்குகிறோம், ரோட்டரி நம்மைச் சுற்றியுள்ள உலகில் தொடர்ந்து வளர்வதை உறுதிப்படுத்துகிறோம்.

நினைவிருக்கட்டும், இப்போது வழக்கத்துக்கு மாறான சங்க மாதிரிகளை உருவாக்குவதில் இன்னும் கூடுதல் நெகிழ்வுத்தன்மை உள்ளது. இந்தப் புதுமையான சங்கங்கள் புதிய, சாத்தியமுள்ள உறுப்பினர்களுக்கு இணையவும் சேவை புரியவும் பல வழிகளைக் கொடுத்து வளர்வதைப் பார்க்கும் போது நான் ஊக்கம் பெறுகிறேன்.

கொரியாவில், செயற்கைக்கோள் சங்கங்களின் வளர்ச்சியால் கிட்டத்தட்ட 1,000 புதிய உறுப்பினர்கள் ரோட்டரியில் தங்கள் இடத்தைக் கண்டறிய வாய்ப்புகள் உருவாகியுள்ளன. ரொமானியாவில், ரோட்டரியன்கள், ரோட்டராக்டர்கள், இன்டராக்டர்கள் நெருங்கிப் பணி புரிவதால், வருங்காலத் தலைவர்களின் வரிசை ஒன்று உருவாகியுள்ளது. இந்தியாவில், சில ரோட்டரியன்கள் பகிர்ந்துகொள்ளப்பட்ட ஓர் ஆர்வத்தைச் சுற்றி ஒன்று சேர்கிறார்கள். எடுத்துக்காட்டாக, தொழில் வளர்ச்சி அல்லது சேவைக்கான பேரார்வம். இந்த இணைப்புகள் அவர்களுடைய உறுதிப்பாட்டை, ரோட்டரியின் பகுதியாக இருக்கிற மகிழ்ச்சியை ஆழமாக்குகின்றன. தென்கிழக்கு ஆசியா, ஆப்பிரிக்கா, ஐரோப்பா போன்ற பலதரப்பட்ட பகுதிகளில் காரண அடிப்படையிலான சங்கங்கள் செழித்து வளர்வதை நாம் பார்த்துள்ளோம்.

இவை அனைத்துக்கும் பொது இழை: சங்கங்கள் வளரும் போது, உறுப்பினர் எண்ணிக்கை முதன்மையாகிறது, புதிதாக எதையேனும் முயல்வதற்கு விருப்பம் வருகிறது. ரோட்டரி என்பது ஒரு கட்டமைப்பு அல்லது பண்பாட்டுடன் நின்றுவிடுவதில்லை. நாம் செயல் வீரர்களுடைய பன்னாட்டு வலைப்பின்னல். இதன் பொருள், பல வகைச் சங்கங்கள், சேவை புரியப் பல வழிகள், நம் அமைப்பில் பல பாதைகளுக்கு இடம் உண்டு.

இந்தப் புதுமைச் சிந்தனை எண்ணம் புதிய சமூகங்களை எட்டும் நம் முயற்சிகளையும் வழி நடத்துகிறது. இதுவரை ரோட்டரி சங்கம் தொடங்கப் படாத இடங்கள், அல்லது, முன்பு ஒரு சங்கம் இருந்து நின்றுபோன இடங்களில் ரோட்டரியன்கள் ரோட்டரியை வளர்க்க வழிகளைக் கண்டறிகிறார்கள். அவர்கள் சாத்தியமுள்ள பகுதிகளை அடையாளம் காண்கிறார்கள், தங்கள் சமூகங்களின் ஆளுமை, தேவைகளைப் பிரதிபலிக்கும் சங்கங்களைக் கட்டமைக்கிறார்கள்.

இந்தப் பயணத்தில் ஒவ்வோர் உறுப்பினரும் பங்களிக்கிறார். நீங்கள் உங்கள் சங்கத்துக்கு ஒரு நண்பரை அறிமுகப்படுத்தலாம், ஒரு புதிய சந்திப்பு வடிவத்தை ஆதரிக்கலாம், திட்டத்தின் முன்னாள் உறுப்பினர் ஒருவருடன் மீண்டும் இணைந்து பேசலாம், அல்லது, உங்கள் ரோட்டரிக் கதையைப் பகிர்ந்துகொள்ளலாம்... இவற்றின்மூலம் நம் அமைப்பு இன்னும் வலுவாக, இன்னும் துடிப்பாக வளர நீங்கள் உதவுகிறீர்கள்.

ரோட்டரி சங்கத்துக்கு உரிமையாளர் யாருமில்லை. அது, நாம் நம் அடுத்த தலைமுறைக்குக் கொடுக்கும் பரிசு. நாம் அந்தப் பரிசை வளர்த்தால், அதில் பகிர்ந்து கொள்ளும்படி பிறரை அழைக்கும் போது, ரோட்டரி நல்லதற்கான ஓர் ஆற்றலாகத் தொடர்வதை நாம் உறுதி செய்கிறோம்.

நாம் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சியை முதன்மையாகக் கருதுவோம் – ஆகஸ்டில் மட்டுமில்லை, ஆண்டின் ஒவ்வொரு மாதத்திலும். நாம் ஒன்றாகச் சேர்ந்து, நட்பு, படைப்புணர்வு, பகிர்ந்துகொள்ளப்பட்ட நோக்கத்தின் வழியாக ரோட்டரியை வளர்ப்போம், நல்லதற்காக ஒருங்கிணைவோம்.

**ஃப்ரான்ஸஸ்கோ அரேசோ**
தலைவர், ரோட்டரி இன்டர்நேஷனல்



# தலைமைத்துவம்: சவால்களா அல்லது வாய்ப்புகளா?

ஒரு குடும்பத்துக்குள் நடக்கும் சாதாரண வளர்ச்சி ஆனாலும் சரி நண்பர்களால் திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்வோ அல்லது கொண்டாட்டமாக இருந்தாலும் அல்லது பொது அரங்கில் அவசர நிகழ்வாக இருந்தாலும் சரி ஒரு தனி நபர் எப்படி இவ்வளவு சீக்கிரம் முன்னேறுகிறார், பொறுப்பேற்கிறார் மற்றும் மாற்றத்தை ஏற்படுத்தும் முக்கியமான முடிவுகளை விரைந்து எடுக்கிறார் என்பதை நாம் அனுபவபூர்மாக பார்த்திருக்கிறோம். ஒரு நிறுவனம் சிறியதாகவோ அல்லது பெரியதாகவோ இருந்தாலும் அந்த நபர் எப்படி மாறாமல் தலைவராக இருக்கிறார். எனது 47 ஆண்டுக்கால பத்திரிகை துறை வாழ்க்கையில், அரசியல், வர்த்தகம், தொழில், விளையாட்டு, அறிவியல், கல்வி, வங்கி மற்றும் நிதித்துறை, பொழுதுபோக்கு, மருத்துவம், சட்டத்துறையில் உள்ளவர்கள் என 200-க்கும் மேலானவர்களை நான் பேட்டி கண்டுள்ளேன்.

அவர்களில் பெரும்பாலானவர்களிடம் நான் கேட்கும் ஒரு கேள்வி தலைமைத்துவம் என்றால் என்ன என்பதுதான். எல்லாவற்றுக்கும் மேலாக அவர்கள் உச்சத்தை அடைந்துவிட்டார்கள். எனவே, ஒரு நல்ல தலைவராவதற்கான தகுதி என்ன என்பது பற்றி அவர்கள் கருத்து என்ன? அவர்கள் சொன்ன பதில் அவர்களும் மனிதர்கள்தான் என்பதை வரையறுத்துள்ளன. ஒரு தலைமைப் பதவி எப்போதும் அதிகாரத்தையும் கொண்டு வருகிறது. அந்த நபர் எப்படி அதிகாரத்தை கையாள்கிறார். அவர், மற்றவர்களிடம் எப்படி நடந்து கொள்கிறார்? கனிவாக அல்லது கர்வமாக அல்லது கருணையுடன் அல்லது பணிவாக நடந்து கொள்கிறாரா என்பதை வைத்து அவர் வெற்றிப்பாதையில் செல்கிறாரா, அல்லது அழிவை நோக்கிச் செல்கிறாரா என்று பார்த்து அந்த நிறுவனம் அவர் மீது முடிவெடுக்கும். சமீபத்தில் தலைமைத்துவ பண்பு தொடர்பான ஒரு செய்தியை நான் படித்தபோது, அதில் அந்த நபர், கடினமான அல்லது தந்திரமான சூழ்நிலைகளை எப்படி எதிர்கொள்வது என்பது பற்றி விவரித்திருந்தார். நீங்கள் தலைமைப் பதவியில் இருந்தபோது பல்வேறு சவால்களை எப்படி சந்தித்தீர்கள் என்று கேட்டதற்கு, "அதுபோன்ற சூழ்நிலைகளை நான் சவால்களாகவே கருதவில்லை, அவற்றை சாதிப்பதற்காக எனக்கு கிடைத்த அதிர்ஷ்ட வாய்ப்புகளாகவே கருதினேன்" என கூறியுள்ளார். அவரது இந்த பதில் என்னை சிந்திக்கவைத்தது. சவால் என்பது அச்சுறுத்தலாகவோ அல்லது பயமுறுத்தலாகவோ இருக்கலாம். ஆனால், வாய்ப்பு என்பது மிகவும் நேர்மறையானதாகவும், மறக்கமுடியாத இலக்கை அடைவதற்கான வழியாகவும் இருக்கலாம்.

நிச்சயமாக எல்லாவகையான தலைவர்களும் இருக்கிறார்கள். ஆனால், உண்மையிலேயே தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியவர்கள்தான் வாய்ப்பை பயன்படுத்தி பலரின் வாழ்க்கையில் மாற்றத்தை ஏற்படுத்தும் புதுமையைச் செய்கிறார்கள். இவர்கள்தான் பொறுப்பும் சமூக உணர்வும் கொண்ட தலைவர்கள். வளமான வாழ்க்கைக்கு வழிவகுக்கும் நகை வடிவமைப்பாளர் தொழிலை விட்டுவிட்டு சுற்றுச்சூழல் பாதுகாப்பான பயோ டாய்லெட் (உயிரி கழிப்பறை) அமைப்பதில் ஆர்வம் காட்டி வரும் துணிச்சலான பெண் நமிதா பங்காதான் இப்போது என் நினைவுக்கு வருகிறார். ரயில் பயணிகள் மூலம் வெளியேறும் மனிதக் கழிவுகள் இருப்புப் பாதைகளில் அரிமானத்தை ஏற்படுத்துவதால் பெரும் பிரச்னையை எதிர்கொண்ட இந்தியன் ரயில்வே, முதன் முதலாக பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டுக் கழகத்துடன் (DRDO) இணைந்து , வடிவமைக்கப்பட்டு தயாரிக்கப்பட்ட பயோ டாய்லெட்டுகளை பயன்படுத்தத் தொடங்கியது. ஆனால், இந்த மிகப்பெரிய நிறுவனத்துக்கு பயோ டாய்லெட்டுகளை தயாரிக்க இணைந்து செயல்பட அதிக உற்பத்தியாளர்கள் தேவைப்பட்டனர். 2012-ம் ஆண்டில் நமிதா, புதுமையான சுகாதாரத் தீர்வுகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட நிறுவனமாக பங்கா பயோலுவை (Banka Bioloo) நிறுவினார். மேலும் இந்தியன் ரயில்வே தவிர, தொலைதூரம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் எங்கெல்லாம் தேவையோ அங்கெல்லாம் சுற்றுச்சூழல் பாதுகாப்பான பயோ டாய்லெட்களை அமைப்பதற்காக கடுமையாக உழைத்து வருகிறார். சுற்றுச்சூழல் கல்வி பின்னணியுடன், ஒவ்வொருவரும் சுத்தமான மற்றும் நீடித்திருக்கும் கழிப்பறையைப் பெற தகுதியானவர்கள் என அவர் உறுதியாக நம்புகிறார்.

மீண்டும் தலைமைப்பதவி விஷயத்துக்கு வருவோம். ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவர் பதவிக்கு புதிய தலைவர் வந்திருக்கிறார். அவர் பிரான்சிஸ்கோ அரெஸ்ஸோ. மரியோ டீ காமர்கோவின் திடீர் ராஜினாமாவால் அவருக்கு குறுகியகாலமே கிடைத்திருந்தாலும், அன்பான தலைவரான அவர், ரோட்டரியை ஆர்வத்துடனும், அர்ப்பணிப்புடனும், திறமையுடனும் வழிநடத்துவதற்கான சமிக்ஞைகளை அனுப்பி வருகிறார். அவர் சிறப்பாக செயல்பட நமது வாழ்த்துகள்.



ரஷீதா பகத்

ADVT.





Rotary
District 3212




UNITE FOR GOOD



PROJECT
# FOCUS

Goal Setting / Effective Public Speaking

Project Focus is a pioneering project of Rotary Club of Virudhunagar (RID 3212), which aims at helping the school and college students, the former to achieve their goals and the latter to overcome their fear of public speaking.

## Goal Setting

### For School Students

Size : Min 50 Students - Max 500 Students
Duration : 2 Hours
Medium of Training : Tamil & English
Audience : Government, Government Aided and Private school students

Program that guides the school Children to fix their goals and focus on them to taste success and contentment in their lives. Through this initiative, students will have the opportunity to develop action plans and work towards realizing their dreams. Through mentorship, educational resources, and other forms of support, this transformative initiative is dedicated to helping students achieve their full potential.

As on July 15, 2025

No. of. Programs
**120**

No. of. Beneficiaries
**12,385**

## Effective Public Speaking

### For College Students

Size : Min 40 Students - Max 60 Students
Duration : 6 Hours
Medium of Training : Tamil & English
Audience : Government and Private College Students

This programme empowers the youth to come out of their fear, hesitation and anxiety in public speaking. It emphasizes the importance of effective communication skills in their personal, professional and family life. It regulates their pattern of speaking, delivery skills, presentation tactics and content drafting. It helps the students to voice out their ideas, opinions and wishes in front of others, enabling them to compete with large audience. Overall, it equips the college students to crack their placement interviews with confidence.

LEKHA ads/Aug 25/ Rotary/Inner

IDHAYAM
PROMISE OF HEALTH AND HAPPINESS

Do you want to conduct
" **Project Focus** "
in your Town/City/District?
We are waiting to partner with you.



Project Chairman
**Rtn.M.A.P.R. Rengasamy**
JCI Area Trainer
99444 11961

# RI இயக்குனர் செய்தி



# நன்மைக்காக ஒன்றுபடுங்கள் – செயல்பட அழைப்பு

அன்புள்ள ரோட்டேரியன்களே,

இந்த புதிய அத்தியாயத்தை ஒன்றாகத் தொடங்கும்போது ஒற்றுமையின் சக்தியையும், உலகிற்கு நன்மை செய்வதற்காக நம்மை இணைக்கும் நோக்கத்தை ஏற்றுக் கொள்வோம். "நன்மைக்காக ஒன்றுபடுங்கள்" என்ற தலைவரின் செய்தி வெற்று முழக்கம் அல்ல. இது கூட்டுறவு, இரக்கம் மற்றும் கூட்டுத்தாக்கத்திற்கான துணிச்சலான அழைப்பு.

சங்கங்கள் இணைந்து செயல்படும்போதும், நமது அமைப்புக்கு வெளியே கூட்டாளர்களுடன் உறவு வளர்க்கும்போதும் ரோட்டரி செழித்து வளர்கிறது. கூட்டாண்மை நமது முயற்சிகளை வலுப்படுத்துகிறது, சேவையை ஆழப்படுத்துகிறது, மேலும் நமது சேவையை விரும்பும் சமூகத்திற்கு நமது அணுகலை விரிவு படுத்துகிறது. மாவட்டங்களுக்கும் எல்லைகளுக்கு அப்பாலும் கூட்டாற்றலை வளர்ப்போம். மனதளவில் மட்டு மல்ல செயலிலும் ஒன்றிணைவோம்.

உறுப்பினர்கள்தான் நமது பலம். இந்த ஆண்டு செப்டம்பர் 30-ம் தேதிக்குள் ஒவ்வொரு மாவட்டமும் 10 ரோட்டரி சங்கங்கள், 20 ரோட்ராக்ட் சங்கங்கள் மற்றும் 30 இன்டராக்ட் சங்கங்கள் என்ற நிகர சேர்க்கையை அடைய வேண்டும், அதாவது 10:20:30 என்ற நிகர இலக்கோடு நமது மாவட்டங்களை மீண்டும் உற்சாகப்படுத்த வேண்டிய நேரம் இது. ஆனால், எண்கள் மட்டும் நம்மை முன்னோக்கி நகர்த்தாது. அனுபவங்கள் மூலம் இது சாத்தியம். அர்த்தமுள்ள உறுப்பினர் ஈடுபாடு, தலைமைத்துவ மேம்பாடு மற்றும் மதிப்பிருக்கிறது, ஊக்கமும் இருக்கிறது என்று உறுப்பினர்கள் உணரும் வகையிலான ரோட்டரியை உருவாக்குவதில் கவனம் செலுத்துவோம்.

ரோட்டரி அறக்கட்டளை தாக்கத்தை ஏற்படுத்தும் இயந்திரமாகச் செயல்படுகிறது. சுத்தமான குடிநீர், நோய்த் தடுப்பு அல்லது கல்வி மூலம் வாழ்க்கையில் மாற்றம் ஏற்படுத்தும் அதன் சக்திக்கு இணை ஏதும் இல்லை. ஒவ்வொரு சங்கமும் TRF-க்கான தங்கள் உறுதிப்பாட்டை புதுப்பிக்க வேண்டும். ஒவ்வொரு பங்களிப்பும் முக்கியமானது. ஒவ்வொரு டாலரும் ஒரு கனவை நனவாக்க உதவுகிறது.

ஈடுபாட்டை கண்காணிக்கவும், புதிய உறுப்பினர்களை ஆதரிக்கவும், கூட்டு சேவைத் திட்டங்களுக்கு நிதியளிக்கவும் நாங்கள் முயற்சிகளைத் தொடங்குகிறோம். இது ரோட்டரியின் இதயம் மற்றும் மக்களுடன் நமது நோக்கத்துக்காக இணைந்திருக்க உதவும். கார்ப்பொரேட் கூட்டாளர்களுடன் நமது பணியை அங்கீகரித்து விரிவு படுத்தும் நோக்கில் ஒவ்வொரு மண்டலத்திலும் பிராந்திய CSR. விருதுகளை அறிமுகப்படுத்தியுள்ளோம். இது இந்த ஆண்டு நவம்பர் 13-ம் தேதி புதுதில்லியில் நடைபெற உள்ள **தேசிய CSR மாநாட்டில்** எதிரொலிக்கும். புதிய திட்டமிடலுடன்கூடிய நன்கொடை மற்றும் சேவை மூலம் சமூகங்களை எவ்வாறு மறுவடிவமைக்க முடியும் என்பதை வெளிப்படுத்த ரோட்டரிக்கு இது ஒரு நல்வாய்ப்பாகும்.

தாங்கள் செய்யும் எல்லா வேலைகளிலும் நன்மைக்காக ஒன்றுபடுகிறோம் என்கிற தகவலை சங்கங்கள் வெளிப் படுத்த வேண்டும். உங்கள் நிகழ்வுகளை ஊக்குவிக்கவும், உங்கள் கூட்டங்களை உற்சாகப்படுத்தவும், உங்கள் கதைகளை வலுப்படுத்தவும் இதை பயன்படுத்தலாம்.

இந்த ஆண்டு நாம் பயணிக்கும்போது, நமது முக்கிய விழுமியங்களான சேவை, தலைமைத்துவம், பன்முகத்தன்மை, ஒருமைப்பாடு மற்றும் சகோதரத்துவம் ஆகியவற்றை பின்பற்ற மீண்டும் உறுதியேற்போம். அவை வெறும் இலட்சியங்கள் அல்ல, நாம் செய்யும் அனைத்திற்கும் அடித்தளமாகும். நன்மைக்காக நாம் ஒன்று படுவோம். வலுவாக வளரவும், சேவையை கடமையாகச் செய்யவும், உலகில் அழியாத முத்திரையை பதிக்கவும் ஒன்றுபட்டு செயல்படுவோம்.

**KP நாகேஷ்**
RI இயக்குநர், 2025–27



# மிக எளிதான விடுமுறைத்திட்டம்!

ரோட்டரி உறுப்பினர்கள் துணிகரச் செயல்களில் ஆர்வம் காட்டுகிறவர்கள். அவர்கள் ஆண்டு மாநாட்டை அது நடக்கும் நகரத்தின், சுற்றுப்புறத்தின் காட்சிகள், பண்பாட்டை ஆராய்கிற ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்வார்கள். பல நேரங்களில் RI நண்பர்கள் ஒரு குழுவாகச் சேர்ந்து இவற்றை ஆராய்வார்கள். நீங்கள் ரோட்டரி இன்டர்நேஷனல் மாநாட்டுக்காக ஜூன் 13 முதல் 17 வரை தாய்பெய்-க்கு வரும்போது, உங்களுக்குப் பல சுற்றுலா வாய்ப்புகள் கிடைக்கும். அவற்றில் பல, நிகழ் விடத்துக்கு மிக அருகில் இருக்கும்.

இந்த நகரின் அருகில் பல மலைகள் உள்ளன. கண்காட்சி மையத்திலிருந்து சற்றுத்தொலைவில், தாய்பெய் விலங்குக்காட்சியகத்துக்கு (இதனுள் பான்டாக்கள், உள்ளூர் செதில் பான்கோலின்களைக் காணலாம்) அருகில் மவோகாங் கொன்டொலா-வில் ஏறிக்கொள்ளுங்கள் மலைமீது பயணம் செய்து, ஊலாங் தேநீர்ப் பண்ணைகளின் மலைப்பகுதிக் கூரைகளைக் கடந்து செல்லும் நெடு நடைப்பாதைகளை அடையுங்கள். அல்லது, ஒரு தேநீர்க் கடையில் நின்று டம்ப்ளிங்க்ஸ் உண்ணுங்கள், அருகில் வளர்ந்த செடிகளிலிருந்து போட்ட தேநீரை மெல்ல அருந்துங்கள்.

தாய்பெய் ஆராய்ச்சி உங்களை இரவுச் சந்தை உணவுக் கடைகளுக்கு, வெந்நீர் ஊற்றுகளுக்கு, பழங்காலப் புதையல்கள் அருங்காட்சியகத்துக்கு, இந்நகரின் வான் காட்சியில் கம்பீரமாக நிற்கும் தாய்பெய் 101 கோபுரத்தின் உச்சியில் உள்ள கண்காணிப்பு நிலையத்துக்கு அழைத்துச்செல்லலாம். அத்துடன், நீங்கள் தைவானில் பல நம்பிக்கைகள், நாட்டுப்புறத் தெய்வங்களின் பல்வேறுபட்ட ஆயிரக்கணக்கான கோயில்களைப் பார்க்கலாம்.

இந்த மாநாடு உங்கள் குடும்பத்தினர், நண்பர்களை வரவேற்கிறது. உலகை எப்படி மேம்படுத்துவது என்பதுபற்றி நாம் சிந்திக்கும் போது அதில் இன்னும் பலர் கலந்து கொள்வது இன்னும் மகிழ்ச்சி தான். பெரிய மேடை நிகழ்வுகள் பார்வையாளர்களை வியக்கவைத்து ஊக்கப்படுத்தும் கொண்டாட்டங்களாகும். இந்த ரோட்டரி பண்பாட்டு நிகழ்வுகளில் சில: கொடி விழா, நோபல் பரிசு வென்றோர் போன்ற உலகை மாற்றும் ஆளுமைகள், மறக்கமுடியாத பாடகர்கள், நடனமாடுவோர், பிற கலைஞர்களைப் பார்த்தல்.

எல்லாரும் விரும்பி ரசிக்கிற மாநாட்டுக் கண்காட்சிகளைச் சுற்றி உங்கள் பயணத் திட்டத்தை அமையுங்கள். தைவானின் ரோட்டரி ஏற்பாட்டாளர்கள் இந்தத் தீவை காண உதவும் தனித்துவமான அனுபவங்கள், சுற்றுலாக்களை வடிவமைப்பார்கள்.

மேலும் தெரிந்துகொள்ள, பதிவு செய்ய: convention.rotary.org

**ஆளுநர் குழு**

| | |
|---|---|
| RID 2981 | லியோன் J |
| RID 2982 | சிவசுந்தரம் P |
| RID 3000 | கார்த்திக் J |
| RID 3011 | ரவீந்தர் குக்னானி |
| RID 3012 | அமிதா அனில் மொஹிந்த்ரு |
| RID 3020 | கல்யாண் சக்ரவர்த்தி Y |
| RID 3030 | தியானேஷ்வர் P ஷேவாலே |
| RID 3040 | சுஷில் மல்ஹோத்ரா |
| RID 3053 | நிஷா ஷெகாவத் |
| RID 3055 | நிகம்குமார் L சௌத்ரி |
| RID 3056 | பிரக்யா மேத்தா |
| RID 3060 | அமர்தீப் சிங் புனெட் |
| RID 3070 | ரோஹித் ஓபராய் |
| RID 3080 | ரவி பிரகாஷ் |
| RID 3090 | பூபேஷ் மேத்தா |
| RID 3100 | நிதின்குமார் அகர்வால் |
| RID 3110 | ராஜன் வித்யார்த்தி |
| RID 3120 | அசுதோஷ் அகர்வால் |
| RID 3131 | சந்தோஷ் மதுகர் மராத்தே |
| RID 3132 | சுதீர் V லத்தூர் |
| RID 3141 | மணீஷ் மோத்வானி |
| RID 3142 | ஹர்ஷ் வீரேந்திர மகோல் |
| RID 3150 | ராம் பிரசாத் S V |
| RID 3160 | ரவீந்திரா M K |
| RID 3170 | அருண் டேனியல் பண்டாரே |
| RID 3181 | ராமகிருஷ்ண P கண்ணன் |
| RID 3182 | பலாக்ஷா K |
| RID 3191 | ஸ்ரீதர் B R |
| RID 3192 | எலிசபெத் செரியன் பரமேஷ் |
| RID 3203 | தனசேகர் B |
| RID 3204 | பிஜோஷ் மானுவல் |
| RID 3205 | ரமேஷ் G N |
| RID 3206 | செல்லா K ராகவேந்திரன் |
| RID 3211 | டினா ஆண்டனி குன்னும்கல் |
| RID 3212 | தினேஷ் பாபு J |
| RID 3231 | சுரேஷ் V |
| RID 3233 | தேவேந்திரன் D |
| RID 3234 | வினோத்குமார் சரோகி |
| RID 3240 | காமேஸ்வர் சிங் எலங்பம் |
| RID 3250 | நம்ரதா |
| RID 3261 | அமித் ஜெயஸ்வால் |
| RID 3262 | மனோஜ்குமார் திரிபாதி |
| RID 3291 | ரமேந்து ஹோம்சௌதுரி |

அச்சு மற்றும் பதிப்பாளர் **P T பிரபாகர்** (முகவரி: 15 சிவசாமி சாலை, மைலாப்பூர் சென்னை-4). துகார் டவர்ஸ், 3-வது தளம், 34, மார்ஷல்ஸ் ரோடு, எழும்பூர், சென்னை-600 008-யில் இயங்கும் ரோட்டரி நியூஸ் ட்ரஸ்ட் சார்பில் ராசி கிராபிக்ஸ் பி லிட், 40, பீட்டர்ஸ் ரோடு, ராயப்பேட்டை, சென்னை- 14 என்ற முகவரியில் அச்சிடப்படுகிறது. ஆசிரியர்: **ரஷீதா பகத்.**

கட்டுரைகளை திருத்தவோ/சுருக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு. இதழில் வெளியாகும் கட்டுரைகளை RNT அனுமதியுடன் மட்டும் மறுபதிப்பு செய்யலாம்.

Printed and published by PT Prabhakar, 15 Sivaswamy Street, Mylapore, Chennai 600004, on behalf of Rotary News Trust and printed at Rasi Graphics Pvt Ltd, 40, Peters Road, Royapettah,Chennai - 600 014, India, and published at Rotary News Trust, Dugar Towers, 3rd Floor, 34, Marshalls Road, Egmore, Chennai 600 008. Editor: Rasheeda Bhagat.

**அறங்காவலர் குழுவினர்**

| | |
|---|---|
| M முருகானந்தம் RI Director & Chairman, Rotary News Trust | RID 3000 |
| KP நாகேஷ் RI Director | RID 3191 |
| Dr பரத் பாண்ட்யா TRF Trustee | RID 3141 |
| ராஜேந்திர K சாபூ | RID 3080 |
| கல்யாண் பானர்ஜி | RID 3060 |
| சேகர் மேத்தா | RID 3291 |
| அசோக் மகாஜன் | RID 3141 |
| P T பிரபாகர் | RID 3234 |
| Dr மனோஜ் D தேசாய் | RID 3060 |
| C பாஸ்கர் | RID 3000 |
| கமல் சங்வி | RID 3250 |
| Dr மகேஷ் கோட்பாகி | RID 3131 |
| A S வெங்கடேஷ் | RID 3234 |
| ராஜு சுப்ரமணியன் | RID 3141 |
| அனிருதா ராய்சௌத்ரி | RID 3291 |
| குலாம் A வாஹனதி | RID 3141 |

**செயற்குழு உறுப்பினர்கள்** (2025–26)

ரோஹித் ஓபராய் RID 3070
தலைவர், ஆளுநர் குழு

தியானேஷ்வர் ஷேவாலே RID 3030
துணைத்தலைவர், ஆளுநர் குழு

M K ரவீந்திரா RID 3160
செயலாளர், ஆளுநர் குழு

செல்லா K ராகவேந்திரன் RID 3206
பொருளாளர், ஆளுநர் குழு

**ஆசிரியர்**
ரஷீதா பகத்

**துணை ஆசிரியர்**
ஜெய்ஸ்ரீ பத்மநாபன்

**நிர்வாகம் மற்றும் விளம்பர மேலாளர்**
K விஸ்வநாதன்

ரோட்டரி நியூஸ், துகார் டவர்ஸ்,
3-வது தளம், 34, மார்ஷல் சாலை,
எழும்பூர், சென்னை-8, இந்தியா
தொலைபேசி: 044 42145666
*rotarynews@rosaonline.org*
*www.rotarynewsonline.org*

Contributions are welcome but will be edited. Content can be reproduced with permission and attributed to RNT.

**TRF தலைவரிடமிருந்து...**



# எங்களைத் தெரிந்துகொள்ளுங்கள்

ரோட்டரியால் ஈர்க்கப்படும் மக்கள் தங்கள் சமூகங்கள் மீது ஆழமான அக்கறை கொண்டுள்ளார்கள், உறுதியான மாற்றத்தைக் கொண்டுவர விரும்பு கிறார்கள்.

புதிய உறுப்பினர்கள் ரோட்டரியில் நோக்கத்தைக் கண்டறியும் மகிழ்ச்சியான வழிகளில் ஒன்று, காரண அடிப்படை யிலான ரோட்டரி சங்கங்கள். அத்துடன், இந்தச் சங்கங்கள் நம் அறக்கட்டளைக்குப் புது ஆற்றல், செயலைக் கொண்டு வருகின்றன. அப்படிப்பட்ட ஒரு சங்கத்தின் தலைவரான மரிசோல் சியானெல்லோ-வைத் தன் பார்வையைப் பகிர்ந்துகொள்ளும்படி நான் அழைத்தேன்:

“லாபம் கருதாத வழக்கறிஞரான எனக்கு ரோட்டரியில் பங்கு வகிக்க நேரம் இருக்காது என்று நான் நெடுங்காலமாக நினைத்துக்கொண்டிருந்தேன். ஆனால், மன நலன் மற்றும் நலத்துக்கான மாவட்டம் 5280 ரோட்டரி சங்கம் என்கிற புதிய, காரண அடிப்படையிலான மின்சங்கத்தைப்பற்றிக் கேள்விப்பட்ட போது, அதில் பங்கு வகிக்கவேண்டும் என்று எனக்குத் தோன்றியது.

மூன்றே ஆண்டுகளில் எங்கள் சங்கம் தெற்குக் கலிஃபோர்னியாவில் மன நலத் தேவைகளை ஆதரிக்க நிறையச் செய்துள்ளது, இந்தத் துறையில் மாணவர்கள் பட்டம் பெறுவதற்காகப் பல்லாயிரக்கணக்கான டாலர்கள் கல்வி உதவித்தொகை வழங்கியுள்ளது. இந்த ஆண்டு உகாண்டாவிலிருந்து ஒரு மாணவர் இந்தக் கல்வி உதவித்தொகையைப் பெற்றுள்ளார்.

சில மாதங்களுக்கு முன்னால், நாங்கள் எங்களுடைய முதல் பன்னாட்டு நல்கைக்கு ஒப்புதல் பெற்றோம். இதன் மூலம் நாங்கள் தென்கிழக்குத் துருக்கியில் 2023 நிலநடுக்கத்தில் உயிர்பிழைத்தவர் களுக்கு நேரடி மற்றும் டிஜிட்டல் மன நல ஆதரவை வழங்கவுள்ளோம்.

எங்கள் சேவையின் வழியாக நாங்கள் அமெரிக்கா முழுவதிலுமிருந்து புதிய உறுப்பினர்களை ஈர்த்துள்ளோம். இதில் வேறு வழியில் ரோட்டரியில் இணைந்திருக்க வாய்ப்பில்லாத பெண்கள், இளைஞர்களும் உள்ளார்கள். எங்கள் சங்கத்தைப் போன்ற காரண அடிப்படையிலான சங்கங்கள் ஒரு குறிப்பிட்ட காரணத்தின் மீது பேரார்வம் கொண்ட மக்களுக்கு ஒரு பொருளுள்ள நுழைவுப் புள்ளியை வழங்குகின்றன.

ரோட்டரி சேவையும் அறக்கட்டளை ஆதரவும் சேரும்போது என்ன நடக்கக் கூடும் என்பதை மரிசோலின் கதை நமக்கு நினைவுபடுத்துகிறது.

நாம் புதிய ரோட்டரி மற்றும் ரோட்டராக்ட் சங்கங்களை அமைத்துப் புதிய உறுப்பினர்களை வரவேற்கும் போது, ரோட்டரி அறக்கட்டளையை முன்னிலையில் வைப்போம். இந்த அறக்கட்டளை உறுப்பினர் அனுபவத்தை வளமாக்குகிறது, சங்க வளர்ச்சியை ஆதரிக்கிறது, நம் தாக்கத்தை ஆழமாக்குகிறது.

ரோட்டரி அறக்கட்டளை என்பது வெறும் நிதி மூலம் மட்டுமில்லை; அது முடிவற்ற வாய்ப்புகளுக்கான ஓர் அழைப்பிதழ். அது, ரோட்டரியாக நாம் யார் என்பதன் வாழும் வெளிப்பாடு.

ஒவ்வோர் உறுப்பினரும் நம்முடன் சேரும் போது, அல்லது, ஒரு புதிய சங்கத்தைத் தொடங்கும் போது, அவருடைய அனுபவத்தின் முதன்மைப் பகுதியாக அறக்கட்டளையும் அமையலாம்.

**ஹோல்கர் நாக்**
TRF அறங்காவலர் தலைவர்



புகைப்படம் : ஸ்ரீதர் பாரதி

தொடக்க நிகழ்வில் கிராமத் தலைவர் மல்லிகா உரையாற்றுகிறார். சங்க உறுப்பினர் மீரா ராஜ்குமார் அவருக்குப் பின்னால் இருக்கிறார்.



# கொடைக்கானல் பழங்குடியினருக்கு வீடுகள்

ரஷீதா பகத்

மல்லிகா பற்றிய அனைத்தும் மகிழ்ச்சி, நம்பிக்கை மற்றும் நேர்மறையை வெளிப்படுத்துகின்றன. அதனால்தான், அவரது வயதைக் குறித்த எனது கேள்விக்கு அவர் மகிழ்ச்சியுடன் பதிலளிக்கும்போது, அவர் பகிர்ந்துகொண்டதைச் ஜீரணிப்பது சற்று கடினமாக இருந்தது. “மேடம், என் வயது என்னவென்று எனக்கு தெரியாது. கல்வி என்பதை மறந்துவிடுங்கள், நான் ஒரு பள்ளியின் உட்புறத்தை பார்த்ததே இல்லை... நிழலுக்காக கூட ஒரு பள்ளி கட்டிடத்திற்கு அருகில் நான் சென்றதில்லை.” என ஒரு பெரிய சிரிப்புடன் அவர் கூறுகிறார்:

இருப்பினும் மல்லிகா, கொடைக்கானலில் இருந்து சுமார் 30 கி.மீ தொலைவில் உள்ள வலையகிரி கிராமத்தில், ஒரு பாது காக்கப்பட்ட வனப்பகுதிக்கு அருகில் உள்ள ஒரு பழங்குடி குக்கிராமத்தின் தலைமைப் பொறுப்பை எளிதாக ஏற்றுக்கொண்டார். இங்கு, ஒரு ரோட்டேரியரின் ஆர்வம், தொலைநோக்கு மற்றும் அர்ப்பணிப்பால், மல்லிகா மற்றும் 13 பிற குடும்பங்கள் புத்தம் புதிய செங்கல் மற்றும் சிமென்ட் வீடுகளைப் பெற்றுள்ளன. ஜூன் இறுதி வரை, இந்த 14 குடும்பங்கள் இந்த சிறிய குக்கிராமத்தில், நான்கு மரக் கம்பங்களின் மீது நீல மற்றும் வெள்ளை தார்ப்பாய் தாள்கள் மற்றும் தகரங்களைக் கொண்டு உருவாக்கப்பட்ட வீடுகளில் வசித்து வந்தன.

இந்த லட்சிய திட்டத்தை ஒருவரே முன்னின்று நண்பர்கள் மற்றும் சில ரோட்டேரியர்களிடமிருந்து ரூ.70 லட்சம் திரட்டி செயல்படுத்தியவர் கொடைக்கானல் ரோட்டரி சங்கத்தின் (RID 3000) முன்னாள் தலைவர் ராஜ்குமார் ராமன். “இந்த பகுதியில் வசிக்கும் சில பழங்குடி குடும்பங்களுக்கு பயனளிக்கும் ஒரு சேவை திட்டத்தை எப்போதும் செய்ய விரும்பினேன். பழங்குடி மக்களுக்கு வீடுகளை வழங்கும் ஒரு திட்டத்தைப் பற்றிய யோசனை எனக்கு முதன்முதலில் 2022-ல் RID 3231 இன் PDG ஜவஹர்லால் ஜெயின் அவர்களால் ஏற்பட்டது, அவர் எங்கள் கார்ல்டன் ஹோட்டலுக்கு (ராஜ்குமார் பல ஆண்டுகளாக பணிபுரிந்து தற்போது அதன் துணைத் தலைவராக உள்ளார்) PETS மற்றும் SETS திட்டத்திற்காக அப்போது வந்திருந்தார். கொடுப்பதன் மகிழ்ச்சி பற்றி ஐந்து நிமிடங்கள் கூட்டத்தில் பேசும்படி அவர் என்னிடம் கேட்டார். ஏனென்றால், நான் சங்கத் தலைவராக இருந்த ஆண்டில் 300க்கும் மேற்பட்ட திட்டங்களைச் செய்திருந்தேன்.”

மாலை நேரத்தில், ஜெயின் ஒரு உரையாடலில், ராஜ்குமார் தலைவராக இருந்த ஆண்டில் செய்த பணிகளைப் பாராட்டினார், மேலும் “50 வீடுகளைக் கட்டக்கூடிய சில பழங்குடி கிராமங்களைப் பார்க்க முடியுமா என்று என்னிடம் கேட்டார். ஒரு வீட்டின் செலவை 2 லட்சம் ரூபாய் என்று நாங்கள் மதிப்பிட்டோம்.”

இது ராஜ்குமார் RID 3000-ன் உதவி ஆளுநராக இருந்த காலமும் கூட. உற்சாகமடைந்த அந்த ரோட்டேரியர் உடனடியாக ஆய்வுப் பணிகளைத் தொடங்கி, அத்தகைய ஒரு குக்கிராமத்தை அடையாளம் காண அவருக்கு உதவ உள்ளூர்

RDO (வருவாய் கோட்ட அலுவலர்) முருகேசனை உடன் சேர்த்தார். பின்னர், ஜெயின் ஒரு வீட்டிற்கான 2 லட்சம் ரூபாய் கொடுத்தார். ஆனால் ராஜ்குமார் 50 வீடுகள் இல்லாவிட்டாலும், குறைந்த வீடுகள் தேவைப்படும் ஒரு குக்கிராமத்தில் ஒரு சிறிய திட்டத்தைச் செய்ய முடியும் என்று உறுதியாக இருந்தார்.

ரோட்டரி நியூஸ்-க்கு ராஜ்குமார் அளித்த பேட்டியில், இப்பகுதியில் சுமார் 22 பழங்குடி கிராமங்கள் இருப்பதாகவும், RDO உடன் சேர்ந்து ஒரு கிராமத்தில் வீடுகளை வழங்குவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்ததாகவும் கூறினார். அவர்கள் பார்வையிட்ட மூன்று கிராமங்களில், நிலம் பெறுவதிலும், அந்த வீடுகளை கட்ட அரசாங்கத்திடமிருந்து தெளிவான அனுமதி பெறுவதிலும் சவால்கள் இருந்தன. "ஆவணங்கள் தெளிவாக இல்லாமல் நாம் வீடுகளை கட்டி, பின்னர் அதிகாரிகள் ஆட்சேபித்தால், இந்த வீடுகள் இடிக்கப்படலாம், எனவே நாங்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும்," என்றார்.

இறுதியாக, வலையகிரியில், அவர் சரியான பழங்குடி குக்கிராமத்தைக் கண்டுபிடித்தார். "இங்கு 14 குடும்பங்கள் தற்காலிக வீடுகளில் வாழ்ந்து வந்தன, அவை உண்மையில்







**வலமிருந்து:** IPDG *ராஜா கோவிந்தசாமி, திட்டத் தலைவர் ராஜ்குமார் ராமன், அவரது மனைவி மீரா,* RDO *முருகேசன், முன்னாள்* SP *கலியமூர்த்தி, நாகராஜ் செட்டி மற்றும் அவரது மனைவி கல்பனா.*





பிளாஸ்டிக் தாள்கள் மற்றும் மூங்கில் கம்பங்களால் செய்யப்பட்ட குடிசைகளில் வாழ்ந்து வந்தனர். அந்த குடிசைகளை அமைந்திருந்த நிலம் பாதுகாக்கப்பட்ட வனத்தின் விளிம்பில் இருந்தது. RDO உதவியுடன் அந்த நிலம் மதுரையைச் சேர்ந்த ரமேஷுக்கு சொந்தமானது என்பதை நான் கண்டறிந்தேன், மேலும் எனது திட்டத்தைப் பற்றி அவரிடம் பேசி, இங்கு வசிக்கும் பழங்குடி குடும்பங்களுக்கு 14 வீடுகளை கட்ட தனது நிலத்தின் ஒரு சிறிய பகுதியை நன்கொடையாக வழங்குமாறு கேட்டுக் கொண்டேன்."

ரமேஷ் சுமார் 33 ஏக்கர் பரப்பளவு கொண்ட ஒரு பெரிய நிலத்திற்கு உரிமையாளர், மேலும் "அவருடன் இரண்டு சந்திப்பு களுக்குப் பிறகு, அவர் 28 செண்ட் நிலத்தை நன்கொடையாக வழங்க ஒப்புக்கொண்டார் – ஒவ்வொரு குடும்பத்திற்கும் சுமார் 2 லட்சம் ரூபாய் மதிப்புள்ள இரண்டு செண்ட் நிலத்தில் வீடு கட்ட தயாரானோம். நிலம் மற்றும் வீடுகள் இரண்டும் குடும்பத்தின் பெண்களின் பெயர்களில் பதிவு செய்யப்பட்டுள்ளன, எதிர்காலத்தில் ஆண் உறுப்பினர்கள் குடிப்பழக்கம் அல்லது சூதாட்டக் கடனில் சிக்கினால் வீட்டை விற்கும் அபாயத்தை இது

நீக்குகிறது. ஆனால் பொது காட்சிக்கு இது கூட்டு உரிமையாக இருந்தது - ஒவ்வொரு வீட்டிலும் செண்பகம் மற்றும் பிரகாஷ் இல்லம் அல்லது பாப்பாத்தி மற்றும் பழனி இல்லம் என்று தமிழில் ஒரு அழகான பெயர் பலகையை கொண்டிருந்தது.

இந்த கிராமத்தில் வசிக்கும் மல்லிகா மற்றும் பிற பழங்குடியினர் பழியர் இனத்தைச் சேர்ந்தவர்கள்; பழியர்கள் மற்றும் புலையர்கள் கொடைக்கானல் மலைகளில் வசிக்கும் இரண்டு முக்கிய பழங்குடியினர். பழியர்கள் உயர்ந்த மலைப்பகுதிகளிலும், புலையர்கள் தாழ்வான பகுதிகளிலும் வாழ்கின்றனர். அரசாங்கம் இந்த பழங்குடியினருக்கு காடுகளில் இருந்து மூலிகைகள், தேன், பழங்கள் மற்றும் பிற மருத்துவ தாவரங்களை சேகரித்து வியாபாரிகளுக்கு விற்க உரிமை அளித்துள்ளது. ஆனால் அவர்களின் முக்கிய வாழ்வாதாரம் விவசாயத் தொழிலையும் மற்ற கூலி வேலைகளையும் செய்வதிலிருந்து வருகிறது. இரண்டு செண்ட் நிலம் சொந்தமாக வைத்து, அந்த நிலத்தில் செங்கல் மற்றும் சிமெண்ட் வீடு கட்டுவது அவர்களின் வசதிக்கு அப்பாற்பட்டது.

ஆரம்பத்திலிருந்தே RDO முருகேசன், இந்தத் திட்டத்திற்குத் தேவையான அனுமதிகளையும், நிலத்தின் உரிமையை மாற்றுவது தொடர்பான ஆவணப் பணிகளையும் விரைவாக முடிக்க அனைத்து உதவிகளையும் வழங்குவதில் உறுதியாக இருந்தார். இந்த குடும்பங்களில் உள்ள 14 பெண்களும் இன்று நில உரிமையாளர்களாகி விட்டனர்," என்று ராஜ்குமார் பெருமையுடன் கூறுகிறார்.

அடுத்து நிதியுதவி திரட்டுவதுதான் கடினமான பகுதியாக இருந்தது. மற்ற ரோட்டரி திட்டங்களிலிருந்து இந்த திட்டத்தை வேறுபடுத்துவது என்னவென்றால், சம்பந்தப்பட்ட தொகை கணிசமானது - மொத்தம் 70 லட்சம் ரூபாய், மற்றும் இப்போது ராஜ்குமார் கசப்பான உண்மை ஒன்றையும் அறிந்துள்ளார், அதாவது அவர் முன்பு அரசாங்கத்திடமிருந்து இலவசமாக வரும் என்று நம்பிய மின் இணைப்புகள் இப்போது ஒரு வீட்டிற்கு ரூ.5,600 செலவாகும். "நான் அதை என் சங்கத்தின் திட்டமாக மாற்றியிருந்தாலும், பணம் ஒரு உலகளாவிய மானியம், மாவட்ட மானியம் அல்லது என் சங்கத்தின் நிதி மூலமாக வரவில்லை. நான் என் நண்பர்கள் மற்றும் எனக்கு தெரிந்த நிறுவனங்களிடம் முறையிட்டு பணத்தை திரட்டினேன்.

மற்றொரு முக்கிய பிரச்சனை செலவு அதிகரிப்பு; 14 வீடுகளில் ஒவ்வொன்றும் வெவ்வேறு உயரத்தில்




இருப்பதால், வேலை தொடங்கியதும் கரடுமுரடான நிலப்பரப்பில் எதையும் கட்டுவதில் உள்ள அனைத்து சிரமங்களும் வெளிப்பட்டது. கட்டிடப் பொருட்களை கொண்டு செல்வதில் அதிக செலவு ஏற்பட்டது, குறுகிய பாதைகள் கட்டுமானப் பொருட்களை ஏற்றிச் செல்லும் வாகனங்கள் கட்டிடப் பகுதிக்கு வருவது சாத்தியமற்றதாக்கியது, இவை அனைத்தும் செலவை அதிகரித்தன; அவர் ஒவ்வொரு வீட்டிற்கும் - 150 சதுர அடி - 3 லட்சம் ரூபாய் செலவாகும் என்று மதிப்பிட்டிருந்தார், ஆனால் இறுதியில் ஒரு வீட்டிற்கு 5 லட்சம் ரூபாயாக அதிகரித்தது.

ராஜ்குமார் கதையைச் சொல்லும் போது, அதே சங்கத்தைச் சேர்ந்த ரோட்டேரியரான அவரது மனைவி மீரா RC கொடைக்கானலில் கடந்த மூன்று ஆண்டுகளில் ஏற்பட்ட தடங்கல்களையும் தாழ்வுகளையும் நினைவுகூர்ந்தார். ஜூன் 2022 பூமி பூஜை செய்யப்பட்டது, ஆனால் "வழியில் பல பிரச்சனைகள் ஏற்பட்டன. அவர் மனச்சோர்வடைந்து திட்டத்தை கைவிட விரும்பிய நேரங்களும் இருந்தன, அப்போது நான் அவரிடம் கொஞ்சம் கொஞ்சமாக செய்வோம் என்று சொல்வேன். முதலில் இரண்டு வீடுகளைக் கட்டிய பிறகு மேலும் இரண்டைக் கட்டுவோம், அதை மெதுவாக முன்னெடுத்துச் செல்வோம். அப்படித்தான் நாங்கள் வேலை செய்தோம்."

பல்வேறு தரப்பிலிருந்து கிடைத்த வெவ்வேறு வகையான உதவிகளை நினைவு கூர்ந்தபோது அவருடைய கணவர் சிரிக்கிறார். "நான் என் நண்பர்களுக்கு உதவி கேட்டு செய்திகளை அனுப்புவேன், அவர்களில் பலர் சாதகமாக பதிலளித்தார்கள்." வோக்கார்ட் தலைவர் ஹபில் கோராக்கிவாலா; கான்கார்ட் டெக்ஸ்டைல்ஸ் தலைவர் அவாய்ஸ் முஸ்வி; ரோட்டரி கிளப் ஆஃப் பம்பாய் நார்த் சாரிட்டி டிரஸ்ட்; சுந்தரம் ஹோம் பைனான்ஸ் நிர்வாக இயக்குனர் லக்ஷ்மிநாராயணன்; வாசவி தங்க மாளிகை நிர்வாக இயக்குனர் ரவி நித்யானந்தம்; மும்பையைச் சேர்ந்த K S நாகராஜ் செட்டி மற்றும் சூரஜ் டி'சௌசா; பகவான் திட்டத்திலிருந்து (வீடுகளை கட்டிய நிறுவனம்) சதீஷ் குமார் போன்ஸ்லே; சென்னையைச் சேர்ந்த ரோட்டேரியர் ஷோபா மற்றும் ஸ்ரீராம்; RC திருச்சிராப்பள்ளி ராக்சிட்டி; லிகி ஜார்ஜ், PDG ஜவஹர்லால் ஜெயின்; வாசுதேவன்; சி. ஜெயபால் மற்றும் P ரவிச்சந்திரன் போன்ற பல ரோட்டேரியர்களாகிய தனது நண்பர்களுக்கு அவர் குறிப்பாக நன்றி தெரிவிக்கிறார்.

இந்த திட்டத்திற்கு கிடைத்த அனைத்து உதவிகளுக்கும் அவர் நன்றி கூறினார்; "திருப்பூரைச் சேர்ந்த D ஈஸ்வரன் சுமார் 3.5 லட்சம் ரூபாய் மதிப்புள்ள கதவுகள் மற்றும் ஜன்னல்களுக்கான பிரேம்களை எனக்குக் கொடுத்தார், கொடைக்கானலைச் சேர்ந்த 4S





அசோசியேட்ஸ் டைல்ஸ்களை வழங்கின, மற்றொரு நண்பர் 1 லட்சம் ரூபாய் மதிப்புள்ள மின்சாதனப் பொருட்களை நன்கொடையாக வழங்கினார். இன்று, உங்கள் வருகையைக் குறிக்கும் வகையில் அவர்களுக்கு ஒரு புடவை, சட்டை, தலையணைகள் போன்றவற்றை உள்ளடக்கிய ஒரு தொகுப்பை நான் கொடுக்க விரும்பினேன், மேலும் மதுரையைச் சேர்ந்த நண்பர் முத்துக்குமாரிடம் இவற்றை ஒரு குறைந்த விலையில் கொடுக்க முடியுமா என்று கேட்டேன், அவர் ஆடைகளை நன்கொடையாக வழங்குவதாகக் கூறினார். இப்படித்தான் பல மக்கள் உதவி செய்துள்ளனர்."



திட்டம் நடந்து கொண்டிருக்கும் போதே அவருக்கு கடுமையான உடல்நலக் குறைவு ஏற்பட்டது, அப்போது அவரது சங்கத்தின் முன்னாள் தலைவரும் திட்ட ஒருங்கிணைப்பாளருமான L ஜெயபிரசாத் நடந்து கொண்டிருக்கும் பணியின் மேற்பார்வையை ஏற்றுக்கொண்டார். இந்த திட்டத்தை நிறைவேற்ற அவருக்கு உதவிய RC கொடைக்கானலைச் சேர்ந்த மற்றவர்களில் முன்னாள் தலைவர்களான டாக்டர் மதன், D ராஜ்குமார் மற்றும் ரோகன் சாமுவேல் ஆகியோர் அடங்குவர்.

மல்லிகா அவருடைய பளபளப்பான புதிய வீட்டில், அவரது பேரனுடன் - அவருக்கு ஆறு பேரக்குழந்தைகள் உள்ளனர் - மற்றும் செல்லப்பிராணி நாய் தாமுவுடன் (நான் என் கேமராவை எடுத்தபோது என்னைச் சுற்றி வந்து படங்களுக்கு போஸ் கொடுக்கும் கலையை விரைவாகக் கற்றுக்கொள்கிறான்!) அமர்ந்திருந்த மல்லிகா, கிராமத்தில் உள்ள அனைத்து குழந்தைகளும் தவறாமல் பள்ளிக்குச் செல்கிறார்கள் என்று ராஜ்குமாருக்கு உறுதியளிக்கிறார். "குறிப்பாக பெண்கள் பள்ளிக்குச் செல்ல வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்தினீர்கள் என்று எனக்குத் தெரியும், நான் அதை உறுதிசெய்கிறேன்," என்று அவர் சிரிக்கிறார். குழந்தைகள் மூன்று வெவ்வேறு பள்ளிகளுக்குச் செல்கிறார்கள்; வயதில் மூத்தவர்களில் ஆறு பேர் 5 கி.மீ தூரத்தில் உள்ள ஒரு பள்ளியில் படித்து, அங்குள்ள அரசு விடுதியில் தங்கி வருகின்றனர்.

மல்லிகாவின் வீட்டினுள்ளே கழிப்பறை இருந்தாலும், "பாரம்பரியமாக இந்த மக்கள் வீட்டிற்குள் கழிப்பறை வைத்திருக்க விரும்புவதில்லை. அதனால் பின்னர் கட்டப்பட்ட வீடுகளில், கழிப்பறையை வீட்டிற்கு அருகில் வைத்தோம். இப்போது வனத்துறை குடும்பங்களுக்கு ஒரு கழிப்பறை தொகுப்பை கட்ட முன்வந்துள்ளது, அது அவர்களுக்கு ஒரு பெரிய வரப்பிரசாதமாக இருக்கும். நான் திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் A சரவணனையும் சந்தித்தேன், அவர் பழங்குடி மக்களுக்காக அரசாங்கம் ஒதுக்கியுள்ள பல்வேறு திட்டங்களில் இருந்து அனைத்து பலன்களையும் பெற பழங்குடியினருக்கு உதவுவதாக உறுதியளித்துள்ளார். இதில் கூட்டு விவசாயம் செய்யக்கூடிய ஒரு நிலப்பரப்பும் அடங்கும்" என ராஜ்குமார் விளக்குகிறார்.

நான் அந்த சிறிய பகுதியில் நடந்து செல்லும்போது சிரித்த முகங்கள் என்னை வரவேற்றன; ஒரு வீட்டை சொந்தமாக வைத்திருப்பது பெரும்பாலான மக்களின் வாழ்நாள் கனவு. நாகேஸ்வரி, மற்றவர்களுடன் சேர்ந்து, காட்டில் இருந்து மூலிகைகள், பழங்கள், தேன் போன்றவற்றை சேகரிக்கிறார், ஆனால் அவரது முக்கிய வருமானம் விவசாய வேலை செய்வதிலிருந்து வருகிறது. வேலை கிடைக்கும்போது, இந்த வேலையிலிருந்து ஒரு நாளைக்கு சுமார் 300 ரூபாய் சம்பாதிக்கிறார். பவன்ராஜ் போன்ற ஆண்களுக்கு, விவசாய வேலை, முக்கியமாக காபி கொட்டைகளை பறிப்பது, அல்லது கூலி வேலை, ஒரு நாளைக்கு 400–500 ரூபாய் சம்பாதித்துக் கொடுக்கிறது, "ஆனால் எங்களுக்கு தினமும் வேலை கிடைப்பதில்லை," என்று அவர் கூறுகிறார்.

ஆனால் தங்கள் சொந்த வீடுகளைச் சுற்றி, நகர்ப்புறங்களில் தேவைப்படும் கொய்யா மற்றும் அவகேடோ போன்ற சில பழங்களையும், காபி விதைகளையும் பழங்குடியினர் வளர்ப்பதாக மல்லிகா கூறுகிறார். ராஜ்குமார் ஒரு புன்சிரிப்புடன் ஒரு சம்பவத்தை நினைவு கூர்ந்தார்,



அவர் தனது மனைவி மீராவுடன் கொடைக்கானலில் இருந்து பயணம் செய்து கொண்டிருந்தபோது, திட்டம் நடந்துகொண்டிருந்த வேளையில், திட்ட தளத்தில் ஒரு நிறுத்தம் செய்தனர். "நாங்கள் புறப்படும்போது ஒரு வயதான பெண் எங்களை காத்திருக்குமாறு சொல்லி, தனது குடிசைக்குள் சென்று, புதிதாக அரைத்த காபி தூள் மற்றும் சுவையான மலை வாழைப் பழங்களுடன் திரும்பி வந்தார். இவ்வளவு அன்புடன் கொடுக்கப்பட்ட இதுபோன்ற விலைமதிப்பற்ற பரிசுகளை யாரால் மறக்க முடியும்?"

ஜூன் 2025-ல், அப்போதைய RID 3000 மாவட்ட ஆளுநர் ராஜா கோவிந்தசாமி, "ரோட்டரி மாதிரி பழங்குடி கிராமம்" என்ற திட்டத்தைத் திறந்து வைத்தபோது, அனைத்து வீடுகளும் வாழை இலைகளால் அலங்கரிக்கப்பட்டு, மென்மையான காற்றில் அசைந்தாடின. பெண்கள் பளபளப்பான புதிய புடவைகளிலும், குழந்தைகள் வண்ணமயமான உடைகளிலும், ஆண்கள் புதிய சட்டைகளிலும், வேட்டிகளிலும் பிரகாசமாக காட்சியளித்தனர். கிரகப்பிரவேசத்தைக் குறிக்கும் வகையில் பால் காய்ச்சப்பட்டு, ஒவ்வொரு குடும்பத்திற்கும் போர்வை, படுக்கை விரிப்புகள், உணவு தானியங்கள் மற்றும் ஒரு மாதம் முழுவதும் பயன்படுத்தக்கூடிய பிற பொருட்கள் பரிசாக வழங்கப்பட்டன. இவை கொடைக்கானலைச் சேர்ந்த அஷ்வின் ராஜ்குமார் மற்றும் மும்பையைச் சேர்ந்த ரோமா சேட்டி ஆகியோரால் நன்கொடையாக வழங்கப்பட்டன.

"ராஜ்குமார் போன்ற ஒரு தனிப்பட்ட ரோட்டேரியரால் செய்யப்படும் இது ஒரு அரிய பணி, இது பாராட்டப்பட வேண்டும் மற்றும் பகிரப்பட வேண்டும், ஏனெனில் இது மற்றவர்களை இதேபோல் செய்ய ஊக்குவிக்கும்" என IPDG கோவிந்தசாமி கூறினார். வீடுகளில் ஒன்றை நன்கொடையாக வழங்கிய சுந்தரம் ஹோம் பைனான்ஸ் நிர்வாக இயக்குனர் லட்சுமிநாராயணன், பழங்குடி மக்களின் இருப்பிடங்களை முன்பு பார்த்த பிறகு, இந்த புதிய வீடுகள் அவர்களின் வாழ்க்கையில் கொண்டு வரும் மாற்றத்தால் ஆச்சரியமடைவதாக கூறினார். நன்கொடையாளர்களில் ஒருவரான நாகராஜ் செட்டி, இங்குள்ள குழந்தைகளின் உயர் கல்விக்கும் உதவ ஆர்வமாக இருப்பதாகக் கூறினார். "ஒரு பெண் மாவட்ட ஆட்சியராக விரும்புகிறேன் என்று கூறியபோது, செட்டி அப்பெண் கல்லூரி படிப்பை முடிக்கும் வரை அவளது கல்வி செலவை ஏற்க முன்வந்தார்" என்று ராஜ்குமார் கூறினார்.

ஆனால் அன்றைய நாளின் நட்சத்திரம் மல்லிகாதான், அவர் ஒரு அனுபவமிக்க பேச்சாளரைப்போல மைக்ரோஃபோனை கையில் எடுத்தார். பிரகாசமான நீலப் புடவையில், அதற்குப் பொருத்தமான வளையல்களுடன், அடர் ஆரஞ்சு வண்ணப் பூக்கள் தலைமுடியில் அழகு சேர்த்திருக்க, அவர் நம்பிக்கையுடன் பேசினார். இந்த வாழ்நாளில் ஒருமுறை கிடைக்கும் வாய்ப்பை கிராம மக்கள் நன்றாகப் பயன்படுத்திக்கொண்டு, ஒரு பிரகாசமான எதிர்காலத்திற்காக கடினமாக உழைப்பார்கள் என்று தனது மனமார்ந்த நன்றியையும், உறுதியையும் பார்வையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்தார்.

வீடுகள் வசிப்பவர்களால் நிரப்பப்பட்டுள்ளன, ஆனால் ஒரு முடிக்கப்படாத வேலை உள்ளது – வீட்டு மின் இணைப்பு. இதுவரை இந்த கிராமத்தில் மின்சாரம் இல்லை, ஆனால் இப்போது மின் விநியோகம் தொடங்க அனைத்து கேபிள் வேலைகளும் முடிந்துவிட்டன. "பழங்குடியினராக இருப்பதால் அவர்களுக்கு வீடுகளில் இலவச மின் இணைப்பு கிடைக்கும் என்று நான் நினைத்தேன். ஆனால் மூன்று நாட்களுக்கு முன்புதான் ஒவ்வொரு வீட்டிற்கும் 100 யூனிட் மின்சாரம் இலவசமாக கிடைக்கும், ஆனால் ஒவ்வொரு இணைப்புக்கும் ஒரு வீட்டிற்கு 5,600 ரூபாய் செலவாகும் என்பதை அறிந்தேன். மொத்தத்தில், எனக்கு இன்னும் 1.44 லட்சம் ரூபாய் தேவை, ஆனால் புதுச்சேரியைச் சேர்ந்த PDG செல்வனாதன் மற்றும் ஒரு நண்பர் இந்த செலவின் பெரும்பகுதியை வழங்க உறுதியளித்துள்ளனர்."

இன்றும், அவருடைய கனவு திட்டம் முடிந்திருந்தாலும், ராஜ்குமார் மனதளவில் இந்த கிராமத்தின் பெண் குடியிருப்பாளர்களில் ஒருவரின் காட்சியை அடிக்கடி நினைத்துப் பார்க்கிறார். அவர் இடைவிடாத மழையின் போது, தனது ஏழு மாத குழந்தையை மழை நீர் படாமல் மூன்று மணி நேரம் ஒரே இடத்தில் தாங்கிக் கொண்டு நின்றுள்ளார். "அவரால் தன் குடிசையில் உட்காரவோ அல்லது குழந்தையை அங்கு வைக்கவோ முடியவில்லை, ஏனென்றால் குடிசைக்குள் தண்ணீர் ஓடியது. இது சில ஆண்டுகளுக்கு முன்பு நடந்தது; இந்தக் கதையை நான் கேட்ட பிறகு, கொடைக்கானலில் மழை பெய்யும் போதெல்லாம், நான் அந்த தாயை மட்டுமே நினைப்பேன். இந்த வலையகிரி கிராமத்தில் உள்ள தாய்மார்களுக்கு மழை காலங்களில் அடைக்கலம் கொடுக்க ஒரு உறுதியான வீடு இருக்கிறது என்பதை அறிந்து ஆறுதலாக இருக்கிறது."

வடிவமைப்பு: N கிருஷ்ணமூர்த்தி

புகைப்படங்கள்: ரஷீதா பகத்

# RI தலைவர் பிரான்செஸ்கோ அரெஸ்ஸோவுடன் ஒரு உரையாடல்

எடல்கா லெஹோக்ஸ்கி

*RI-யின் புதிய தலைவர், ரோட்டரியில் தனது சிறந்த தருணங்கள், தலைவராக அவரது இலக்குகள், மற்றும் ஆலிவ் எண்ணெய் மற்றும் ஓபரா மீதான ஆர்வம் பற்றிப் பேசுகிறார்.*

பிரான்செஸ்கோ அரேஸோ தனது மாவட்ட மாநாட்டில் அமர்ந்திருந்தபோது அவருக்கு ஒரு அழைப்பு வந்தது, அதில் அவர் அறையை விட்டு வெளியேறி RI இயக்குநர்கள் குழுவுடன் ஜூம் சந்திப்பில் சேருமாறு கேட்கப்பட்டது. சில நிமிடங்களுக்குப் பிறகு, அரேஸோ 2025–26 ஆம் ஆண்டிற்கான RI தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பதை அறிந்தார், இந்த உலகளாவிய உறுப்பினர் அமைப்பிற்கு தலைமை தாங்கும் மூன்றாவது இத்தாலியர் மற்றும் தெற்கு இத்தாலியைச் சேர்ந்த முதல் நபர் இவர்தான். இந்த செய்தி அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்படாததால், அவரால் யாரிடமும் சொல்ல முடியவில்லை. ஆனால் விரைவில், அரங்கம் முழுவதும் போன்கள் வெளியே வருவதை அவர் கவனித்தார்.

இரவு 11 மணியளவில் சமூக ஊடகங்களில் செய்தி வந்தபோது, “நாங்கள் இரவு விருந்தின் நடுவில் இருந்தோம். 400க்கும் மேற்பட்ட ரோட்டேரியர்கள் தங்கள் தொலைபேசிகளில் இதைக் கண்டுபிடிப்பதை நீங்கள் கற்பனை செய்யலாம். அது ஒரு மறக்க முடியாத தருணம். திடீரென்று, அவர்கள் அனைவரும் என்னை முத்தமிடவும் வாழ்த்துக்களைத் தெரிவிக்கவும் வரிசையில் நின்றனர். நான் மிகவும் நெகிழ்ந்து போனேன்” என்றார்.

ரோட்டரிக்கு தலைமை தாங்குவதற்காக அரேஸோவை தேர்வு செய்ய ஜூன் மாதம் வாரியம் ஒரு சிறப்பு அமர்வை நடத்திய ஒரு வாரத்திற்குப் பிறகு, அவர் மாநாட்டிற்காக கனடாவின் கல்கரிக்கு பறந்தார். அங்கு, உலகெங்கிலும் உள்ள உறுப்பினர்களால் அவர் அன்புடன் வரவேற்கப்பட்டார். ஆயிரக்கணக்கான பங்கேற்பாளர்கள் அவரது உரையின் போது உற்சாகமான கைதட்டலுடன் வரவேற்றனர்.

சிசிலியில் உள்ள ரகுசா ரோட்டரி சங்கத்தின் உறுப்பினரான அரேஸோ, மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ரோட்டரியில் இருந்து வருகிறார். அவர் கூட்டு மூலோபாய திட்டமிடல் குழுவின் துணைத் தலைவராகவும், RI இயக்குநராகவும், மெல்போர்னுக்கான 2023 சர்வதேச மாநாட்டு குழுவின் தலைவராகவும், பிற தலைமைப் பதவிகளிலும் பணியாற்றியுள்ளார். தனது ரோட்டரி பயணத்தின் மூலம், RI-ன் தாக்கத்தை வலுப்படுத்தும் மற்றும் தலைமுறைகளிடையே ஈடுபாட்டிற்கான வாய்ப்புகளை விரிவுபடுத்தும் முயற்சிகளை அவர் ஆதரித்துள்ளார். அவர் ஃபோண்டாசியோன் ரோட்டரி இத்தாலியாவின் தலைவராகப் பணியாற்றியுள்ளார், இது இத்தாலிய குடிமக்கள் ரோட்டரியின் உலகளாவிய மனிதாபிமான திட்டங்களை ஆதரிப்பதை எளிதாக்கும் ஒரு தேசிய முயற்சியாகும்.

இடைவேளைகளில் நடை பாதையில், ரோட்டரி நிகழ்ச்சிக்கு செல்லும் வழியில் ஒரு மினிபஸ்ஸில், மற்றும் மாநாட்டு மண்டபத்திற்குள் ஒரு தற்காலிக அலுவலகத்தில் என கல்கரியில் அரேஸோவுடனான பல உரையாடல்களின் போது பின்வரும் நேர்காணல் நடத்தப்பட்டது. அங்கு ரோட்டரி உறுப்பினர்கள் அடிக்கடி





RI தலைவர்
பிரான்செஸ்கோ அரெசோ

அவரை வாழ்த்தி கட்டிப்பிடிக்க வந்தனர். அவரது பரபரப்பான அட்டவணையிலும், அவர் தனது வாழ்க்கை, அவரது ரோட்டரி பயணம், அமைப்புக்கான அவரது திட்டங்கள் மற்றும் அவரது மற்ற இரண்டு ஆர்வங்களான ஓபரா மற்றும் ஆலிவ் எண்ணெய் பற்றி ரோட்டரி பத்திரிகையுடன் பேசுவதற்கு நேரம் ஒதுக்கினார்.

**நீங்கள் பல ஆண்டுகளாக ஒரு ஆர்த்தடான்டிஸ்ட்டாக பணிபுரிந்துள்ளீர்கள். ரோட்டரியராக உங்களை திறம்பட செயல்பட வைக்கும் விஷயங்கள் ஏதேனும் உங்கள் வேலையில் உள்ளதா?**

நான் 46 ஆண்டுகளாக ஒரு ஆர்த்தடான்டிஸ்ட்டாக பணிபுரிந்து வருகிறேன். முக்கியமாக இளைஞர்களுடன் பணிபுரிகிறேன், சிகிச்சை தொடங்குவதற்கு முன் அவர்களைப் புரிந்துகொள்ள முயற்சிப்பது மிகவும் முக்கியம். நீங்கள் அவர்களின் ஒத்துழைப்பைப் பெற வேண்டும். அந்த உறவுகளை உருவாக்குவது எனது வேலையின் சிறந்த அம்சங்களில் ஒன்றாகும்.

**இப்போது உங்களுக்கு சொந்த பேரக்குழந்தைகள் இருக்கிறார்கள், இல்லையா?**

எனக்கு இரண்டு அருமையான பேரக்குழந்தைகள் உள்ளனர். மூத்தவர், மூன்று வயதுடையவர், என் பெயரைக் கொண்டிருக்கிறார். இளையவளுக்கு ஒரு வயது, அவளுக்கு என் மனைவியின் பெயர். எனவே எங்களிடம் மற்றொரு அண்ணா மரியா மற்றும் பிரான்செஸ்கோ உள்ளனர்.

**நீங்கள் மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக ஒரு ரோட்டேரியராக இருந்து வருகிறீர்கள். நீங்கள் ஏன் முதலில் சேர விரும்பினீர்கள் என்று உங்களுக்கு நினைவிருக்கிறதா?**

ஆரம்பத்தில், ரோட்டரி என்பது வெவ்வேறு கண்ணோட்டங்களைக் கொண்ட புதிய நண்பர்களைச் சந்திக்கும் ஒரு இடமாக இருந்தது. நான் சங்கத் தலைவராகும் போதுதான் ரோட்டரியை உண்மையில் புரிந்துகொள்ள ஆரம்பித்தேன். இப்போது, ரோட்டேரியர்களிடம் பேசும்போது, அவர்கள் பயன்படுத்தும் வினைச்சொற்களை மாற்றச் சொல்கிறேன். சினிமாவுக்குச் செல்வது போல ரோட்டரிக்கு “செல்ல” மாட்டீர்கள், சினிமாவில் நீங்கள் அமர்ந்து மற்றவர்கள் எதையாவது செய்வதைப் பார்ப்பீர்கள். ரோட்டரி என்பது நீங்கள் செய்யும் ஒன்று. நீங்கள் பங்கேற்க வேண்டும். அப்போதுதான் நீங்கள் வளர ஆரம்பிக்கிறீர்கள்.

**ரோட்டரியில் நீங்கள் எப்படி வளர்ந்துள்ளீர்கள்?**

என் சங்கம் நான் தலைவராக வேண்டும் என்று

முதலில் முன்மொழிந்தபோது, நான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. எனக்கு திக்குவாய் இருந்தது, எனவே என் சங்கத்தில் உரையாற்ற வேண்டிய கட்டாயம் ஏற்படுமோ என்று பயந்தேன். ஆனால் அது அவ்வளவு மோசமாக இல்லை. பின்னர் அவர்கள் என்னை மாவட்ட ஆளுநராக இருக்குமாறு அழைத்தனர், மீண்டும், நான் ஏற்றுக்கொள்ள விரும்பவில்லை. ஆனால் மீண்டும் ஒருமுறை, அவர்கள் என்னை சம்மதிக்க வைத்தனர்.

இப்போது, நான் RI தலைவராக இருந்து இன்னொரு மொழியில் மேடையில் பேசப் போகிறேன் என்று நினைக்கும் போது, ரோட்டரி என்னை எவ்வளவு நேர்மறையாகவும் நீடித்த வகையிலும் மாற்றியுள்ளது என்பதை நான் புரிந்துகொள்கிறேன்.

**இந்த தாக்கத்தை ரோட்டரி உறுப்பினர்களுக்கும் சாத்தியமான உறுப்பினர்களுக்கும் எவ்வாறு தெரிவிக்க முடியும்?**

சங்கத்தலைவர்களுடன் நமது தகவல் தொடர்புகளை மேம்படுத்த வேண்டும், ஏனெனில் அவர்கள் உறுப்பினர்களுடன் பழகுவதில் முன்னணி வகிக்கிறார்கள். உறுப்பினர்கள் மற்றும் புதிய சங்கங்களின் முக்கியத்துவத்தை மாவட்ட ஆளுநர்களுக்குக் கற்பிப்பதில் நாம் ஒரு சிறந்த பணியைச் செய்தாலும், மாவட்ட ஆளுநர் ஒரு சங்கத்தலைவருடன் ஒரு வருடத்திற்கு இரண்டு அல்லது மூன்று முறை மட்டுமே பேசுகிறார். நமது உறுப்பினர் இலக்குகள் ஏன் முக்கியம் என்று தெரியாத சங்கத்தலைவர்கள் பலர் உள்ளனர்.

**தலைவராக உங்கள் பதவிக் காலத்தில் நீங்கள் என்ன சவால்களை எதிர்கொள்வீர்கள் என்று எதிர்பார்க்கிறீர்கள்?**

நான் மிகவும் தாமதமாகத் தொடங்குகிறேன் என்பதை நான் நன்கு அறிவேன். நான் இப்போது சிக்கல்களைப் படித்து இலக்குகளை நிர்ணயிக்கத் தொடங்கினாலும், என்னால் அதிகம் செய்ய முடியாது. ரோட்டரி ஒரு ஸ்கூட்டர் அல்ல, அதில் விரைவாக திசையை மாற்ற முடியாது. அது ஒரு பெரிய கப்பல் போன்றது: நீங்கள் ஒரு திருப்பத்தை செய்ய விரும்பினால், பல கிலோமீட்டர்கள் முன்னரே தொடங்க வேண்டும். நான் அடுத்த தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட சங்க்கூ யுனுடன் மிக நெருக்கமாகப் பணியாற்ற விரும்புகிறேன். சங்க்கூவும் நானும் உண்மையிலேயே பயனுள்ள ஒரு இரண்டு ஆண்டு திட்டத்தை உருவாக்க முடியும் என்று நான் நினைக்கிறேன்.

**ரோட்டரியில் உங்களுக்கு மிகவும்**



*முன் வரிசை (இடமிருந்து): பேரன் பிரான்செஸ்கோவைத் தூக்கிக் கொண்டு அரேஸ்ஸோ; பேத்தி அன்னா மரியாவைத் தூக்கிக் கொண்டு அரேஸ்ஸோவின் மனைவி அன்னா மரியா. நிற்பவர்கள் (இடமிருந்து): அரேஸ்ஸோவின் மகள் எலெனா; அவரது மருமகன் மேக்னஸ்; மற்றும் மகள் ரஃபேலா.*

**மறக்க முடியாத தருணங்களில் ஒன்று எது?**

எனக்கு மிகவும் உணர்ச்சிப்பூர்வமான ஒரு தருணம் என்னவென்றால், மாவட்ட ஆளுநராக இருந்தபோது, மத்தியதரைக் கடலை ஒட்டிய மாவட்டங்களுக்கு (இத்தாலி, பிரான்ஸ், ஸ்பெயின், வட ஆப்பிரிக்கா, கிரீஸ், துருக்கி) ரோட்டரி இளைஞர் தலைமைத்துவ விருதுகள் நிகழ்வை நான் ஏற்பாடு செய்தேன். துருக்கிய மற்றும் இத்தாலிய இளைஞர்களை ஒன்றாக இணைப்பதுதான் பிரச்சினை, ஏனென்றால் அவர்கள் ஒருவரையொருவர் மிகவும் வித்தியாசமாகப் பார்த்தார்கள். முதல் நாள் பதட்டமாக இருந்தது; அவர்கள் ஒருவரையொருவர் விரும்பவில்லை என்பது தெளிவாகத் தெரிந்தது. ஆனால் சில நாட்களுக்குப் பிறகு, அவர்கள் ஒரே ரசனைகளையும் ஒரே கனவுகளையும் கொண்டிருப்பதை உணர ஆரம்பித்தார்கள்.

கடைசி நாளில், அவர்கள் ஜான் லெனனின் “இமேஜின்” பாடலை ஒன்றாகப் பாடினார்கள், மேலும் தங்கள் நாடுகளுக்கிடையேயான கலாச்சார வேறுபாடுகள் குறித்து அவர்கள் எழுதிய ஒரு நாடகத்தை நிகழ்த்தினார்கள். நான் நினைவில் வைத்திருக்கக்கூடிய மிக அழகான விஷயங்களில் அதுவும் ஒன்று.



*ஜூன் மாதம் கனடாவின் கால்கரியில் நடந்த RI மாநாட்டில் RI தலைவர் அரேஸ்ஸோவும் அவரது மனைவி அன்னா மரியாவும்.*

**உங்கள் தொழில் வாழ்க்கையில், நீங்கள் பல் மருத்துவர்கள் மற்றும் ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளர்களுக்கான வர்த்தக அமைப்புகளுக்கு தலைமை தாங்கியுள்ளீர்கள். ஒரு ஒருமித்த கருத்தை உருவாக்குவதற்கு எந்தக் குழுவிடம் மிகவும் கடினமாக இருக்கும்: பல் மருத்துவர்கள், ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளர்கள் அல்லது ரோட்டரி உறுப்பினர்களா?**

என் அனுபவத்தில், ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளர்கள் தான். ஒவ்வொரு ஆலிவ் எண்ணெய் உற்பத்தியாளரும் தங்கள் எண்ணெய் தான் உலகில் சிறந்தது என்று உறுதியாக நம்புகிறார்கள். எனவே அவர்கள் பொதுவாக மற்றவர்களுடன் நேர்மையாக ஒத்துழைக்க விரும்புவதில்லை.

**எவ்வளவு காலமாக ஆலிவ் எண்ணெய் உற்பத்தி செய்து வருகிறீர்கள்?**

என் குடும்பம் இப்போது ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக ஆலிவ் எண்ணெய் உற்பத்தி செய்து வருகிறது. என் மகள்கள் இந்தத் துறையில் ஆர்வம் இல்லாததால், நான் தான் கடைசி என்று அஞ்சுகிறேன்.

**உங்களுக்கு ஓபராவும் பிடிக்கும் என்று எங்களுக்கு தெரியும். உங்களுக்கு பிடித்த ஓபரா அல்லது இசையமைப்பாளர் யார்?**

நான் மிகவும் விரும்பும் இசையமைப்பாளர் வின்சென்சோ பெல்லினி. அவர் சிசிலியில் பிறந்தவர், மேலும் மிக இளம் வயதிலேயே இறந்துவிட்டார். அவர் சில ஓபராக்களை மட்டுமே உருவாக்கினர், ஆனால் அவை அனைத்தும் மிக உயர்ந்த தரத்தில் இருக்கும். நிச்சயமாக, புச்சினி, வெர்டி, மொஸார்ட் போன்ற பல சிறந்த இசையமைப்பாளர்களும் உள்ளனர். ஒருவரைத் தேர்ந்தெடுப்பது கடினம்.■



*மால்டா ரோட்டரி கிளப்பின் உறுப்பினரான அவரது உதவியாளர் ஜான் டி ஜியோர்ஜியோவுடன்.*

Rotary PEOPLE OF ACTION

# கிராமப்புறப் பெண்களை மேம்படுத்துதல்

ரஷீதா பகத்

RC பர்தமான் ஹெரிடேஜ், RI மாவட்டம் 3240, நிர்மலா ரஜக் என்ற பெண் தலைவரின் கீழ், கடந்த ரோட்டரி ஆண்டில் பெண்களின் கல்வி, சுகாதாரம் மற்றும் பொருளாதார மேம்பாடு குறித்த பல திட்டங்களைச் செய்துள்ளது.

பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் மற்றும் இளம் பெண்களிடையே மாதவிடாய் சுகாதார மேலாண்மையை (MHM) மேம்படுத்துவதற்கும், எளிதாக்குவதற்குமான ஒரு திட்டம் முதன்மையாக உள்ளது. "இந்த ரோட்டரி ஆண்டு (2024–25) தொடங்கியதிலிருந்தே, நாங்கள் எங்கள் சமூகத்தில் ஒரு தேவை அடிப்படையிலான மதிப்பீட்டைச் செய்தோம், இலக்குகளை நிர்ணயித்தோம், மேலும் தடைகள், செலவு, தாக்கம் மற்றும் எங்கள் திட்டங்கள் இந்த பெண்களின் வாழ்க்கையில் கொண்டு வரக்கூடிய நீடித்த மாற்றங்களைக் கருத்தில் கொண்டு ஒரு செயல் திட்டத்தைத் தீட்டினோம்," என்று சங்கத்தலைவர் கூறுகிறார்.

மேற்கு வங்காளத்தின் நகர்ப்புறப் பகுதியில் அமைந்துள்ள அரசு உதவி பெறும் கல்லூரியில் (டாக்டர் பூபேந்திர நாத் தத்தா ஸ்மிருதி மகாவித்யாலயா) பணிபுரியும் ஆசிரியரான நிர்மலா, தனது கல்லூரியில் மாணவிகள் மாதவிடாய் காலத்தில் சானிட்டரி நாப்கின்களைப் பயன்படுத்தும் முறையை ஆய்வு செய்ததாகக் கூறுகிறார். "நாங்கள் எங்கள் கல்லூரி

*RC பர்தமான் ஹெரிடேஜ் மூலம் மாணவர்களுக்கு சானிட்டரி நாப்கின்கள் விநியோகிக்கப்பட்டன.*





*ஒரு பள்ளியில் சானிட்டரி நாப்கின் வழங்கும் இயந்திரத்தை நிறுவும் நிகழ்ச்சியில் சங்கத் தலைவர் நிர்மலா ரஜக் (வலமிருந்து 4வது).*



நூலகத்தில் சானிட்டரி நாப்கின்களை வைத்திருந்தோம், பெண்கள் அதை ரூ.5 என்ற பெயரளவு தொகையை செலுத்தி பெறலாம். ஆனால் இந்த ஏற்பாடு மாணவிகளுக்கு சிரமமாகவோ அல்லது சங்கடமாகவோ இருப்பதாக ஆசிரியர்கள் கண்டறிந்தனர். மற்ற கல்வி நிறுவனங்களிலும் இதே நிலை இருந்ததால், RID 3240 இன் அறக்கட்டளை நிதியால் ஒரு பகுதி நிதியளிக்கப்பட்டு, 10 தானியங்கி சானிட்டரி நாப்கின் விற்பனை இயந்திரங்களை அரசு உதவி பெறும் உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளுக்கு நன்கொடையாக வழங்க முடிவு செய்தோம்."

சங்கம் அன்கூர் மற்றும் சாத்தி எனப் பெயரிடப்பட்ட இரண்டு RCC-க்களையும் உருவாக்கியுள்ளது, இதன் அனைத்து உறுப்பினர்களும் பெண்களே. "மாதவிடாய் சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை மேம் படுத்துவதற்காக கிராமப்புறங்களில் உள்ள பெண்கள் மற்றும் சிறுமிகளை அணுகுவதற்கு நாங்கள் அவர்களின் சேவைகளைப் பயன்படுத்துகிறோம். இந்த பெண்கள் பல்வேறு பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கிராமங்களில் சுமார் 7,500 சானிட்டரி நாப்கின்களை விநியோகிக்க உதவியுள்ளனர்."

MHM மற்றும் கர்ப்பப்பை வாய்ப்புற்றுநோயின் அபாயங்கள் குறித்த விழிப்புணர்வை போர்க்கால அடிப்படையில் எடுத்துரைத்து, MHM குறித்த 10 விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்ததோடு, சங்கம் கர்ப்பப்பை வாய்ப் புற்றுநோயைத் தடுத்தல் மற்றும் ஆரம்பகால கண்டறிதலின் அவசியத்தை வலியுறுத்தி ஆறு கருத்தரங்குகளையும் நடத்தியுள்ளது. சிலருக்கு ரோட்டரி மாவட்டத்தின் நோய் தடுப்பு மற்றும் சிகிச்சை துணைக்குழுவின் உதவியுடன் ரூ.65,000 செலவில் பரிசோதனை மற்றும் சிகிச்சை வழங்கப்பட்டது, இதில் சங்கம் ரூ.30,000 திரட்டியது.

அடுத்து, சங்கம் இரண்டு அரசு தொடக்கப் பள்ளிகளில் 'நல்ல தொடுதல் கெட்ட தொடுதல்' குறித்து பெண்களுக்குக் கற்பிக்கும் திட்டங்களை ஏற்பாடு செய்தது, ஏனெனில் "இந்த பிராந்தியத்தில் இளம் பெண்களுக்கு இரண்டிற்கும் உள்ள வேறுபாடு தெரியவில்லை, மேலும் அரசுப் பள்ளிகள் இந்த விஷயத்தை அதிகம் கற்பிப்பதில்லை. தெற்கு கல்கத்தா சட்டக் கல்லூரியில் சமீபத்தில் நடந்த பாலியல் பலாத்கார சம்பவத்திற்குப் பிறகு, இது மிகவும் அவசியம் என்று நாங்கள் உணர்ந்தோம்," என்கிறார் நிர்மலா.

இது தவிர, கல்லூரிகளில் சமூக நீதி மற்றும் பெண்கள்



மேம்பாடு குறித்த கருத்தரங்குகள் ஏற்பாடு செய்யப்பட்டன. பாலியல் துன்புறுத்தல் குறித்து அனைத்து மகளிர் கல்லூரிகளிலும் உள் புகார் குழுக்களைக் கொண்டிருப்பது உச்ச நீதிமன்றத்தால் கட்டாயமாக்கப் பட்டிருந்தாலும், பல கல்லூரிகள் இதை தீவிரமாக எடுத்துக்கொள்வதில்லை என்றும், பல பெண்களுக்கு அத்தகைய புகார் அளிக்க முடியும் என்பது தெரியவில்லை என்றும் அவர் கூறுகிறார். “ஆகவே, அத்தகைய துன்புறுத்தல் ஏற்படும்போது புகார் அளிக்கக்கூடிய தற்போதைய சட்டங்கள் மற்றும் வழிமுறைகள் குறித்து எங்கள் திட்டங்கள் பெண்களுக்கு விளக்கின.”

பெண்கள் தொடர்பான இந்த திட்டங்கள் பங்கேற்ற மாணவி களிடையே எந்த வகையான ஆர்வத்தை ஏற்படுத்தின, அவர்கள் என்ன வகையான கேள்விகளைக் கேட்டார்கள் என்று கேட்டபோது, “இவை ஆங்கில வழி கல்லூரிகள் அல்ல, பெண்கள் மிகவும் பயந்த சுபாவமுள்ளவர்கள், பொதுவாக கேள்விகளைக் கேட்க மாட்டார்கள். எனவே, திட்டங்களின் தாக்கத்தைக் கண்டறிந்து பகுப்பாய்வு செய்ய, சங்கம் வினாத்தாள்களைத் தயாரித்து, திட்டங்கள் நடத்தப் பட்ட கல்லூரிகளில் உள்ள மாணவிகளிடையே விநியோகித்தது. 450 மாணவர்களிடமிருந்து பதில்கள் சேகரிக்கப்பட்டன, மேலும் பதில்களை பகுப்பாய்வு செய்யும் பணி நடந்து கொண்டிருக்கிறது” என நிர்மலா கூறினார்,

அரசு உதவி பெறும் ஒரு கலப்பு கல்வி பள்ளியில் சமீபத்தில் ஒரு இன்டராக்ட் சங்கத்தை சங்கம் உருவாக்கியுள்ளது, ஆனால் இன்டராக்டர்களாக பெண்களை மட்டுமே தேர்ந்தெடுக்க கவனமாக உள்ளதாக சங்கத்தலைவர் கூறினார். “பெண்களின் மேம்பாட்டிற்காக தொடர்ந்து செயல்படவும், எங்கள் செய்திகளை இன்டராக்ட் சங்கம் மூலம் பரப்பவும் நாங்கள் இதைச் செய்தோம். உறுப்பினர்கள் பெண்களாக இருந்தால் உதவியாக இருக்கும், ஏனெனில் இந்த பிராந்தியத்தில் பெண்கள் ஆண்களிடம் பழக தயங்குகிறார்கள்,” என்கிறார்.

RC பர்த்மான் ஹெரிடேஜ் மொத்தம் 17 உறுப்பினர்களைக் கொண்டுள்ளது, இதில் இரண்டு பெண் உறுப்பினர்கள் மட்டுமே உள்ளனர்; முன்னதாக நான்கு பேர் இருந்தனர், ஆனால் இரண்டு பெண்கள் ரோட்டரி மற்றும் சங்கத்தில் இருந்து வெளியேறிவிட்டனர், “ஏனெனில் சில குடும்பங்களால் இரட்டை உறுப்பினர் கட்டணம் மற்றும் பிற சங்க கட்டணங்களை செலுத்த முடியாது.” இதுபோன்ற சந்தர்ப்பங்களில், தவிர்க்க முடியாமல் பெண் விலகிக் கொள்கிறார்!

ஆனால் சங்கத்தின் இரண்டாவது பெண் தலைவரான நிர்மலா, பெண்களை மேம்படுத்துவதற்கான சங்கத்தின் திட்டங்களில் பங்கேற்க உறுதியாக இருக்கிறார், “நான் கோவிட் காலத்தில் ரோட்டரி மற்றும் இந்த சங்கத்தில் சேர்ந்தேன், எங்கள் சங்கம் செய்யும் சேவை திட்டங்களை நான் விரும்புகிறேன். இந்த திட்டங்களின் நோக்கம் கல்வி, நோய் தடுப்பு விழிப்புணர்வு மற்றும் சமூகத்தில் சமமான சிகிச்சை மூலம் பெண்களின் நிலையை உயர்த்துவதன் மூலம் எங்கள் சமூகத்தில் சேவை செய்து ஒரு நேர்மறையான தாக்கத்தை ஏற்படுத்துவதாகும் என்பதை நான் அறிவேன்,” என்றார்.■





Rotary
AIM HIGH
Lead25
ROTARY INDIA LEADERSHIP CONCLAVE
#AIMHIGH | #UNITEFORGOOD | #LEAD25
Chief Guest
Presidential Address
Guest of Honor
Thiru Udhayanidhi Stalin
Hon'ble Deputy Chief Minister
of Tamil Nadu
Rtn Francesco Arezzo
Rotary International President
2025 - 26
Thiru Anbil Mahesh Poyyamozhi
Hon'ble Minister for
School Education of Tamil Nadu
REGISTRATION FEES
Pre Lead
for RI Officers & AKS Members
₹3999/-
Lead 25
for Rotarians
₹1999/-
Lead 25
for Rotaractors
₹999/-
**Including 2 Breakfasts, 2 Lunches & Grand Dinner
22nd Aug 2025 - PreLead - Hotel Feathers, Chennai | 23rd - 24th Aug 2025 - New Chennai Trade Center, Tamil Nadu
REGISTER SOON AT
www.lead25rilc.org
HIGHLIGHTS OF LEAD 25
An extraordinary opportunity to connect with Rotary Leaders from across the globe!
First-of-its-kind Leadership Conclave
Stellar lineup of Inspiring Speakers
10,000+ Rotarians, Rotaractors & Guest from Zones 4, 5, 6 & 7
Rtn AKS Er Muruganandam M (MMM)
Rotary International Director 2025-27
Convenor - Lead 25 RILC
Rtn AKS Flt Lt KP Nagesh
Rotary International Director 2025-27
Co-Convenor - Lead 25 RILC
PDG Rtn AKS Dr John Daniel
Chairman - Lead 25 RILC
PDG Rtn J Sridhar
Chairman - Pre-Lead 25
PDG Rtn AKS Muthupalaniappan
Chairman - House of Friendship
PDG Rtn I S A K Nazar
Chairman - Special Projects
PDG Rtn A Mani
Chairman - Special Projects
PDG Rtn Y Kumanan
Secretary - Lead 25 RILC
DG Rtn V Suresh
Host District Governor - 3231
DG Rtn D Devendran
Host District Governor - 3233
DG Rtn AKS Vinod Saraogi
Host District Governor - 3234
DG Rtn J Karthik
Host District Governor - 3000
Contact Details
Chairman - Lead 25 +91 92495 59999
Chairman - PreLead +91 97908 39030
Chairman - HOF +91 98410 72520
Secretary - Lead 25 +91 98947 53013
Rtn Afroze +91 75029 77555
Rtn Jaspreet Singh (Sonu) +91 98947 44499

# அமைதி: துப்பாக்கிகளின் மௌனம் அல்ல, மனசாட்சியின் விழிப்புணர்வு

அதிக் கதம்



நாம் வாழும் இக்காலத்தில், போர் அச்சுறுத்தலால் காற்று கனத்திருக்கிறது, ஆனால் குண்டு வெடிப்புகளுக்கு இடையிலான அமைதி பெரும்பாலும் அமைதியாகக் கருதப்படுகிறது. தலைப்புச் செய்திகள் போர்நிறுத்தங்களைப் பற்றி பேசுகின்றன, ஆனால் குணப்படுத்துவதைப் பற்றி பேசுவதில்லை. ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்படுகின்றன, ஆனால் இதயங்கள் உடைந்தே கிடக்கின்றன. இதற்கிடையில், ஒரு கேள்வி அவசரமாக எதிரொலிக்கிறது: 'நன்மையும் தீமையும் மனிதனால் ஆன உலகில், அமைதியை உருவாக்குபவர்களின் உண்மையான பங்கு என்ன?

ரோட்டரி இன்டர்நேஷனல் நீண்ட காலமாக உலகளாவிய சேவை, தலைமைத்துவம் மற்றும் அமைதியின் அடையாளமாக இருந்து வருகிறது. ஆனால் இன்று, நமது நோக்கம் இன்னும் ஆழமாகச் செல்ல வேண்டும். அமைதியை வன்முறை இல்லாத நிலை என்று வரையறுக்க முடியாது – அது மனித மனசாட்சியின் விழிப்புணர்வாக, கொடூரமான உலகில் இரக்கத்தைத் தேர்ந்தெடுக்கும் ஒரு செயலாகப் புரிந்துகொள்ளப்பட வேண்டும். இது இருளை அழிப்பது பற்றியது அல்ல, அதை ஒளியுடன் ஒருங்கிணைப்பது பற்றியது.

இத்தகைய சூழ்நிலையில், ரோட்டரியின் பாரம்பரியம் வெறும் சேவை மட்டுமல்ல, அது ஒரு தார்மீக அர்ப்பணிப்பு. அகதி முகாம்களில் பள்ளிகளுக்கு நிதியுதவி செய்வது முதல் பல்கலைக்கழகங்களில் அமைதி அறிஞர்களை ஒன்றிணைப்பது வரை, அமைதி மற்றும் மோதல் தீர்வுக்கான ரோட்டரியின் அர்ப்பணிப்பு ஒவ்வொரு கண்டத்தையும் தொட்டுள்ளது. ஆனால் ரோட்டரியின் அமைதி முயற்சிகளை வேறுபடுத்துவது அதன் அளவு மட்டுமல்ல – அதன் உணர்வும் கூட. ரோட்டேரியர்கள் கைதட்டலுக்காக வேலை செய்வதில்லை. அவர்கள் நீதி, உண்மை, மற்றும் கண்ணியத்துடன் இணங்குவதற்காக வேலை செய்கிறார்கள். உலகம் சரியானது என்று அவர்கள் பாசாங்கு செய்வதில்லை. அதன் குறைபாடுகள் இருந்தபோதிலும் அவர்கள் செயல்படுகிறார்கள்.

காஷ்மீரில் கிட்டத்தட்ட மூன்று தசாப்தங்களாக மோதலின் முன்னணியில் பணியாற்றிய ஒருவனாக, சரிசெய்ய முடியாத பயங்கரங்களையும் – இன்னும் வந்து சேராத குணமடைதலையும் நான் கண்டிருக்கிறேன். போரின் இடிபாடுகளில் வளர்ந்த குழந்தைகள் அன்பு, கல்வி மற்றும் நம்பிக்கையைத் தேர்ந்தெடுப்பதைப் பார்த்திருக்கிறேன். இவை ரோட்டரி தொடர்ந்து வளர்க்க வேண்டிய அமைதியான புரட்சிகள்.

### மௌனத்தை அமைதியாக கருதும் மாயை

துப்பாக்கிகள் அமைதியானால், அமைதி வந்துவிட்டது என்று பலர் நம்புகிறார்கள். ஆனால் மௌனமும் கூட அடக்கு முறையாக இருக்கலாம். ஒப்புக்கொள்ளப்படாத வலியின் மௌனம். குணப்படுத்தப்படாத காயத்தின் மௌனம். மறக்கப்பட்ட பாதிக்கப்பட்டவர்களின் மௌனம்.



காஷ்மீரில் உள்ள ஒரு பள்ளியில்
குழந்தைகளுடன் அதிக் கதம்.

உண்மையான அமைதி ஊமையல்ல. அது உயிருள்ளது. பின்வருபவை மூலம் சுவாசிக்கிறது:

- ❖ மீண்டும் கட்டப்பட்ட பள்ளிகளில் குழந்தைகள் கற்கும் குரல்கள்.
- ❖ ரோட்டரி ஆதரவு பெற்ற MMUகளில் மோதல் மண்டல காயங்களுக்கு சிகிச்சையளிக்கும் மருத்துவர்களின் கைகள்
- ❖ தலைமுறை தலைமுறையாக இருந்த பயத்தை உடைத்து புதியவைகளை உருவாக்கும் பெண்களின் தைரியம்.

ரோட்டரியின் நோக்கம் இத்தெளிவுடன் வளர வேண்டும்: நாம் வெறும் போர்களை முடிவுக்குக் கொண்டுவர இங்கே இல்லை. மனிதகுலத்தை மேம்படுத்தவே இருக்கிறோம்.


அமைதியின் பயணத்தில், சில சமயங்களில் மிகப் பெரிய பலம் அசைவற்ற நிலையில் உள்ளது. கட்டுப் படுத்தலில். உங்களால் தீங்கு விளைவிக்க முடிந்தாலும், அதைச் செய்யாமல் இருப்பதில்.

இதைக் கவனியுங்கள்: யானைகள் கண்டங்கள் விட்டு கண்டம் விமானம் மூலம் கொண்டு செல்லப்படும்போது, அவற்றின் கூண்டுகள் மென்மையான குஞ்சுகளால் நிரப்பப்படுகின்றன – தோழமைக்காக அல்ல, அதன் குணத்தின் சோதனைக்காக. வலிமைமிக்க யானை என்ன செய்கிறது? முற்றிலும் அசையாமல் நிற்கிறது. பயணம்





*காஷ்மீர் குழந்தைகளுடன் ஒரு கொண்டாட்ட நிகழ்வில் கதம்.*



முழுவதும் ஒரு குஞ்சை தற்செயலாக மிதித்துவிடலாம் என்று பயந்து யானை நகர மறுக்கிறது. இந்த அமைதியான மனசாட்சி சோதனையை உன்னதமான கருணையுடன் கடக்கிறது. பயத்தால் அல்ல. அன்பால்.

விஞ்ஞானிகள் யானைகளுக்கு, மனிதர்களைப் போலவே, சுய விழிப்புணர்வு, பச்சாதாபம் மற்றும் சிக்கலான சமூக புரிதலுடன் தொடர்புடைய அரிய ஸ்பிண்டில் செல்கள் - நியூரான்கள் இருப்பதைக் கண்டறிந்துள்ளனர். யானைகள் வெறும் உடல் ரீதியான ஜாம்பவான்கள் மட்டுமல்ல, உணர்ச்சி ரீதியான ஜாம்பவான்களும் கூட.

லியோனார்டோ டா வின்சி ஒருமுறை யானை நீதி, அடக்கம் மற்றும் சமநிலையுடன் வாழ்கிறது என்று கூறியுள்ளார். அது தன்னை தூய்மைப்படுத்த குளிக்கிறது, மந்தைக்கு முன் இனப்பெருக்கம் செய்வதில்லை, தனியாக நடப்பதில்லை, மரணம் நெருங்கும் போது குழுவை விட்டு தனியாக சென்று இறக்கிறது.

இது நமக்கு என்ன கற்றுக் கொடுக்கிறது? அமைதி செயலற்றது அல்ல. அது உள் தெளிவு மற்றும் மென்மையான சக்தியின் செயல். இது எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்கள் பாதிக்கப்படாமல் இருக்க உறுதியாக நிற்பதாகும். இது ஆதிக்கத்திற்கு பதிலாக கட்டுப்பாட்டையும், வெளிப்படுத்துதலுக்கு பதிலாக கண்ணியத்தையும் மற்றும் மிருகத் தனத்திற்கு பதிலாக சமநிலையையும் தேர்ந்தெடுப்பதாகும்.

ரோட்டேரியர்களாகவும், உலக குடிமக்களாகவும் நாம் நமது சொந்த எடையை அத்தகைய கருணையுடன் சுமக்கக் கற்றுக் கொண்டால் - அமைதியின் பயணம், அந்த யானையின் விமானப் பயணம் போல, சீராக இருக்க முடியும்.

மோதல் மனிதகுலத்திற்கு அந்நியமானது அல்ல - அது ஒரு கண்ணாடி. நாம் எங்கு இன்னும் பிளவுபட்டு இருக்கிறோம் என்பதைக் காட்டுகிறது, நாடுகளாக மட்டுமல்ல, ஆன்மாக்களாகவும்.

*அமைதியின் பயணத்தில், சில சமயங்களில் மிகப் பெரிய பலம் அசைவற்ற நிலையில் உள்ளது. உங்களால் தீங்கு விளைவிக்க முடிந்தாலும், அதைச் செய்யாமல் இருப்பதில்.*

குழந்தைகள் ஒரு காலத்தில் துப்பாக்கிச்சூட்டின் சத்தத்தின் கீழ் தூங்கிய இடங்களில் கல்வி, தங்குமிடம் மற்றும் குணமளிக்கும் வசதிகளை வழங்க ரோட்டரி எங்களுக்கு உதவியுள்ளது.

என் குரு ஒருமுறை என்னிடம் சொன்னார்: "வன்முறை கூட மனித பரிணாம வளர்ச்சியில் ஒரு இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால் அதை மறுப்பதன் மூலம் அகற்றுவது உண்மையான வழியல்ல, அதை புரிந்துகொள்வதன் மூலம் மேம்படுத்துவதே ஆகும்."

உலக அமைதிக்கான ரோட்டரியின் பணி ஒரு கற்பனைக் கனவு அல்ல. அது யதார்த்தத்தின் ஒரு துணிச்சலான எதிர்கொள்ளல். அது நம்மை சிலவற்றை ஏற்றுக்கொள்வதற்கு அழைக்கிறது:

- நன்மையும் தீமையும் மனிதனால் ஆனவை.
- கண்ணியம் இல்லாமல் எந்த அமைதியும் நிலைக்காது.
- உண்மையான மாற்றம் நமது முழுமையைத் தழுவலைக் கோருகிறது.

**உலகளாவிய நெருக்கடி காலத்தில் ரோட்டரியின் பங்கு**

ஐரோப்பாவிலிருந்து மத்திய கிழக்கு வரையிலும், ஆசியாவின் மெல்லிய எல்லைகளிலிருந்து ஆப்பிரிக்காவின் மறக்கப்பட்ட போர்கள் வரையிலும் – உலகம் பல பிராந்திய மோதலின் விளிம்பில் தடுமாறிக் கொண்டிருக்கும் நிலையில், ரோட்டரி ஒரு அமைதியான பார்வையாளராக இருக்க முடியாது. அது ஒரு தார்மீக திசைகாட்டியாக இருக்க வேண்டும்.

**இதோ எப்படி:**

**தைரியமாகப் பேசுங்கள், அச்சமின்றி செயல்படுங்கள்:** ரோட்டரி வெறும் போர்நிறுத்தங்களுக்கு மட்டுமல்லாமல், கலாச்சாரங்கள், சித்தாந்தங்கள் மற்றும் வரலாறுகள் முழுவதும் ஆழமான நல்லிணக்கத்தை வலியுறுத்தும் ஒரு உலகளாவிய குரலாக வேண்டும்.

**உள்ளிருந்து உருவாக்குங்கள்:** அமைதி உருவாக்கம் தனிப்பட்ட மாற்றத்திலிருந்து தொடங்க வேண்டும். இளைஞர் கூட்டங்கள், அமைதி உதவித்தொகைகள் மற்றும் தலைமைத்துவ திட்டங்கள் பச்சாதாபம், உணர்ச்சி நுண்ணறிவு மற்றும் பல மத புரிதலை வலியுறுத்த வேண்டும்.

**ஒரு புதிய கதையை விவரித்தல்:** போரினால் சூழப்பட்ட உலகில், ரோட்டரி புதிய கதைகளை – கருணை, மீட்சி, மக்கள் எவ்வாறு குணமடைகிறார்கள் – சொல்ல வேண்டும். நாம் போர்க்கள வெற்றிகளை வெளியிடுவது போலவே அமைதி வெற்றிகளையும் ஆர்வத்துடன் வெளியிடுவோம்.

**குணப்படுத்துங்கள், வெறும் உதவுதல் வேண்டாம்:** மனநலம், அதிர்ச்சி-சார்ந்த பராமரிப்பு மற்றும் சமூக பின்னடைவை ஒருங்கிணைக்கும் திட்டங்களை ஆதரிக்கவும் – குறிப்பாக போரில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு.

**உரையாடல் மூலம் பிளவுகளை இணைத்தல்:** துருவமுனைப்பு வளரும் ஒவ்வொரு பிராந்தியத்திலும், ரோட்டரி மரியாதைக்குரிய உரையாடலுக்கான இடங்களைத் தொடங்க வேண்டும். அமைதி பெரும்பாலும் கேட்பதிலிருந்து பிறக்கிறது.

**ஆன்மீக ஞானத்தையும் நடைமுறை கொள்கையையும் ஒன்றிணைத்தல்:** ஆன்மீகத் தலைவர்கள், பழங்குடி அறிவு கொண்டவர்கள் மற்றும் நவீன இராஜதந்திரிகளை சிக்கல் தீர்க்கும் ஒரு பகிரப்பட்ட இடத்திற்கு அழைக்கவும்.





இதயங்கள் வழிநடத்தும் போது,
மனங்கள் பின்தொடரும்.



**காஷ்மீர்: எனது வாழும் சாட்சியம்**

மோதல்களால் பாதிக்கப்பட்ட காஷ்மீரில் நாங்கள் நடத்தும் வளர்ப்பு இல்லங்களில், இந்த உண்மையை நான் கண்டிருக்கிறேன்: அமைதி தானாக வருவதில்லை. அது வளர்க்கப்பட வேண்டும். குழந்தைகள் ஒரு காலத்தில் துப்பாக்கிச்சூட்டின் சத்தத்தின் கீழ் தூங்கிய இடங்களில் கல்வி, தங்குமிடம் மற்றும் குணமளிக்கும் வசதிகளை வழங்க ரோட்டரி எங்களுக்கு உதவியுள்ளது. இந்தச் சிறுமிகள் - பலரும் வன்முறையால் அனாதையாக்கப்பட்டவர்கள் - இப்போது செவிலியர்கள், ஆசிரியர்கள் மற்றும் அமைதியை உருவாக்குபவர்களாக மாறுகிறார்கள். அதுதான் ரோட்டரி புரட்சி: சத்தத்தில் அல்ல, அமைதியான மாற்றத்தில்.

**முழுமையின் பாதையாக அமைதி**

அமைதி என்பது பங்கேற்பாகும்- வாழ்க்கையில், உண்மையில், அனைவருக்கும் கண்ணியத்தில்.

யார் சரி, யார் தவறு என்று தீர்மானிக்க ரோட்டேரியர்களாகிய நாம் இங்கு இல்லை. வலி மற்றும் சாத்தியம் இரண்டும் இருக்கும் ஒரு இடத்தை வைத்திருக்க இங்கு இருக்கிறோம். நாம் இங்கு ஒரு பாலமாக இருக்கிறோம் - நீதிபதியாக அல்ல; புகலிடமாக - வாளாக அல்ல.

உலகம் அமைதியாக மாறும் வரை காத்திருக்க வேண்டாம். புயலுக்குள் அமைதியாக நாமே மாறுவோம். போரின் முடிவாக அமைதியைத் தேட வேண்டாம், ஆனால் விழிப்புணர்வின் தொடக்கமாக அமைதியைத் தேடுவோம். ஏனென்றால், இறுதியில், அமைதி என்பது துப்பாக்கிகளை அமைதிப்படுத்துவது பற்றியது அல்ல. அது மனிதகுலத்தின் மனசாட்சியை எழுப்புவது பற்றியது - மேலும் நாம் அனைவரும் இன்னும் முழுமை பெறுகிறோம் என்பதை உலகிற்கு நினைவூட்டுவது பற்றியது.

**ஆசிரியர்**

அதிக் கதம் Borderless World அறக்கட்டளையின் நிறுவனர். இவர் கடந்த 27 ஆண்டுகளாக ஜம்மு காஷ்மீரின் மோதல் நிறைந்த பகுதிகளில் விரிவாகப் பணியாற்றி வருகிறார். அனாதை இல்லப் பராமரிப்பு, நடமாடும் மருத்துவ சேவைகள் மற்றும் கல்வித் திட்டங்கள் மூலம், அமைதி கண்ணியத்துடன் தொடங்குகிறது என்ற தத்துவத்தை இவரது பணி பிரதிபலிக்கிறது.

வடிவமைப்பு:
கிருஷ்ணப்ரதீஷ் S

Rotary PEOPLE OF ACTION

# மருத்துவ ரோட்டராக்டர்களின் சேவை

ஜெய்ஸ்ரீ

ரோட்டராக்ட் கிளப் அஃப் மெடிக்ரூ, ரோட்டரி கிளப் ஆஃப் பம்பாய் பியர், RID 3141 மூலம் 2020-ல் தொடங்கப்பட்டது. இந்த சங்கம் இந்தியா, அமெரிக்கா, இங்கிலாந்து, சுவிட்சர்லாந்து, ஆஸ்திரேலியா, நேபாளம், பாகிஸ்தான், பெல்ஜியம், ஐக்கிய அரபு அமீரகம் மற்றும் கனடாவைச் சேர்ந்த 6,102 மருத்துவ மாணவர் ரோட்டராக்டர்களைக் கொண்டுள்ளது. “சங்கம் மும்பையில் தொடங்கப்பட்டதால், நாங்கள் RID 3141-ன் ஒரு பகுதியாக இருக்கிறோம்,” என்கிறார் சங்கத்தின் முன்னாள் தலைவரும், மும்பை K J சோமையா மருத்துவக் கல்லூரியின் இறுதி ஆண்டு MBBS மாணவியுமான சலோனி ஷா. தனது முதல் ஆண்டில் சங்கத்தில் சேர்ந்தார், அதற்காக இன்றும் அர்ப்பணிப்புடன் இருக்கிறார்.

இந்தியாவில் 37 நகரங்களிலும் உலகளவில் 50 நகரங்களிலும் உறுப் பினர்களைக் கொண்டுள்ள இச்சங்கம், சில ஆண்டு களுக்கு முன்பு 3,000 உறுப்பினர்களாக இருந்த பலத்தை இரட்டிப்பாக்கியுள்ளது. “மகாராஷ்டிரா, குஜராத் மற்றும் தென்னிந்தியாவில் எங்களுக்கு எப்போதும் ஒரு வலுவான அடித்தளம் இருந்தாலும், இந்த ஆண்டு குர்கான், டெல்லி, ஃபரிதாபாத் மற்றும் கிழக்கு இந்தியாவிலிருந்தும் உறுப்பினர்கள் அதிகரிப்பதைக் காண்கிறோம்,” என்று அவர் கூறுகிறார்.

கடந்த ஐந்து ஆண்டுகளில், மெடிக்ரூ ரோட்டராக்டர்கள் பல்வேறு தாக்கமிக்க சேவைகளை முன்னெடுத்துள்ளனர். 2024-25-ல் மட்டும், இந்தியா முழுவதும் 479 நிகழ்வுகளை ஏற்பாடு செய்தனர். அவர்களின் முதன்மை திட்டங்களில் ஒன்று, மருத்துவம் சார்ந்த தொழில் களைப் பின்தொடர விரும்பும் 1,000-க்கும் மேற்பட்ட உயர்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு வழிகாட்டும் வருடாந்திர வெபினார் ஆகும். “அவர்களில் பலர் மருத்துவர் களாக விரும்புகிறார்கள், ஆனால் விருப்பங்களும் பாதையும் குறித்து அவர்களுக்கு தெரியவில்லை,” என்று அவர் விளக்குகிறார். இந்த அமர்வுகள் பல்வேறு மருத்துவப் படிப்புகள், நிறுவனங்கள் மற்றும் ஒவ்வொரு துறையிலிருந்தும் என்ன எதிர்பார்க்கலாம் என்பது குறித்து தெளிவுபடுத்துகின்றன.

ஒவ்வொரு ரோட்டராக்டரும் தங்கள் உள்ளூர் சமூகத்தின் தேவைகளின் அடிப்படையில் பங்களிக்கின்றனர், மேலும் சேவை திட்டங்களின் புகைப்படங்கள் சங்க இணையதளத்தில் பதிவேற்றப் படுகின்றன திட்டங்கள் சங்கத்தின் மூல குழு மற்றும் இயக்குநர்கள் குழுவால் திட்டமிடப்பட்டு ஒப்புதல் பெறுகின்றன மனிதவள மேம்பாட்டு துணைக்குழு, மாநில இயக்குநர்கள் மற்றும் சர்வதேச தூதர்களுடன் சேர்ந்து செயல்பாடுகளையும் சேர்க்கைகளையும் ஒருங்கிணைக் கிறது”தனிப்பட்ட நெட்வொர்க்குகள் மற்றும் இன்ஸ்டாகிராம் வழியாக தூதர்கள் நியமிக்கப்படுகிறார்கள்; அவர்கள் பின்னர் சேர்க்கைகளை கையாளுகிறார்கள்” என சலோனி கூறுகிறார். புதிய உறுப்பினர்களுக்கு, சங்கத்தின் கடந்த முயற்சிகள், நெட்வொர்க்கிங் வாய்ப்புகள் மற்றும் சமூக சேவையுடன் தனிப்பட்ட வளர்ச்சியையும் உள்ளடக்கிய எதிர்கால திட்டங்களை அறிமுகப்படுத்த நோக்குநிலை நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன.

மருத்துவ மாணவர்களின் சங்கம் என்பதால், உடல்நலம் தொடர்பான



*முதியோர் இல்லத்தில் ரோட்டராக்டர்கள் ஒரு முதியவருக்கு இரத்த குளுக்கோஸ் அளவை பரிசோதிக்கின்றனர்.*



சென்னைப் பள்ளியில் ஒரு பல் மருத்துவ முகாம்.



ரோட்டராக்டர்கள் குழந்தைகளிடையே இரத்த சோகை பற்றிய விழிப்புணர்வை ஊக்குவிக்கின்றனர்.

திட்டங்கள் அவர்களின் சேவையில் முக்கியமானவை அதன் ஒரு பகுதியாக, டயபவோ், உள்ளூர் கூட்டாளர்களுடன் இணைந்து நாடு முழுவதும் நீரிழிவு மற்றும் இரத்த அழுத்த பரிசோதனை முகாம்களை நடத்தியது. இதில் உடனடி அளவீடுகள், தனிப்பயனாக்கப்பட்ட சுகாதார ஆலோசனை மற்றும் மருத்துவ பரிந்துரைகள் வழங்கப்பட்டன. “நோயறிதலுக்கு மட்டும் அல்ல, சுகாதார கல்வியையும் பரப்புவதே எங்கள் நோக்கம்,”என்று புனேவைச் சேர்ந்த சங்கத்தலைவர் ஜெசிகா குப்தே கூறுகிறார். மும்பையில், ரோட்டரி கிளப் ஆஃப் பாம்பே பியர், மும்பை மற்றும் டௌன் டவுன் சீலேண்ட் ஆகியவை இம்முயற்சியில் பங்கேற்றன.

மற்றொரு முக்கிய திட்டமான ‘ரக்த் கி சக்தி’ மூலம், மும்பையில் உள்ள பள்ளிகள் மற்றும் பின்தங்கிய பகுதிகளில் விழிப்புணர்வு மற்றும் பரிசோதனை முகாம்கள் நடத்தப்பட்டு இரும்புச்சத்து குறைபாடு இரத்த சோகம் தடுக்கும் நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டது. பூமி மற்றும் யுவா ஆகிய தொண்டு அமைப்புகளுடன் இணைந்து, பங்கேற்பாளர்களுக்கு அறிகுறிகள், இரும்புச்சத்து நிறைந்த உணவுகள் மற்றும் புழுத்தொல்லை போன்ற காரணங்களைப் பற்றிய கல்வி வழங்கப்பட்டது. மேலும், இளம்



குழந்தைகள் பாலியல் துஷ்பிரயோகம் குறித்து பள்ளி ஆசிரியர்களுக்கு கல்வி கற்பிக்கும் ஒரு ரோட்டராக்டர்.

பெண்கள் மற்றும் ஆபத்தான நிலைமை உள்ள பெண்களுக்கு இரும்புச்சத்து மாத்திரைகள் வழங்கப் பட்டன.

ஸ்மைல் ட்ரெய்ன் இந்தியாவுடன் இணைந்து நாடு முழுவதும் நடத்தப் பட்ட லிஃப்ட் தி லிப் பல் பரிசோதனை முகாம், குழந்தைகளில் பல் பிரச்சனைகள் மற்றும் பிளவுபட்ட உதடுகளை ஆரம்ப கட்டத்திலேயே கண்டறியைக் கவனம் செலுத்தியது. மும்பை, புனே, டெல்லி, பெங்களூரு மற்றும் சென்னை ஆகிய நகரங்களில் நடந்த இந்த ஒரு வார முகாமில் பல் மற்றும் மேக்சிலோஃபேஷியல் அறுவை நிபுணர்கள், ஆர்த்தோடோன் டிஸ்டுகள் மற்றும் 50 தன்னார்வலர்கள் பங்கேற்றனர். 200-க்கும் மேற்பட்ட குழந்தைகள் பரிசோதிக்கப்பட்டு, அவர்களில் பலர் இலவச பிளவுபட்ட உதடு அறுவை சிகிச்சைக்கு பரிந்துரைக்கப் பட்டனர். பிளவுபட்ட உதடு சிகிச்சை மூலம் குணப்படுத்தக் கூடியது என்பதும், அறுவை சிகிச்சைக்கு பிந்தைய ஆதரவு முக்கியம் என்பதும் குடும்பங்களுக்கு விளக்கப்பட்டது.



RAC மெடிக்ருவின் ரோட்டராக்டர்கள் குழந்தைகளுடன் பள்ளிப் பொருட்களை வழங்கிய பிறகு.

குழந்தைகள் மீதான பாலியல் துஷ்பிரயோகம் போன்ற உணர்வுப்பூர்வ பிரச்சினையை எதிர்கொள்வதற்காக, சங்கம் "ஷீல்டிங் இன்னொசென்ஸ்" திட்டத்தை தொடங்கியது. தன்னார் வலர்கள் குழந்தை உளவியல் மற்றும் சட்ட நடைமுறைகளில் பயிற்சி பெற்று, மென்மையான கேள்விகள் கேட்பது மற்றும் புகார் நடைமுறைகளைப் புரிந்துகொள்வது ஆகியவற்றைக் கற்றுக்கொண்டனர். அவர்கள் பாதுகாப்பான மற்றும் பாதுகாப்பற்ற தொடுதல் குறித்து அமர்வுகளை நடத்தினர் மற்றும் மூத்த குழந்தைகளுக்கு சட்ட உரிமைகள் மற்றும் கிடைக்கக்கூடிய ஆதரவு வழிமுறைகள் குறித்து கல்வி அளித்தனர்.

"சிக்ஷா" திட்டத்தின் மூலம், பள்ளிப் பொருட்கள் நன்கொடையாக வழங்கப் பட்டு, தொழில் ஆலோசனைகள் நடத்தி, அனாதை குழந்தைகளுக்கு கல்வி ஆதரவு வழங்கப்பட்டது. கல்லூரி கேண்டீன்களில் நன்கொடைப் பெட்டிகள் வைத்து, பணம் அல்லது பொருள்களால் பங்களிக்க ஊக்குவிக்கப்பட்டது. இந்த ஆண்டு மட்டும் 35 அனாதை இல்லங்களில் உள்ள 1,600 குழந்தைகள் இதன் மூலம் பயனடைந்தனர்.

'ஃபவுண்டேஷன்ஸ் ஃபார் ஃபியூச்சர் என்ற கல்வி திட்டம், 6–14 வயதுடைய ஏழை குழந்தைகளுக்கான கணிதம், அறிவியல் மற்றும் மொழி ஆகியவற்றில் அடிப்படை கல்வியைத் தருகிறது. சைல்ட் ரைட்ஸ் அண்ட் யூ மற்றும் 'ராபின்ஹூட் ஆர்மி ஆகிய அமைப்புகளுடன் இணைந்து நடத்தப்பட்ட வார இறுதி வகுப்புகள், கல்வி கருத்துக்களை விளையாட்டுத் தனத்துடன் இணைத்தன. "பாரம்பரிய விரிவுரைகளுக்குப் பதிலாக, மகிழ்ச்சியான ஈடுபாட்டில் நாங்கள் கவனம் செலுத்தினோம்," என்கிறார் ஜெசிகா.

அடிப்படை எண்கணிதம் கற்றுக்கொடுக்க கணித ரிலே, சொல்லகராதிக்கு 'ஹேங்மேன் விளையாட்டு, இந்தியை வலுப் படுத்தும் கவிதை வாசிப்பு, சுற்றியுள்ள அறிவியலை உணர இயற்கைப் பயணம் என பல புதுமையான வழிகள் பின்பற்றப்பட்டன. "அறிவியல் மற்றும் ஆங்கில வினாடி வினா குழுக்களை உற்சாகமாக வைத்தது; கேட்பெரி சாக்லேட்டுகள் பின்னங்கள் மற்றும் தசம எண்கள் கற்றலில் உதவின. லேடிபேர்ட் கதைப்புத்தகங்கள் மூலம் பாத்திர நடிப்பு நடத்தி வாசிப்பு திறனை மதிப்பிடப்பட்டது, பஞ்சதந்திரக் கதைகளை சொந்த வார்த்தைகளில் சொல்லும் கதைச்சுற்றமும் நடந்தது." இந்த அமர்வுகள் கலாச்சார கற்றலையும் வலியுறுத்தின, விழா அடிப்படையிலான செயல்பாடுகள் மற்றும் போட்டிகள் ஒற்றுமை மற்றும் மன நலனை வளர்த்தன.

மும்பையைச் சேர்ந்த வரவிருக்கும் தலைவர் ராதாராணி, அடுத்த ஆண்டு (2025–26) இந்த முயற்சியைத் தொடரவும், மேலும் சில அர்த்தமுள்ள சேவை திட்டங்களைச் சேர்க்கவும் தயாராக உள்ளார் என்று சலோனி கூறுகிறார்.■

# 70 ஆண்டுகளை எட்டிய RC KGF

ரோட்டரி செய்திக்குழு

RID 3191-ன் DG சதீஷ் மாதவன், சமீபத்தில் சங்கத்திற்கு விஜயம் செய்த போது, கோலார் தங்க வயல்களில் தனது ஆரம்பகால வாழ்க்கையின் இனிய நினைவுகளையும், மே மாதத்தில் 70 ஆண்டுகளை நிறைவு செய்த RC கோலார் கோல்ட் பீல்ட்ஸ் உடனான தனது உணர்ச்சிபூர்வமான தொடர்பையும் நினைவுகூர்ந்தார்.

மாவட்ட ஆளுநர்கள் சங்கத்திற்கு வரும் போதெல்லாம், ஒரு பிரிட்டிஷ் கால கட்டிடமான KGF கிளப்பில் விருந்துக்கு ஏற்பாடு செய்வார்கள், மேலும் "அனைத்து ரோட்டேரியர்களும் கருப்பு கால்சட்டை மற்றும் வெள்ளைக் கோட்டுடன் வருவார்கள்" என்று சங்க உறுப்பினர் V R பிரசாத் கூறுகிறார். "விருந்தில் ஏழு அல்லது எட்டு வகையான உணவுகள் இருக்கும், இந்தியாவின் ஜனாதிபதி மற்றும் பிரதமருக்கு ஒரு டோஸ்டுடன் தொடங்கி, RI தலைவருக்கு, பின்னர் வருகை தரும் ரோட்டரி ஆளுநருக்கு என வரிசையாக டோஸ்டுகள் இருக்கும். இந்த ஏற்பாடுகள் கண்களுக்கு விருந்தாக அமைந்தன. வருகை தந்த பெங்களூர் உறுப்பினர்கள் எங்கள் ஏற்பாடுகளை மிகவும் பாராட்டினர்."

சங்கத்தின் மற்றொரு சிறப்பம்சம், அதன் அனைத்து உறுப்பினர்களும் ஒவ்வொரு செவ்வாய்க்கிழமையும் மாலை 6.30 மணிக்கெல்லாம் KGF கிளப்பில் இரவு 7 மணிக்கு நடைபெறும் வாராந்திர சந்திப்பிற்காக வந்துவிடுவார்கள். "கூட்டம் சரியான நேரத்தில் தொடங்கி, விருந்தினர் பேச்சாளர் இருந்தால் தவிர, நிச்சயமாக இரவு 7.30 மணிக்கு முடிந்துவிடும்" என்று பிரசாத் கூறுகிறார். அதன் புகழ்பெற்ற பயணத்தில், டாக்டர் TMA பாய், உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி K S ஹெக்டே, அப்போதைய மெட்ராஸைச் சேர்ந்த அறிஞர் APS ஐயங்கார், முன்னாள் மத்திய அமைச்சர் T A பாய், பம்பாயைச் சேர்ந்த இலக்கியவாதி சோபியா வாடியா, இல்லஸ்ட்ரேட்டட் வீக்லியின் முன்னாள் ஆசிரியர் M V காமத், கர்நாடக உயர் நீதிமன்ற முன்னாள் தலைமை நீதிபதி நித்தூர் ஸ்ரீனிவாஸ், மற்றும் முன்னாள் கர்நாடக முதல்வர் P D ஜாட்டி உள்ளிட்ட பல பிரபலங்கள் சங்கத்தில் உரையாற்றியுள்ளனர்.

லட்சுமி சாகர் கிராமத்தில் ஒரு ஆரம்பப் பள்ளி கட்டுதல், 1966-ல் KGF பொது மருத்துவமனையில் இரண்டு காசநோய் வார்டுகள், மற்றும் வெள்ளி விழா ஆண்டின் முதல் நாளில் கால்நடை மருத்துவமனையில் விலங்குகளுக்கான மீட்பு இல்லம் ஆகியவை சங்கத்தின் குறிப்பிடத்தக்க திட்டங்களாகும்.

1994-ம் ஆண்டில், அமெரிக்காவைச் சேர்ந்த டாக்டர் ஆல்பர்ட் ஆலே அவர்களின் குழுவினருடன் இணைந்து ஒரு பெரிய IOL அறுவை சிகிச்சை முகாம் நடத்தப்பட்டது. "நாங்கள் பல ஆண்டுகளாக ஏராளமான கிராமங்களுக்கு குடிநீர் வழங்கியுள்ளோம்; மேலும் கிராமப்புற பள்ளிகளுக்கு தளபாடங்கள் மற்றும் புத்தகங்களை நன்கொடையாக வழங்கியுள்ளோம்." கர்நாடக புற்றுநோய் சங்கத்துடன் இணைந்து 1977-ல் நடைபெற்ற புற்றுநோய் கண்டறியும் முகாம், மற்றும் 1993, 2015-ம் ஆண்டுகளில் RCக்கள் கோலார், முல்பகல் சென்டரல் மற்றும் பங்கார்பேட் இன் ஆதரவுடன் நடத்தப்பட்ட இரண்டு ICGF (சர்வதேச உலகளாவிய சகோதரத்துவ மாநாடு) சங்கத்தின் பொது உருவத்தை உயர்த்தியது. மரம் நடும் இயக்கம், இரத்த தான முகாம்கள், RYLA, புற்றுநோய் கண்டறியும் முகாம்கள், பள்ளி மற்றும் கல்லூரிகளில் வினாடி வினா மற்றும் விவாதங்கள் போன்ற தற்போதைய திட்டங்கள் KGF மக்களிடையே சங்கத்தின் வலுவான வெளிப்பாட்டை உருவாக்கியுள்ளன.

1955-ம் ஆண்டில் RC பெங்களூரால் சங்கம் ஸ்பான்சர் செய்யப்பட்டபோது, ஆங்கிலேயர்கள், தங்கச் சுரங்கங்களின் அதிகாரிகள் மற்றும் KGF, கோலார் மற்றும் குப்பம் தாலுகாக்களின் முக்கிய குடிமக்கள் அடங்கிய 40 பட்டய உறுப்பினர்கள் இருந்தனர்.■

*RC KGF-ன் வாராந்திர கூட்டங்கள் நடைபெறும் KGF கிளப்.*



# கால்கரி மாநாட்டின் தருணங்கள்

எடெல்கா லெஹோக்சி



கனடாவின் கால்கரியில் நடைபெற்ற 2025 ரோட்டரி சர்வதேச மாநாடு, தோழமையுடனும் புத்துணர்ச்சியுடனும் நிறைவடைந்தது. இந்த நிகழ்வின் நிறைவு அமர்வில் உரையாற்றிய RI தலைவர் ஸ்டெபனி ஆர்ச்சிக், உறுப்பினர்கள் தங்கள் உறவுகளின் பலத்தை அங்கீகரிக்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

"ரோட்டரியின் மிகவும் சக்தி வாய்ந்த சொத்து எப்போதும் எங்கள் உறுப்பினர்களாகிய நீங்கள்தான். ஆனால் நமக்கு அருகில் இருப்பவர்களால் தான் நாமும் பலம் வாய்ந்தவர்கள்" என்று அவர் கூறினார். "நாம் இலக்குகள் மற்றும் உத்திகள் பற்றி நிறைய பேசுகிறோம். ஆனால் நட்பு இல்லாமல், ஊக்கம் இல்லாமல், எதுவும் நிலைக்காது. நாம் இங்கு சேர்ந்திருப்பதால் தான் ரோட்டரி செயல்படுகிறது. இது நமது சமூகம், இது தான் முக்கியம்."

இந்த அமர்வில் ரோட்டரியின் வருங்காலத் தலைவர்களும் கலந்து கொண்டனர். தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர் ஃபிரான்செஸ்கோ அரேஸோ, 2025–26-ஆம் ஆண்டிற்கான "நன்மைக்காக ஒன்று படுங்கள்" என்ற தலைமைத்துவ செய்திக்கான தனது உறுதிப் பாட்டை விளக்கினார். "இதன் பொருள் அனைத்து உறுப்பினர்களையும் நமது சேவையில் ஈடுபடுத்துவது. இதன் பொருள் கூட்டாளர் அமைப்புகள்... உள்ளூர் நிர்வாகங்கள், பிற தன்னார்வ சங்கங்கள் ஆகியவற்றை ஈடுபடுத்துவது. சுருக்கமாக, நமது எல்லையை விரிவுபடுத்துவது என்று அர்த்தம். நம்மை ஒன்றிணைக்கும், நம்மை உற்சாகப்படுத்தும், உலகையும் நமது வாழ்க்கையையும் மாற்றும் ஒரு பெரிய பகிரப்பட்ட கனவை உருவாக்குவோம்" என்று அரேஸோ கூறினார்.

தன்னுடைய திக்குவாய் காரணமாக முன்பு சங்கத் தலைவர் மற்றும் மாவட்ட ஆளுநர் போன்ற பதவிகளை ஏற்க விரும்பவில்லை என்று அவர் கூறினார், ஆனால் ரோட்டரி உறுப்பினர்களின் பெருமளவிலான ஆதரவு அவரை சம்மதிக்க வைத்தது, அதன் பிறகு அவர் ஒரு RI இயக்குநராகவும், இப்போது தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவராகவும் பணியாற்றினார். "ரோட்டரியில் நான் எப்போதும் கண்ட ஆதரவையும் பாசத்தையும் நீங்கள் எனக்குத் தருவீர்கள் என்று நான் நம்புகிறேன்," என்றார்.

மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், பல நாட்கள் செலவிட்டு, தங்கள் தாக்கத்தை அதிகரிக்க பல்வேறு வழிகளை ஆராய்ந்தனர். ஒரு பிரேக்அவுட் அமர்வு, "தி அமேசிங் பீஸ் ரேஸ்," சங்கங்கள் எவ்வாறு நேர்மறை அமைதியின் எட்டு தூண்களை தங்கள் திட்டங்களில் இணைக்கலாம் என்பதை ஆராய்ந்தது. "லிட்ரசி அலைவ்" என்ற அமர்வு, பெலிஸில் உள்ள குழந்தைகளின் ஆரம்பகால வாசிப்பு திறன்களை வளர்ப்பதற்கான ஒரு முயற்சியின் வெற்றியில் கவனம் செலுத்தியது.

உலகம் முழுவதும் மனித கடத்தலை எதிர்த்துப் போராடும் அடிமைத்தனத்திற்கு எதிரான ரோட்டரி நடவடிக்கை குழுவால் ஒரு கூட்டம் நிறைந்த அமர்வு நடத்தப்பட்டது.

வாரத்தின் தொடக்கத்தில், இந்த நடவடிக்கை குழு கால்கரி நகரின் மையப்பகுதியில் ஒரு நிரந்தர அமைதி கம்பத்தை திறந்து வைத்தது. இந்த அமர்வில் கனடிய இலாப நோக்கற்ற நிறுவனமான ஒன்சைல்டடின் நிறுவனர் மற்றும் தலைவர் செரில் பெரேரா கலந்துகொண்டார், இவர் 2025 நோபல் அமைதி பரிசுக்கு பரிந்துரைக்கப்பட்டவர். ஒரு டீனேஜராக இருந்தபோதே குழந்தை கடத்தலை எதிர்த்துப் போராடும் வழியைத் தேடி, இலங்கையில் அரசு மேற்கொண்ட ஒரு ரகசிய நடவடிக்கையில் அவர் ஒரு தூண்டிலாக எப்படி செயல்பட்டார் என்பதை அவர் விவரித்தார். "குழந்தை பாலியல் வர்த்தகத்தைப் பற்றி உள்ளிருந்து தெரிந்துகொள்ள விரும்பினேன், மேலும் குழந்தைகளைப் பாதுகாக்கும் அரசுத் துறையில் உள்ள ஒருவரைத் தொடர்புகொண்டு, ஒரு ரகசிய நடவடிக்கை நடப்பதைப் பார்க்க ஏதேனும் வழி உள்ளதா என்று



பிரதிநிதிகளிடையே உரையாற்றும் RI தலைவர் பிரான்செஸ்கோ அரேஸ்ஸோ.

கேட்டேன். ‘அவர், உண்டு, நீங்கள் ஒரு தூண்டிலாகச் செயல்படலாம் என்று கூறினார்.”

ஒரு குற்றவாளியைப் பிடிக்கவும் கைது செய்யவும் பெரேரா உதவினார். இந்த அனுபவம் அவரது அர்ப்பணிப்பை உறுதிப்படுத்தியது மற்றும் குழந்தை கடத்தல் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த குழந்தைகளையும், டீனேஜர்களையும் திரட்டும் ஒன்சைல்ட் என்ற அமைப்பை அவர் நிறுவுவதற்கு ஒரு காரணமாக இருந்தது.

ஹவுஸ் அஃப் ஃபிரண்ட்ஷிப் கண்காட்சி அரங்கில், ரோட்டரி மாவட்டம் 5360 (கனடாவின் ஆல்பர்ட்டா மற்றும் சஸ்காட்செவன் பகுதிகள்) ஆதரவுடன் நிறுவப்பட்ட 20 அடி உயர டிபி குடிசையை தவறவிட முடியாது. இந்த டிபி, பூர்வீக மக்களின் கவலைகள் குறித்து பார்வையாளர்களுக்குத் தெரிவிக்க ஏராளமான கற்றல் கருவிகளுடன் பொருத்தப்பட்டிருந்தது.

“இந்த கண்காட்சியை ஒரு மாவட்டமாக ஆதரிப்பதில் நாங்கள் மிகவும் பெருமைப்படுகிறோம், ஆனால் இது கடைசி கண்காட்சியாக இருக்கவும் நாங்கள் விரும்பவில்லை,” என்று 2023 ரோட்டரி பீப்பிள் ஆஃப் ஆக்ஷன் விருது பெற்ற கேம் ஸ்டீவர்ட் கூறினார். “உலகம் முழுவதும் உள்ள ரோட்டரி உறுப்பினர்கள் தங்கள் பூர்வீக மக்களுடன் மேலும் பணியாற்ற உதவ விரும்புகிறோம்.”



**இடமிருந்து:** RI *பொதுச் செயலாளர் ஜான் ஹியூகோ, அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக், வானதி, சூசேன், மார்கா மற்றும்* PRIP K R *ரவீந்திரன்.*





RI *தலைவர் அரேஸ்ஸோ,* RID M *முருகானந்தம்* (இடமிருந்து 4வது) *உள்ளிட்ட புதிய இயக்குநர்களுடன்.*



**மேலே:** *முன்னாள் ரோட்டரி தலைவர்கள் மற்றும் அவர்களது துணைவியார்களுடன் RI தலைவர் அரேஸ்ஸோ.*

**இடது:** *PRIP-கள் கல்யாண் பானர்ஜி, ரவீந்திரன் மற்றும் வானதி, பிரதிநிதிகளுடன், ஒரு பிரேக்அவுட் அமர்வில்.*

**கீழே:** *RI தலைவர் அரேஸ்ஸோ, முன்னாள் RI தலைவர் ஸ்டெஃப்னி அர்ச்சிக், முன்னாள் TRF அறங்காவலர் தலைவர் மார்க் மலோனி மற்றும் அறங்காவலர் தலைவர் ஹோல்கர் நாக், பிரதிநிதிகளுடன்.*




மாநாட்டின் இறுதி நாள் முடிவடைய விருந்த நிலையில், 2025 கால்கரி மாநாட்டு குழுவின் தலைவரான பிரின் ஸ்டைல்ஸ், நிகழ்வின் வெற்றியைப் பற்றி பேசினார். "அனைவரும் இந்த இடத்தை எவ்வளவு விரும்புகிறார்கள் என்று என்னிடம் கூறியுள்ளனர். இந்த கட்டிடம் அழகாகவும், வரவேற்கும் விதமாகவும் உள்ளது. மேலும் மக்கள் கால்கரியை விரும்புகிறார்கள். எனக்கு நல்ல மதிப்புரைகள் கிடைத்தன."

பல பங்கேற்பாளர்கள் வரவிருக்கும் சந்திப்புகளுக்காக ஆவலுடன் காத்திருந்தனர். 2026 தைபே மாநாட்டு குழுவின் தலைவர், ஆண்ட்ரியாஸ் வான் மோல்லர், தைவானின் தைபேவில் நடைபெறவுள்ள 2026 ரோட்டரி சர்வதேச மாநாட்டிற்கு பங்கேற்பாளர்களை ஆர்வமாக அழைத்தார்.

"தைவானின் 34,000 ரோட்டரி உறுப்பினர்கள், நகரமெங்கும் உள்ள கலாச்சாரம், ரம்மியமான கிராமப் புறங்கள், தேசிய நாடக அரங்கம் மற்றும் அழகான கோயில்களை ஆராய்ந்து அனுபவிக்க உங்களை அழைக்கிறோம். 2026 மாநாடு உங்கள் வாழ்நாள் முழுவதும் உங்களுடன் இருக்கும் ஒரு அனுபவத்தை வழங்கும்," என்றார்.

©Rotary.org

# MEGA DOCTORS DAY AWARDS - 1




## Rotary Doctors Day Awardees



**AKS. RTN. VINOD SARAOGI**
District Governor 2025-26
RID 3234

**Dr. H. V. Hande**
FORMER HEALTH MINISTER
“ROTARY POLIO CHAMPION AWARD”

**Dr.Prathap C. Reddy**
FOUNDER-CHAIRMAN, APOLLO HOSPITALS
“DOYEN OF MODERN HEALTH CARE
IN INDIA AWARD”

**D**
LIVI
“LIFET

**Dr. K. R. Balakrishnan**
HEART & LUNGS TRANSPLANT SURGEON
“LIFETIME ACHIEVEMENT AWARD”

**Dr. Devi Shetty**
FOUNDER & CHAIRMAN NARAYANA HEALTH
“LIFETIME ACHIEVEMENT AWARD”

FOUNDE
“LIFE

**Dr C Mayilvahanan Natarajan**
BONE TUMOUR SURGEON
“LIFETIME ACHIEVEMENT AWARD”

**Dr. V. S. Natarajan**
RENOWNED GERIATRIC PHYS
LIFETIME ACHIEVEMENT AW

# ST JULY 2025 BY RI DISTRCT 3234




.

r. Mohamed Rela
R TRANSPLANT SURGEON
TIME ACHIEVEMENT AWARD"

Dr. C. Palanivelu
- CHAIRMAN, GEM HOSPITALS
TIME ACHIEVEMENT AWARD"

SICIAN
ARD

**Institutional Excellence Award for Exceptional Service.**

## Madras Medical College
185 years in Academic Excellence Founded in 1835.
Beacon of Academic Excellence, Clinical Leadership.

## Stanley Medical College
Iconic Institution Founded in 1938.
1500 bed vibrant Clinical Training Ground.

## Sankara Nethralaya
Pioneering Contribution to Eye Care in India.

## Kanchi Kamakoti Childs Trust Hospital
Latest Technology Medical Care for Children & Women.



Rasheeda Bhagat

மகாராஷ்டிராவின் பால்கர் மாவட்டத்தில் உள்ள ஜவஹர்-மொகடா தாலுகாக்களில் உள்ள ஒரு கிராமத்தில் தண்ணீர் நிரம்பி உள்ள கிணற்றின் முன், ஒய்கோஸ் நீர் மேலாண்மையின் டாக்டர் உமேஷ் முண்ட்லியேவுடன் ரோட்டேரியன்கள்.



# மகாராஷ்டிரத்தின் வறண்ட கிராமங்களுக்கு தண்ணீர்!

ரஷீதா பகத்

மகாராஷ்டிர மாநிலம், தானேயிலிருந்து 200 கி.மீ. தொலைவில், சில மணி நேர பயணத்தில் தண்ணீர் பற்றாக்குறையுள்ள மலைப்பகுதியான ஜவஹர் மொகாடா கிராம மக்கள் சுமார் 3,000 பேர் முகத்தில், RID 3142-க்கு உட்பட்ட ஹீராநந்தினி எஸ்டேட் ரோட்டரி சங்க உறுப்பினர்கள் புன்னகையை வரவழைத்துள்ளனர். இங்குள்ள கிணறுகளில் பிப்ரவரி முதல் மே வரை உள்ள வறண்ட காலங்களிலும் போதுமான தண்ணீர் இருப்பது பெண்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இனி அவர்கள் தண்ணீர் எடுத்து வருவதற்காக மலைப்பகுதியில் 1 கி.மீ. அல்லது 2 கி.மீ. தொலைவு காலி பானைகளுடன் நடக்க வேண்டியதில்லை. விவசாயிகளுக்கும் இப்போது பயிர் செய்வதற்குத் தேவையான தண்ணீர் கிடைக்கிறது.

இவையனைத்தும் நான்காண்டுகளுக்கு முன் தொடங்கியது. கிராம மக்களுக்கு கழிப்பறை கட்டுதல் உள்ளிட்ட பல்வேறு சமூகநல திட்டங்களைச் செயல்படுத்துவதில் ஆர்வம் காட்டி வரும் உறுப்பினர் சுகுமாரன் நாயர், தொலைதூர கிராமங்களுக்குச் சென்று பார்வையிட்டபோது உருவான திட்டம்தான் இது. "நான் சென்று பார்த்தபோது பல இடங்களில் ரோட்டரி மற்றும் இதர தொண்டு நிறுவனங்கள் மூலம் தடுப்பணைகள் கட்டப்பட்டிருந்தன. மகாராஷ்டிரத்தின் இந்தப் பகுதி மலைப்பாங்கான பகுதி என்பதால், பருவமழை நன்றாக பெய்தாலும் பிப்ரவரி-மே மாதங்களில் தண்ணீர் இல்லாமல் வறண்டுவிடுகின்றன. தண்ணீர் தேங்காமல் ஓடிவிடுவதால் இங்கு தடுப்பணைகள் இருந்தும் அதனால் எந்த பலனும் இல்லை. இதனால் கிராமங்களில் உள்ள கிணறுகள் முற்றிலும் தண்ணீர் இல்லாமல் வறண்டுவிடுகின்றன என்பதை அறிந்துகொண்டேன்.

வறண்ட காலங்களில் குடும்ப பெண்கள், தங்கள் வீடுகளின் தினசரி தேவைக்காக தண்ணீர் எடுக்க நீண்ட தொலைவு செல்ல வேண்டியுள்ளது வருத்தமான விஷயம். அதைவிட சோகமானது என்னவென்றால் வீட்டில் உள்ள இளம் பெண்கள், தண்ணீர் எடுக்க உதவுவதால் பள்ளிக்குச் சென்று படிக்க முடியாமல் படிப்பை பாதியிலேயே நிறுத்தி விடுகிறார்கள். தண்ணீர் எடுத்து வருவதிலேயே அவர்களது சக்தியும், நேரமும் வீணாகிறது. " பெண் குழந்தைகளை காப்பாற்றுங்கள், பெண் குழந்தைக்கு கல்வி கற்பியுங்கள்" என்று நாம் எப்போதும் சொல்கிறோம். ஆனால், இங்கே அதற்கு நேர்மாறாக நடக்கிறது. அதற்கும் ஒரு தீர்வுகாண முடியும் என்று அவர் மேலும் கூறினார்.

அவர், தனது சங்கத்தின் உறுப்பினர்களுடன் இணைந்து சில நீர் பெருக்கு, பாதுகாப்புத் திட்டங்களை இந்த கிராமங்களில் செய்ய விரும்பினார். ஆனால்,

மேலும் தடுப்பணைகள் கட்டுவதால் குறிப்பிடத்தக்க மாற்றம் ஏதும் ஏற்படாது என்று அவர்கள் நினைத்தனர். “மேலும் முந்தைய திட்டங்களைப் போலவே, எந்த வேலைக்கும் கிராம மக்களின் பங்களிப்பு இல்லையென்றால் ரோட்டேரியன்கள் மற்றும் இதர சேவை அமைப்புகளால் ஏற்படுத்தப்பட்ட புதிய வசதியில் தங்களுக்கு எந்த உரிமையும் இல்லை என்பது போல் அவர்கள் உணரக்கூடும். எனவே எந்த திட்டத்தை நிறைவேற்றினாலும் அதில் கிராம மக்களுக்கு ஏதாவது ஒரு வகையில் பங்களிப்பு இருக்க வேண்டும் என்று முடிவு செய்தோம்” என்கிறார் சுகுமாரன் நாயர்.


நீடித்த மற்றும் புதுமையான தீர்வுகளுக்காக பலமுறை கலந்து ஆலோசித்த பிறகு, நீர் மேலாண்மை மற்றும் பாதுகாப்பு தொழில்நுட்ப நிபுணர் முனைவர் உமேஷ் முண்டேவின் கருத்துக்களையும் கருத்தில் கொண்டு, பிரகதி பிரதிஷ்டான் என்னும் சேவை நிறுவனத்தின் கூட்டு முயற்சியுடன் சங்கம், நிலத்தடி நீரை தேக்கிவைக்கும் விதத்தில் நிலத்தடி நீர் சேமிப்பு அணை கட்ட முடிவு செய்தது. இதன் மூலம் ஆண்டு முழுவதும் நீர் கிடைப்பதை உறுதிசெய்ய முடியும்.

அப்போது சங்கத்தின் உள்வரும் தலைவரான சுகுமாரன் நாயர் மற்றும் அவரது முன்னோடி ரவிசங்கர் வொப்பிலிஷெட்டி தலைமையில் சர்வதேச மானியம் பெற்று இத்திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டது. முதல் சர்வதேச மானியமான 51,600 டாலர் பெறுவதற்கு சர்வதேச கூட்டாளியான அமெரிக்காவின் சௌத் ஃபோர்ஸித் ரோட்டரி சங்கம் (RID 6910) ஆதரவு அளித்தது. உள்ளூர் நீர் மேலாண்மை நிபுணர் முண்டேவின் வழிகாட்டுதலின் பேரில், அரசு சாரா தொண்டு நிறுவனமான பிரகதி பிரதிஷ்டான் திட்டத்தை செயல் படுத்தியது என்றார் முன்னாள் தலைவர் வொப்பிலிஷெட்டி. இத்திட்டத்திற்காக AKS உறுப்பினரும் சங்கத்தின் முன்னாள் தலைவருமான டி.பி.திரிபாதி, தனது பங்களிப்பாக ரூ.4 லட்சம் வழங்கினார்.

இதைத் தொடர்ந்து அமெரிக்காவின் கிரேப்வைன் ரோட்டரி சங்கம் (RID 5790) மற்றும் பிளாசம் சாரிடபிள் டிரஸ்ட் அமைப்பின் கூட்டு முயற்சி மூலம் 31,422 டாலர் சர்வதேசமானியமாக கிடைத்தது. இந்த முறை முன்னாள் தலைவர் வொப்பிலிஷெட்டி ரூ.1 லட்சம் நன்கொடையாக அளித்தார். “இரண்டு திட்டங்களும் சரியான நேரத்தில் நிறைவேற்றப்பட்டன. தொழில்நுட்ப நிபுணத்துவம் மற்றும் உள்ளூர் மக்களின் ஒத்துழைப்புடன் நீரை தேக்கிவைக்கும் 12 நிலத்தடி நீர் சேமிப்பு அணைகள் கட்டப்பட்டன. இதன் மூலம் 3,000 கிராம மக்கள் பலனடைய முடியும். இதில் மகிழ்ச்சி அளிக்கும் செய்தி என்னவெனில், இப்போது பெண் குழந்தைகள் மீண்டும் பள்ளிக்குச் செல்வதுதான். மேலும் கிராமப் பெண்கள் தொலைதூரம் நடந்து சென்று தண்ணீர் எடுத்துவருவதற்காக செலவிடும் நான்கு மணிநேரம் மிச்சமாகியுள்ளது” என்கிறார் நாயர். அதுமட்டுமல்ல,


1

*1. நிலம் சுத்தம் செய்யப்படுகிறது; 2. ஒரு பள்ளம் வெட்டப்படுகிறது; 3. சுவர் அணை கட்டும் பணி நடைபெற்று வருகிறது; 4. இறுதி கட்ட சுவர் தயாராகிறது; 5. நிலத்தடி அணைக்கான இறுதிப் பணிகள் செய்யப்படுகின்றன.*







2



3



5



4

தங்களது பயிர்களுக்கு (முக்கியமாக சோளம் மற்றும் காய்கறிகள்) போதிய தண்ணீர் கிடைக்காமல் தவித்து வந்த விவசாயிகள், இப்போது போதுமான தண்ணீர் கிடைப்பதால் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இந்த திட்டம் 2024-ம் ஆண்டு நிறைவேற்றப்பட்ட போதிலும் உடனடியாக பலனை எதிர்ப்பார்க்க வேண்டாம். கிராமத்து கிணறுகளில் நீர் நிரம்பி, உரிய பலன் கிடைக்க ஓராண்டாவது காத்திருக்க வேண்டும் என்று நிலத்தடி நீர் நிபுணர்கள் ரோட்டேரியன்களிடம் கூறியிருந்தனர். ஆனால், அதிர்ஷ்டவசமாக இந்த ஆண்டே கிணறுகளில் நீர் நிரம்பி யிருந்ததை அவர்கள் கண்டறிந்தனர்.

நீரைத் தேக்கிவைக்கும் நிலத்தடி நீர் சேமிப்பு அணைகளின் பல்வேறு நன்மைகளை விளக்கிய நாயர், “தடுப்பணைகள் போல் அல்லாமல் நிலத்தடி நீர் சேமிப்பு தடுப்பு அணைகள் நிலத்தின் அடியில் கட்டப்படுகிறது. பருவக் காலங்களில் நீரோடைகளில் ஓடிவரும் தண்ணீர், நீர்ப்பிடிப்பு பகுதிகளில் சேமித்து வைக்கப்படுகிறது. இதில் நீர் ஆவியாகி வீணாக வழியில்லை. மேலும் தெளிந்த, சுத்தமான நீர் கிடைக்கிறது. சுற்றுச்சூழல் பாதிப்பும் இல்லை. இயற்கையான முறையிலேயே தண்ணீர் அதிகரிக்கப்படுகிறது. குறிப்பாக ஜவஹர் மொகாடா போன்ற மலைப்பாங்கான பகுதிகளில் நிலையான, நீடித்த நீர் பாதுகாப்பை வழங்குகின்றன.

நிலத்தடி நீர் சேமிப்பு அணைகள் கட்டுமானத்துக்கான செலவு அணையின் நீளத்தை பொறுத்த ரூ.4 லட்சம் முதல் ரூ.14 லட்சம் வரை மாறுபடுகிறது. சராசரியாக அணையின் நீளம் 9 முதல் 12 மீட்டர்கள் வரை இருக்கும். சில அணைகளின் நீளம் மட்டும் சற்று கூடுதலாக இருக்கும். அணைக்காக தோண்டப்பட்ட அகழியின் நீளம் மாறுபடும். அதாவது பாறை தெரியும் வரை அகழி தோண்டப்படும். மேலும் தண்ணீரைத் தேக்கி வைக்க சுற்றுச்சுவர் கட்டப் படுகிறது.

இவ்வாறு கட்டப்பட்ட 12 நிலத்தடி நீர் சேமிப்பு அணைகளும் சரிவர நிர்வகிக்கப்பட்டு அருகில் உள்ள கிணறுகளில் தண்ணீர் நிரம்ப



*பால்கர் மாவட்டத்தில் உள்ள வஷிந்த் கிராமத்தில் நிலத்தடி அணை திறப்பு விழாவில் கிராம மக்களுடன் ரோட்டேரியன்கள்.*



*மே மாதத்தில் வறண்ட காலத்திலும் கூட குழாய் நீர்.*

வழிகோலியது ரோட்டேரியன்களுக்கு மகிழ்ச்சியை அளித்தது. பயனாளிகளின் வீடுகளுக்கு குழாய் மூலம் குடிநீர் கிடைக்க குழாய்கள் அமைப்பது குறித்த கேள்விக்கு பதிலளித்த நாயர், " அது குறித்து பரிசீலித்து வருகிறோம். எங்களின் அடுத்த திட்டம் அதுவாகத்தான் இருக்கும். இந்த பகுதியில் 140 நிலத்தடி நீர் சேமிப்பு அணைகளை கட்டுவதற்கு நாங்கள் விரும்புகிறோம். அடுத்த கட்டமாக குழாய்கள் பதிக்கப்பட்டு சூரிய சக்தி மின்சாரம் மூலம் வீடுகளுக்கு தண்ணீர் வழங்கப்படும். ஒரு கிராமத்தில் ஏற்கெனவே குழாய்கள் பதிக்கப்பட்டுள்ளன. ஆனாலும் அவர்களுக்கு தண்ணீர் கிடைக்கவில்லை. அவர்களுக்கு இப்போது குழாய் மூலம் தண்ணீர் கிடைக்கும் என்றார்.

அவர் மேலும் கூறுகையில், மாவட்டத்தின் பெரிய திட்டங்களில் சிறிய சங்கங்களையும் ஈடுபடுத்த வேண்டும் என்பதற்காக DGE நிலேஷ் ஜெயந்த் (2026-27) ஆர்வமாக இருப்பதாகக் கூறினார். மீண்டும் ஒரு சர்வதேச அளவிலான கூட்டாளர் கிடைத்ததும் மேலும் ஒரு திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டுள்ளோம் என்றும் அவர் குறிப்பிட்டார்.

இந்த திட்டத்திற்கு தனது ஆதரவை வழங்கியதற்காக IPDG மிலிந்த் குல்கர்னிக்கு அவர் நன்றி தெரிவித்தார்.■

# RID 3131 வழங்கும் CSR விருதுகள்

ரோட்டரி செய்திக்குழு

RID 3131 தலைவர்கள் பங்கேற்ற சிறப்பான நிகழ்வொன்றில், ரோட்டரியின் கவனப்பகுதிகளில் ரோட்டரி சங்கங்களுடன் இணைந்து CSR திட்டங்களை நிறைவேற்றிய 29 நிறுவனங்கள் பெருமைப்படுத்தப்பட்டன.

80க்கும் மேற்பட்ட நிறுவனங்கள் ஓர் இணைய விண்ணப்பச் செயல்முறையின் வழியாக இதற்கு விண்ணப்பம் செய்திருந்தன. சிறிய, நடுத்தர, பெரிய மற்றும் மிகப் பெரிய நிறுவனங்களுக்கென நான்கு வகைகளில் CSR விருதுகள் வழங்கப்பட்டன. அத்துடன், கட்டாயம் இல்லாதபோதும் CSR திட்டங்களை நிறைவேற்றிய பெருநிறுவனங்களுக்கென ஒரு சிறப்பு வகையும் இருந்தது. விருதுக்கு விண்ணப்பம் செய்யாத, ஆனால், தங்கள் CSR திட்டங்களில் ரோட்டரியுடன் பணியாற்றியுள்ள நிறுவனங்களுக்கும் பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டது. அனைத்து விருதுகள், சான்றிதழ்களையும் இந்த நிகழ்ச்சியின் தலைமை விருந்தினரான புணே தேசியப் பாதுகாப்புக் கல்விக் கழகத்தின் படைத் தலைவர் வைஸ்-அட்மிரல் குர்சரண் சிங் வழங்கினார்.

100 பெருநிறுவன அலுவலர்கள் உள்ளிட்ட 300 அழைப்பாளர்களிடையில் பேசிய வைஸ்-அட்மிரல் சிங், “உண்மையான தலைமை சேவையில் தான் உள்ளது. நாட்டைக் கட்டமைப்பதில் பெருநிறுவன உலகுக்கு ஆற்றல் மிக்க பங்கு உண்டு. அவர்களுடைய முயற்சிகளை அங்கீகரிக்கும் ரோட்டரியின் முன்னெடுப்பை நாம் பாராட்டவேண்டும்” என்றார். ஒரு நாட்டின் வலிமை அதன் ஆயுதப் படைகளில்மட்டும் இல்லை, “அதன் மக்கள், அமைப்புகள் காண்பிக்கும் இரக்கம், பொறுப்பிலும் இருக்கிறது. CSR விருதுகள் போன்ற நிகழ்ச்சிகள் நம் அனைவரையும் பிணைக்கும் சேவை எண்ணத்தைச் சுட்டிக்காட்டுகின்றன” என்று அவர் சுட்டிக்காட்டினார்.

லெப்டினன்ட் ஜெனரல் (ஓய்வு) D B ஷேகத்கர், முன்னாள் மாநிலத் தலைமைச் செயலாளர் மகேஷ் ஜகாடெ, மஹெர் நிறுவனர் சகோதரி லூசி குரியன், நுண்கலையில் புகழ் பெற்ற மோகன் அகாஷெ, விளையாட்டு வீராங்கனை அஞ்சலி பாக்வத், எர்ன்ஸ்ட் & யங் இயக்குநர் அர்விந்த் சேதி, அவருடன் பணியாற்றும் பிரசாத் கிரி ஆகியோரைக் கொண்ட நடுவர் குழு ஒன்று குறும்பட்டியலில் இருந்த நிறுவனங்களை ஆராய்ந்து விருதாளர்களைத் தேர்ந்தெடுத்தது.

DG ஷீதல் ஷா தன்னுடைய உரையில், CSR விருதாளர்கள் வளங்குன்றா மற்றும் உள்ளடக்கிய மேம்பாட்டுக்கான பகிர்ந்து கொள்ளப் பட்ட ஓர் உறுதிப்பாட்டைப் பிரதி நிதித்துவப்படுத்துகிறார்கள். அப்படிப் பட்ட தாக்கமுள்ள கூட்டணிகளைப் பெருமைப் படுத்துவதற்கு ரோட்டரி பெருமைப்படுகிறது என்றார். DRFC ஷைலேஷ் பலேகர் பெருநிறுவனங்களுக்கும் ரோட்டரி சங்கங்களுக்கும் இடையிலான நெடுநாள் கூட்டணியின் பலன்களைச் சுட்டிக்காட்டினார்.

புணே-வில் ரோட்டரி CSR விருதுகளின் இந்த மூன்றாம் பதிப்பை RID 3131ன் ஏழு ரோட்டரி சங்கங்களும் சேர்ந்து நடத்தின. ■

*புனேவில் ரோட்டரி CSR விருதுகளைப் பெற்றவர்களுடன் DG ஷீதல் ஷா மற்றும் PDGக்கள் பங்கஜ் ஷா மற்றும் மஞ்சு பட்கே.*



Rotary PEOPLE OF ACTION

# செயற்கைக் கை, கால் முகாம்களை நடத்திய RC டின்சுகியா

ஜெய்ஶ்ரீ



*முகாமில் LN-4 கை பொருத்தப்பட்ட ஒரு குழந்தையுடன், RID 3240 துணை ஆளுநர் சைலேஷ் சர்மா.*

"ஒன்பது வயது அனுபம் மிதிவண்டி ஓட்டியபோது அவனுடைய முகம் மகிழ்ச்சியில் ஒளிர்ந்தபோதும், எங்கள் உறுப்பினர்களில் ஒருவர் வீசிய பந்தை ஆரவ் அடித்தபோதும் எங்கள் நெஞ்சங்கள் மகிழ்ச்சியாலும் மன நிறைவாலும் விம்மின, எங்கள் கண்களில் மகிழ்ச்சிக் கண்ணீர் நிரம்பியது" என்று நினைவுகூர்ந்தார் RC டின்சுகியா, RID 3240, சமீபத்திய முன்னாள் தலைவர் நீரஜ் அகர்வால்.

அனுபமும் ஆரவும் கடந்த ஆகஸ்டில், அஸ்ஸாமில் உள்ள டின்சுகியாவில் இந்தச் சங்கம் நடத்திய சிறப்பு முகாமில் LN-4 செயற்கைக் கைகள் பொருத்தப்பட்ட 30 பேரில் இருவர். இந்தப் பணியில் இந்தச் சங்கத்துடன் கொல்கத்தா பிரெசிடென்சி ரோட்டரி சங்கம், RID 3291, இணைந்து செயல்பட்டது. அனுபமுக்கு 4 வயதானபோது ஒரு விபத்தில் அவருடைய வலக்கை துண்டிக்கப்பட்டது; ஆரவ் கை இல்லாமல் பிறந்தவர். "இந்த முகாமில் பலன் பெற்ற குழந்தைகள் இப்போது தன்னம்பிக்கையுடன் பள்ளிக்குச் செல்வார்கள், இளைஞர்கள் வேலை வாய்ப்பு அல்லது தொழில் சார்ந்த பயிற்சியை இன்னும் நன்றாகப் பெறுவார்கள்" என்றார் அவர்.

ராஷ்மி பஹாரியா என்ற துடிப்பான ஒன்பது வயதுச் சிறுமிக்கும் இந்த முகாம் திருப்பு முனை ஆனது. ஐந்து ஆண்டுகளுக்குமுன் இவர் வீட்டில் நடந்த ஒரு தீ விபத்தால் இவர் தீவிரத் தீக்காயங்களுக்கு ஆளானார்; இவருடைய வலப்புற முன்கை இவருடைய மேற்கையுடன் இணைந்துவிட்டது, விரல்கள் ஒன்றாக ஒட்டிக்கொண்டன. "இவருக்கு

ஓர் LN4 கை பொருத்தலாம் என்கிற நம்பிக்கையுடன் இவருடைய தாய் இவரை அழைத்துவந்தார். முகாமில் இருந்த மருத்துவர்கள் அதற்குப் பதிலாகப் பிளாஸ்டிக் சர்ஜரியைப் பரிந்துரைத்தார்கள். உடனடியாக, நாங்கள் டிப்ருகர்ஹில் அவருடைய சிகிச்சையை ஆதரிக்கத் தீர்மானித்தோம்” என்கிறார் அகர்வால். இன்னும் சில செயல்பாடுகள் திட்டமிடப்பட்டுள்ளன, இவருடைய கை முழுமையாக மீட்கப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது என்று இவர் தொடர்ந்து கூறினார். மருத்துவச் சேவைகளுடன் தொடர்புடைய தொழில்களை நடத்திவரும் சங்க உறுப்பினர்கள் சைலேஷ் சர்மா, ராஜீவ் மிட்டல், அகர்வால் ஆகியோர் ராஷ்மியின் மாற்றத்தை உண்டாக்கும் சிகிச்சைக்கும் பல வழிகளில் உதவினார்கள். LN4 முகாமின் வெற்றியால் ஊக்கம் பெற்ற இந்தச் சங்கம் டிசம்பரில் கொல்கத்தா மகாவீர் சேவா சதன் உடன் இணைந்து 3 நாள் செயற்கைக் கை, கால், காலிப்பர் முகாமை நடத்தியது. பல காரணங்களால் கால்களை இழந்த 60 பேர் இந்த முகாமால் பலன் பெற்றார்கள்.



*முகாமில் ஒரு முதியவருக்கு செயற்கைக் கால் பொருத்தப்படுகிறது.*





*வலது கையில் தீக்காயங்களுடன் ரஷ்மி பஹாரியா; வலது: பிளாஸ்டிக் அறுவை சிகிச்சைக்குப் பிறகு ரஷ்மி.*

56 ஆண்டுகளுக்குமுன் நிறுவப்பட்ட RC டின்சுகியா-வில் இப்போது 66 உறுப்பினர்கள் உள்ளார்கள், இதில் 12 பெண்கள். இது இரண்டு ஆளுநர்களை (கீர்த்தி ரஞ்சன் டே, M S குமார்) உருவாக்கிய பெருமையைக் கொண்டுள்ளது. இந்தச் சங்கம் தடுப்பூசி மையம் ஒன்றை நடத்துகிறது, சமூகத்தில் எழுத்தறிவை முன்னிறுத்துவதில் பேரார்வத்துடன் உள்ளது. 8 ஆண்டுகளுக்குமுன்னால், இந்தச் சங்கம் ஒரு கிராமத் தொடக்கப் பள்ளியை மகிழ்ச்சிப் பள்ளியாக மாற்றியது, இப்போதும் அதற்குக் கல்விப் பொருட்கள், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களுக்குக் கல்வி உதவித்தொகைகளை வழங்கி ஆதரித்துவருகிறது. “இதன்மூலம், எந்தக் குழந்தையும் விடுபடக்கூடாது என்று நாங்கள் விரும்புகிறோம்” என்றார் அகர்வால். ■

# 8 சிறந்த மருத்துவர்கள், 4 மருத்துவமனைகளை பாராட்டி கௌரவித்த RID 3234

V முத்துகுமரன்



சமீபத்தில் நியூயார்க்கில் நடைபெற்ற ஐ.நா. மருத்துவ மாநாட்டில், “மக்களைத் தேடி மருத்துவம்” திட்டத்தின் கீழ் மூத்த குடிமக்கள் மற்றும் தமிழ்நாட்டின் தொலைதூரத்தில் வசிப்பவர்களுக்கு இலவச மருத்துவச் சேவையும், மருந்துகளும் வழங்கப்பட்டது உலக அளவில் பாராட்டுகளைப் பெற்றதாக மாநில சுகாதாரத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன், மருத்துவர்கள் தினத்தையொட்டி RID 3234 ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சியில், மருத்துவத்துறையினர் மற்றும் ரோட்டேரியன்களிடம் பேசுகையில் கூறினார்.

தொற்று அல்லாத ஐந்து வகையான நோய்கள் (இரத்தக் கொதிப்பு, நீரிழிவு, தைராய்டு உள்ளிட்டவை) பெருகிவிடாமல் இருக்கும் வகையில் இந்த திட்டத்தை தமிழக முதல்வர் எம்.கே.ஸ்டாலின், கடந்த 2021 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தினார். “மக்களைத் தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் ஏற்கெனவே 2.28 கோடி பேர் பலனடைந்துள்ளனர்” என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

மற்றொரு திட்டமான “இன்னுயிர் காப்போம்” (சாலை விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள், விபத்து நடைபெற்ற 48 மணி நேரத்திற்குள் அரசு குறிப்பிட்டுள்ள மருத்துவமனைகளில் சேர்க்கப்பட்டால் அவர்களுக்கு இலவச மருத்துவ சிகிச்சை அளிக்க வகை செய்கிறது. இந்த திட்டத்தின் கீழ் ஏறக்குறைய 4 லட்சம் பேர் பயனடைந்துள்ளனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

1991-ம் ஆண்டு முதல், மேற்குவங்க மாநில முன்னாள் முதல்வரும், மருத்துவத்துறையின் முன்னோடியுமான டாக்டர் பி.சி.ராய் பிறந்த நாளான ஜூலை 1-ம் தேதியை இந்தியா, மருத்துவர்கள் தினமாகக் கொண்டாடி வருகிறது என்றார் அமைச்சர் சுப்பிரமணியன்.




*தமிழ்நாடு சுகாதார அமைச்சர் மா. சுப்பிரமணியன், டாக்டர் எச்.வி. ஹண்டேவுக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதை வழங்குகிறார். DG வினோத் சரோகி (இடது) மற்றும் PDG அபிராமி ராமநாதன் ஆகியோரும் காணப்படுகிறார்கள்.*

97 வயதான, எண்டோஸ்கோபிக் அறுவைச்சிகிச்சை நிபுணரும் முன்னாள் சுகாதாரத்துறை அமைச்சருமான Dr H V ஹண்டேயுடன் தமக்கு உள்ள நீண்ட கால தொடர்பை அவர் நினைவு கூர்ந்தார். 1990-களின் தொடக்கத்தில் தாம் கடுமையாக நோயுற்றிருந்தபோது ஹண்டே மருத்துவமனையில் அவரது மகன் டாக்டர் கிருஷ்ண ஹண்டே சிகிச்சை அளித்ததையும் அமைச்சர் குறிப்பிட்டார். சைதாப்பேட்டையில் முதியோருக்காக மிகப்பெரிய மருத்துவமனையை நிறுவியபோது, முதியோர் மருத்துவரும், விருது பெற்றவருமான மருத்துவர் வி.எஸ்.நடராஜனின் ஆதரவை முதல்வர் எம்.கே.ஸ்டாலின் கேட்டுப் பெற்றதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

பின்தங்கிய பகுதிகளில் வழக்கமான மருத்துவப் பரிசோதனை, அடிப்படை சிகிச்சை, தேவையான தடுப்பூசிகள் முதல் தொலைத்தூரங்களில் பெண்களை பரிசோதிக்க நடமாடும் மேம்மோகிராபி யூனிட்டுகள் என அனைத்து மக்களுக்குமான மருத்துவ வசதிக்கு ரோட்டரி சங்கம் அவ்வப்போது ஏற்பாடு செய்து வருவதாக DG விநோத்




**இடமிருந்து:** *முகமது ரேலா, மயில் வாகனன் நடராஜன், சி பழனிவேலு, எச் வி ஹண்டே, வி எஸ் நடராஜன், PDG ராமநாதன், சுகாதார அமைச்சர் சுப்ரமணியன், DG சரோகி மற்றும் கே ஆர் பாலகிருஷ்ணன்.*

சாரோகி கூறினார். குழந்தைகளுக்கான அறுவைச்சிகிச்சைகள் மூலம் குழந்தைகள் புதுவாழ்வு பெற்று வருகின்றனர். லேப்ராஸ்கோபிக் சிகிச்சை நடைமுறைகள் மூலம் ஏழை நோயாளிகள் விரைவில் குணமடை கின்றனர். தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் பொது மருத்துவம், பல் மருத்துவப் பரிசோதனை நடத்தப்படுவதால் பிரச்னைகளை முன்கூட்டியே அறிந்து தீர்வுகாண முடிகிறது என்றும் அவர் குறிப்பிட்டார். பள்ளி மாணவிகளுக்கு தடுப்பூசிகள் போடவும், அவர்களுக்கு கர்ப்பப்பை வாய் புற்றுநோய் ஏற்படாமல் தடுக்கவும் நடவடிக்கைகள் எடுக்கப் படுகின்றன. போலியோ பிளஸ் பிரசாரம் மூலம் உலகளாவிய நோய்த்தடுப்பு முயற்சியில் ரோட்டரி முன்னிலையில் உள்ளது.

மருத்துவ சுகாதாரத் திட்டத்தின் கீழ், "நாங்கள் கிராமங்களில் கழிப்பறை வசதி செய்துகொடுத்துள்ளோம். மாதவிடாய் காலத்தில் மாணவிகள் ஆரோக்கியத்தை பேணும் வகையில் சானிடரி பேடுகளை (நாப்கின்) வழங்கி வருகிறோம். மேலும் உடல்நலம் காப்பதன் அவசியத்தையும் வலியுறுத்தி வருகிறோம்". சுகாதாரக் கல்வியை ஒரு முக்கிய மைல்கல்லாகக் கொண்டு ரோட்டரி பிரசாரம் செய்து வருகிறது. நோய்த்தடுப்பு மற்றும் ஆரோக்கியம் மற்றும் ஊட்டச்சத்தின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகிறோம் என்று அவர் மேலும் கூறினார்.

மருத்துவர்கள் ஹெச்.வி.ஹண்டே, முன்னாள் சுகாதார அமைச்சர், பிரதாப் சி. ரெட்டி, அப்பல்லோ மருத்துவமனை நிறுவனர், தேவி ஷெட்டி, நாராயணா ஹெல்த் நிறுவனர், முகமது ரேலா, டாக்டர் ரேலா மருத்துவமனை தலைவர்-இயக்குநர், சி.பழனிவேலு, ஜெம் மருக்குவமனை, மயில்வாகனன் நடராஜன், எலும்பியல், புற்றுநோயியல், வி.எஸ்.நடராஜன் முதியோர் நல மருத்துவர் மற்றும் இதயம் மற்றும் நுரையீரல் நோய் சிகிச்சை நிபுணர் எஸ்.ஆர்.பாலகிருஷ்ணன் உள்ளிட்ட 8 பேருக்கு ரோட்டரியின் வாழ்நாள் சாதனையாளர்கள் விருதும் பாராட்டுப் பத்திரமும் வழங்கப்பட்டன.

இதேபோல, சிறந்த மருத்துவ மனைகளுக்கான விருதுகள், சென்னை மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை, சங்கர நேத்ராலயா கண் மருத்துவமனை மற்றும் காஞ்சி காமகோடி குழந்தைகள் அறக்கட்டளை மருத்துவமனை ஆகியவற்றுக்கு வழங்கப்பட்டன.

1980-களின் தொடக்கத்தில் மாநிலத்தில் தொழுநோயாளிகள் விடுதிகள் அதிகம் இருப்பதை நான் அப்போது கண்டறிந்தேன், பின்னர் மாவட்ட கல்வி அதிகாரிகள், மாவட்ட சுகாதார அதிகாரிகள் மற்றும் மாவட்ட ஆட்சியர்களுடன் கலந்து ஆலோசித்து பிரச்னைக்கான காரணத்தை கண்டறிந்து, தொழுநோயாளிகளுக்கு சிகிச்சை அளிப்பதற்காக சென்னை அருகே, ஒரகடத்தில் தொழுநோயாளிகளுக்கு சிசிக்சை அளிக்கும் முன்னோடி மையம் ஏற்படுத்தப்பட்டது.

அடுத்த சில மாதங்களிலேயே எங்களின் புதிய சிகிச்சை முறை களுக்கு பலன் கிடைத்தது. தொழு நோயாளிகளின் விடுதிகள் காலியாகும் அளவுக்கு முன்னேற்றம் ஏற்பட்டது. மேலும் நான் சுதாதார அமைச்சராகப் பதவியேற்ற போது மாநிலத்தில் 2,000 பொது சுகாதார மையங்களும் அவற்றின் துணைப்பிரிவுகளும் இருந்தன. எனினும் நான் பதவி விலகிய போது அவை 8,000-ஆக அதிகரித்திருந்தது என்று டாக்டர் ஹண்டே நினைவு கூர்ந்தார். அவருக்கு ரோட்டரி போலியோ சாம்பியன் விருதை DG சாரோகி வழங்கினார்.

புகைப்படங்கள்: V முத்துக்குமரன்

# பசுமைப் பூங்காவாக மாற்றப்பட்ட குப்பைக் கிடங்கு

ஜெயஸ்ரீ

பாண்டிச்சேரி பீச் டவுன் ரோட்டரி சங்கம் (RID 2981) உருவாக்கிய மியாவாகி சுற்றுச்சூழல் சுற்றுலாப் பூங்கா, தென்னிந்தியாவில் புதுச்சேரியின் பசுமை கிரீடமாக வேகமாக மாறிவருகிறது. நகரில் மேட்டுப்பாளையம் லாரி முனையத்தின் அருகில் ஒரு காலத்தில் 35,000 சதுர அடி பரப்பளவில் குப்பைக் கிடங்காக இருந்த இடம், இன்று துடிப்பான நகர்ப்புற காடு வளர்ப்பு மற்றும் சுற்றுச்சூழல் பூங்காவாக மாற்றப்பட்டுள்ளது. உழவர்கரை நகராட்சி, ரோட்டரி சங்கத்துடன் இணைந்து எடுத்த பெரு முயற்சிதான் இதற்கு காரணம்.

“பன்னிரெண்டு ஆண்டுகளாக இந்த இடம் தொழில்துறை கழிவுகளைக் கொட்டும் இடமாகவும் குப்பைக் கிடங்காவும் கண்களை உறுத்தி வந்தது. கடந்த ரோட்டரி ஆண்டின் போது சங்கம் இந்த குப்பைக் கிடங்கை அகற்றி தூய்மைப்படுத்த முடிவு செய்தது. மூன்று அடி உயரத்துக்கு குவிந்து கிடந்த, 250 டன் குப்பை மற்றும் கழிவுகளை அகற்ற மூன்று மாதங்களானது” என்று சங்கத்தின் செயலாளர் எஸ்.எஸ்.பிரகாஷ் கூறினார். குப்பைக் கழிவுகளை உழவர்கரை நகராட்சி பாதுகாப்பாக அகற்றியது.

திட்டத்தின் முதல் கட்டமாக 17,000 சதுர அடி பரப்பளவான தரிசு நிலத்தை மியாவாகி நகர்ப்புற வனமாக மாற்றுவதில் கவனம் செலுத்தப்பட்டது. “இயற்கை வன சுற்றுச்சூழல் அமைப்புகளைப் பிரதிபலிக்கும் வகையில் பூர்வீக இனங்களை அடர்த்தியாக நடுவதற்கு பிரபலமான மியாவாகி காடு வளர்ப்பு தொழில்நுட்பத்தை பயன்படுத்தி 40 பூர்வீக இன மரங்களில் 1,050 மரக் கன்றுகள் நடப்பட்டன என்றார்.

இரண்டாவது கட்டமாக, வனப் பகுதியை ஒட்டிய 18,000 சதுர அடி பரப்பில் ஒரு சுற்றுச்சூழல் பூங்காவை உருவாக்க சங்கத்துக்கு இரண்டு மாதங்களானது. இந்த பசுமையான பூங்காவில் 900 பூக்கும் தாவரங்கள், தேன்சொரியும் மலர்கள் அடங்கிய 500 பூக்கும் தாவரங்கள் என பட்டாம்பூச்சி தோட்டம் மற்றும் 12 வகையான பாரம்பரிய மருத்துவ தாவரங்கள் கொண்ட மூலிகைத் தோட்டம் ஆகியவை உள்ளன. இந்த ஒருங்கிணைந்த சுற்றுச்சூழல் பூங்காவை கடந்த ஜனவரி மாதம், புதுவை துணைநிலை ஆளுநரான கே.கைலாசநாதன் தொடங்கிவைத்தார். “அது முதல் இந்த இடம் பள்ளி மாணவர்களுக்கான சுற்றுலாத் தலமாக மாறிவிட்டது. புதுச்சேரியில் உள்ள அனைத்து பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களும் இங்கு வருகைதந்துள்ளனர். மேல் வகுப்பில் படிக்கும் மாணவர்களுக்கு இந்த இடம் தாவரவியல் மற்றும் சுற்றுச்சூழல் மேலாண்மை கல்விக்கான நேரடி பயிலகமாகும். மூத்த குடிமக்களுக்கு





**மேலே:** RC *பாண்டிச்சேரி பீச் டவுன் உருவாக்கிய பூங்கா.*
**கீழே:** *பூங்காவில் சங்கத் தலைவர் வினோத் சர்மா (வலமிருந்து நான்காவது, மேல் வரிசையில்) மற்றும் செயலாளர் எஸ்.எஸ். பிரகாஷ் (சர்மாவின் இடதுபுறம்) ஆகியோருடன் சங்க உறுப்பினர்கள்.*




இந்த பூங்கா அமைதியான ஓய்விடம். நடைப்பயிற்சிக்கு சிறந்த இடம் மற்றும் இயற்கையுடன் மீண்டும் இணைவதற்கான இடமாகும்" என்று சங்கத்தின் தலைவர் வினோத் சர்மா கூறினார்.


அடுத்து ரோட்டரி சங்கம், பூங்காவிற்குள் மழைநீர் சேகரிப்பு அமைப்பை நிறுவியது. "400 சதுர அடி பரப்பில் 125 அடி ஆழத்தில் இரண்டு குழிகள் வெட்டப்பட்டு தொட்டிகள் கட்டப்பட்டன. மேலும் பூங்காவிலிருந்து மட்டுமல்லாமல், சுற்றியுள்ள பகுதி களிலிருந்து வெளியேறும் மழை நீரையும் சேகரிக்கும் வகையில் இது வடிவமைக் கப்பட்டுள்ளது" என்று அவர் கூறினார். இந்த தொட்டிகளில் 42 லட்சம் கன அடி தண்ணீரைச் சேமித்து வைக்க முடியும்.

தற்போது 23-வது ஆண்டில் காலடி எடுத்து வைத்துள்ள பாண்டிச்சேரி பீச் டவுன் ரோட்டரி சங்கத்தில் 37 உறுப்பினர்கள் உள்ளனர். இந்த சங்கம் மாற்றுத் திறனாளிகளுக்குத் தேவையான உபகரணங்களை வழங்கி வருகிறது. மேலும் பிறவியிலேயே செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகளுக்கு காது கேட்கும் கருவி வழங்கி வருகிறது. கடந்த காலங்களில் அரசுப் பள்ளிகளில் மாணவர்கள் பயன்பாட்டுக்காக கணினி ஆய்வகங்கள் நிறுவப்பட்டுள்ளன. கடந்த 2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் ஃபெங்கால் புயல் தென்னிந்திய கடற்கரைப் பகுதிகளை தாக்கியபோது ரோட்டரி சங்கம், விரைந்து நிவாரண நடவடிக்கைகளில் ஈடுபட்டது.■

# Membership Summary
## (Interim)

As on July 3, 2025






## Rotary worldwide

| | | | |
|---|---|---|---|
| Rotary clubs : | 36,373 | Rotary members : | 1,135,050 |
| Rotaract clubs : | 9,539 | Rotaract members : | 132,096 |
| Interact clubs : | 17,111 | Interact members : | 393,691 |
| RCCs : | 14,073 | | As on July 16, 2025 |

# ரோட்டரி ஆளுநர்களுடன் சந்திப்பு

V முத்துகுமரன்

## புற்றுநோய் கண்டறிதல் ஒரு முன்னுரிமை

அவரது முன்னுரிமைப் பட்டியலில் முதலிடத்தில் இருப்பது புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் கண்டறிதல் முகாம்கள் ஆகும், இதை ஆகஸ்ட் மாதம் முதல் நடத்த திட்டமிட்டுள்ளார். "முதலில், நாங்கள் விழிப்புணர்வு அமர்வுகளை நடத்தி, 10,000 கிராமப்புற பெண்களைச் சென்றடைவோம், அதன் பிறகு குறைந்தது 40 பரிசோதனை முகாம்கள் நடத்தப்படும்," என்கிறார் ரவி பிரகாஷ்.

ஜூலை 1 முதல், அரசுப் பள்ளி மாணவர்களுக்கு 20,000 பள்ளிப் பைகள் விநியோகிக்கப்படும். "சங்கத் தலைவர்களை பள்ளிகளையும் அவற்றின் தேவைகளையும் கண்டறியுமாறு கேட்டுக்கொண்டேன், இதன் மூலம் CSR நிதியுடன் 100 மகிழ்வான பள்ளிகளை உருவாக்க முடியும்," என்கிறார் பிரகாஷ். சுமார் 1,000 சூரியசக்தி தெருவிளக்குகள் 100 கிராமங்களில் (ரூ.70 லட்சம்) ஒரு CSR மானியம் மூலம் நிறுவப்படும்; மேலும் ஒவ்வொரு சங்கமும் 2–3 நோயறிதல் முகாம்களை நடத்தும்.

RID 3080 கடந்த 28 ஆண்டுகளாக, பெரும்பாலும் ஆப்பிரிக்காவில், PRIP ராஜேந்திர சாபூவின் வழிகாட்டுதலில் ரோட்டரி மருத்துவப் பணிகளை நடத்தி வருகிறது; மேலும் சத்தீஸ்கர் அல்லது மத்தியப் பிரதேசத்தில் கிராமப்புற மருத்துவ முகாமும் நடத்துகிறது. "நாங்கள் ஹரித்வாரில் ஒரு பிளாஸ்டிக் அறுவை சிகிச்சை முகாமை நடத்துவோம், மற்றும் டேராடூனில் ஒரு பிளவுபட்ட உதடு அறுவை சிகிச்சை முகாமை ஒரு மாவட்ட முயற்சியாக நடத்துவோம்."

TRF-க்கு $500,000 வழங்குவது அவரது இலக்காகும், மேலும் தற்போதுள்ள 4,300 உறுப்பினர்கள் மற்றும் 117 சங்கங்களுடன் சுமார் 1,000 புதிய உறுப்பினர்கள் மற்றும் 20 புதிய சங்கங்கள் சேர்க்கப்படும். அவர் 2010-ல் ரோட்டரியில் இணைந்தார்.■



**ரவி பிரகாஷ்**
எலெக்ட்ரானிக்ஸ் உற்பத்தி, RC ரூர்க்கி மிட்டவுன், RID 3080



**பாலக்க்ஷா K**
ஓய்வுபெற்ற பேராசிரியர்
RC ஹாசன், RID 3182

## விவசாயிகளுக்கு பசு மாடுகள் வழங்குதல்

கிராமப்புறங்களில் பசு தான திட்டத்திற்கான பயனாளிகளை அடையாளம் காண மாவட்ட சங்கங்கள் ஒரு கணக்கெடுப்பை நடத்தி வருகின்றன. "சுமார் 60 ஏழை விவசாயிகளை நாங்கள் தேர்வு செய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த ரூ.35-40 லட்சம் மதிப்புள்ள GG திட்டத்தின் கீழ் அவர்களுக்கு பால் மாடுகளை வழங்குவோம்," என்கிறார் K பாலக்க்ஷா.

ஒரு முன்னாள் வேதியியல் பேராசிரியரான இவருக்கு கல்வி மனதுக்கு மிகவும் நெருக்கமானது. "அரசுப் பள்ளிகளில் 7–9 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு லட்சத்திற்கும் அதிகமான மாணவர்களுக்கு தொழில் வழிகாட்டிப் பட்டறைகளை நடத்த திட்டமிட்டுள்ளேன்." ஒரு சுகாதாரத் திட்டத்தின் கீழ், ஒரு சில பள்ளிகளில் RO நீர் வடிகட்டி அலகுகள், கை கழுவும் நிலையங்கள் மற்றும் முறையான கழிப்பறை வசதிகள் நிறுவப்படும் (GG: ரூ.50-60 லட்சம்). "இந்த சுகாதார முயற்சி எங்கள் RI மாவட்டம் முழுவதும் 2,000க்கும் மேற்பட்ட கிராமப்புற பள்ளிகளுக்கு பயனளிக்கும்," என்றார்.

அனைத்து சங்கங்களும் ஒரு மெகா பிளாஸ்டிக் எதிர்ப்பு இயக்கத்தை மேற்கொள்ளும், இதில் பல்வேறு பங்குதாரர்களுக்கு விழிப்புணர்வு அமர்வுகள் நடத்தப்படும், மேலும் "ஒவ்வொரு சங்கமும் ஒரு லட்சம் துணி பைகளை விநியோகித்து சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் செய்தியை வலியுறுத்தும்." இந்த ஆண்டு சுமார் 200 மருத்துவ முகாம்கள் நடத்தப்படும். அவர் TRF-க்கு $300,000 சேகரிப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளார். ஜூலை 1 நிலவரப்படி 86 சங்கங்கள் மற்றும் 3,700 உறுப்பினர்களுடன், பாலக்ஷா 1,000 புதிய ரோட்டேரியர்கள் மற்றும் ரோட்டராக்டர்களை சேர்க்கவும், 7–8 புதிய சங்கங்களை உருவாக்கவும் விரும்புகிறார். சேவை திட்டங்களும், நட்புறவும் அவரை 2001-ல் ரோட்டரிக்கு ஈர்த்தன.■

ஹரியானா, பஞ்சாப் மற்றும் ராஜஸ்தானில் ரோட்டரியின் பொது பிம்பத்தை மேம்படுத்தும் வகையில் 20 ரோட்டரி தங்குமிடங்கள் மற்றும் சதுக்கங்கள் நிறுவப்படும் (ஒவ்வொன்றும் ரூ.1 லட்சம் செலவில்) என்று பூபேஷ் மேத்தா கூறுகிறார். இதற்கான நிதி, உறுப்பினர்களின் பங்களிப்புகள், CSR நிதிகள் மற்றும் உலகளாவிய மானியம் ஆகியவற்றின் கலவையாக இருக்கும்.

அரசுப் பள்ளிகளில் கழிப்பறை தொகுதிகள் கட்டப்படும் (GG: $100,000). தனது சங்க வருகைகளின் போது, "அவர்களின் சமூகங்களின் தேவைகளை மதிப்பிட்டு, பின்னர் ஹாப்பி பள்ளிகள் மற்றும் சுகாதார திட்டங்களின் தன்மையைத் தீர்மானிப்பேன்" என்கிறார். சேவைத் திட்டங்களைச் செம்மைப்படுத்த இரண்டு மாதங்கள் ஆகும் என்று கூறி, மேத்தா, "நிகர உறுப்பினர் வளர்ச்சியில் 20% இலக்கை நிர்ணயித்துள்ளேன், மேலும் வரும் மாதங்களில் 20 புதிய சங்கங்களை உருவாக்குவேன்" என்கிறார். தற்போது, இந்த மாவட்டத்தில் 130 சங்கங்கள் சுமார் 2,700 ரோட்டேரியர்களுடன் உள்ளன. TRF-க்கு $250,000 வழங்குவது அவரது இலக்காகும்.

ரோட்டரியில் தனது நாற்பது ஆண்டுகளான பயணத்தை நினைவுகூர்ந்த அவர், 1984-ல் ரோட்டராக்டராக இணைந்ததாகவும், "1991-ல் DRR ஆனேன், இது என் வாழ்க்கையில் ஒரு திருப்புமுனையாக அமைந்தது" என்றும் கூறுகிறார். அவர் ஸ்வீடனுக்கு சென்ற ஒரு பரிமாற்றக் குழுவில் இருந்தார், அந்த அனுபவம் "வாழ்க்கை குறித்த ஒரு புதிய கண்ணோட்டத்தை எனக்கு அளித்தது" என்கிறார்.

GSE வருகையிலிருந்து திரும்பிய பிறகு, "ரோட்டரியின் இலட்சியங்களாலும் அதன் இளைஞர் திட்டங்களாலும் நான் ஈர்க்கப்பட்டு, 1991-ல் இந்த உலகளாவிய NGO-ல் இணைந்தேன், அதன் போலியோபிளஸ் பிரச்சாரத்தில் முழுமையாக ஈடுபட்டேன்." ரோட்டரி அதன் உறுப்பினர்களுக்கு "தலைமைத்துவப் பயிற்சி அளிப்பதன் மூலம், நெட்வொர்க்கிங் மற்றும் ஆளுமை வளர்ச்சிக்கு ஒரு சிறந்த வாய்ப்பை வழங்குகிறது, இது எனக்கு மிகவும் கவர்ச்சிகரமாக இருந்தது" என்று அவர் புன்னகைக்கிறார்.■



**பூபேஷ் மேத்தா**
வேளாண்மை
RC சிர்சா சீனியர்
RID 3090

## ஹாப்பி பள்ளிகளே அவரது மந்திரம்



**தினேஷ் பாபு**
திரைப்பட விநியோகம்
RC ஈஸ்ட் கோஸ்ட் ராம்நாட், RID 3212

## பல்லுயிர் காப்போம்

இவரது முதன்மை கவனம் சுற்றுச்சூழல் திட்டங்களில் இருக்கும், மாவட்டத்தின் கருப்பொருள் பல்லுயிர் காப்போம் என்பதாகும். "கடந்த சில ஆண்டுகளாக ரோட்டரி நிகழ்வுகளில் ஒருமுறை பயன்படுத்தும் பிளாஸ்டிக்கை நாங்கள் தவிர்க்கிறோம். இப்போது, புத்துயிர் பெற வேண்டிய 10 நீர்நிலைகளை நாங்கள் அடையாளம் கண்டு வருகிறோம், அதற்காக உலகளாவிய மானியத்திற்கு விண்ணப்பிப்போம். சுத்தம் செய்த பிறகு, நீர்நிலைகளுக்கு அருகில் ஒரு சுற்றுச்சூழல் பூங்காவை உருவாக்குவோம்." என்கிறார் தினேஷ் பாபு.

விருதுநகரில் மாணவர்களின் உதவியுடன் அமைக்கப்பட்ட ஒரு முன்னோடி குப்பைப் வங்கி பற்றிய நேர்மறையான கருத்துகளைத் தொடர்ந்து, "பள்ளிகளுடன் இணைந்து இதுபோன்ற 20 வங்கிகளை நிறுவ திட்டமிட்டுள்ளோம். மாணவர்கள் மூலம் மக்காத கழிவுகளை பிரிக்கும் செய்தியை குடும்பங்களுக்குப் பரப்புவதே இதன் நோக்கம்." சுகாதாரத்தைப் பொறுத்தவரை, $60,000 நன்கொடை மூலம் அரசுப் பள்ளிகளில் கை கழுவும் நிலையங்களுடன் 20 கழிப்பறைத் தொகுதிகளை அமைக்க அவர் திட்டமிட்டுள்ளார். 100 மாற்றுத்திறனாளிகளுக்கு, ஒவ்வொருவரும் ₹1.5 லட்சம் செலவில், கண்ணியமான வருமானம் ஈட்ட உதவும் வகையில் சிறிய கடைகள் அமைக்கப்படும். இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கப்பட்ட இதயப் பரிசோதனைப் பேருந்து, இந்த ஆண்டு 2,000 ரோட்டேரியர்கள் மற்றும் அவர்களின் துணைவர்களைப் பரிசோதிக்கும்.

தற்போது 120 சங்கங்களில் 4,700 ரோட்டேரியர்கள் உள்ள நிலையில், பாபு 450 புதிய உறுப்பினர்களைச் சேர்க்கவும், 10 புதிய சங்கங்களை உருவாக்கவும் விரும்புகிறார். TRF-க்கு $1 மில்லியன் வழங்குவது அவரது இலக்காகும். அவரது மனைவி மற்றும் மூத்த மகன் ரோட்டேரியர்கள், இளையவர் இன்டராக்டர். "நட்புறவும், பிணைய அமைப்பும் நான் உறுப்பினர்களை அதிகரிக்க உதவுகின்றன, இது எங்கள் சேவையை விரிவுபடுத்துகிறது" என்று 2000-ம் ஆண்டில் ரோட்டரியில் இணைந்த DG மேலும் கூறுகிறார்.■

# பிரான்சில் இந்திய மாணவியின் RYE அனுபவம்


ஜெய்ஸ்ரீ

பதினெட்டு வயதான காமாக்ஷி பகத் மும்பையிலிருந்து டுலூஸ் வழியாக பாரிசுக்கு தனது முதல் சர்வதேச விமானப் பயணத்தை தொடங்கியபோது உற்சாகம். ஆர்வம் மற்றும் ஒருவித பதட்டத்தின் கலவையால் நிரம்பியிருந்தாள். தெற்கு பிரான்சில் உள்ள அழகிய நகரமான கஹோர்ஸில் அவள் பத்து மாதம் செலவிட வேண்டும். அங்கு அவள் முன்பின் சந்தித்திராத விருந்தாளி குடும்பத்துடன் தங்கியிருக்க வேண்டும்.பள்ளியில் படித்த பிரெஞ்சு மொழியில்தான் அவள் பேச வேண்டும். மேலும் அவள், தனது சொந்த கலாசாரங்களிலிருந்து மாறுபட்ட ஒன்றுடன் மூழ்கியிருக்க வேண்டும். ரோட்டரி இளைஞர் பரிமாற்ற திட்டத்தின் (Rotary Youth Exchange) பங்கேற்பாளராக ஒரு உலகளாவிய கண்ணோட்டத்தை விரிவுபடுத்தும் நோக்கத்துடன் தன்னை மாற்றிக்கொள்ளும் ஒரு பயணத்தை அவள் தொடங்கியிருந்தாள்.

RID 3060-க்கு உட்பட்ட பரோடா ரோட்டரி சங்கத்தின் முன்னாள் தலைவர் ஜெயேஷ்குமார் மற்றும் 3060-ன் இன்னர்வீல் சங்க மாவட்டச் செயலாளர் சினேகா ஆகியோரின் மகளான காமாக்ஷி, பரோடா ரோட்டரி சங்கத்தின் ஆதரவில், RID 1700 கஹோர்ஸ் ரோட்டரி சங்கத்தின் விருந்தினராகச் செல்கிறார். டுலூஸ் நகரை அவர் சென்றடைந்தபோது அவரை விருந்தினர் குடும்பத்தின் தாயார் இசபெல் மற்றும் மகள்கள் நோரா மற்றும் மைனா உற்சாகமாக வரவேற்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு, அவர் ஜப்பான், தைவான், நியூஸிலாந்து, மெக்ஸிகோ, பிரேசில் மற்றும் கொலம்பியா மாணவர்களுடன் இளைஞர் பரிமாற்றத் திட்டத்தில் பங்கேற்றார். “பரதநாட்டியத்தின் மூலம் இந்திய கலாசாரத்தை நான் அவர்களிடம் அறிமுகப்படுத்தினேன்,” என்று நினைவுகூர்ந்தார் காமாக்ஷி. தனது பிரெஞ்சு பள்ளியில் RYE திட்டத்தை அவர் விளக்கினார். பல்வேறு ரோட்டரி நிகழ்வுகளில் சந்திப்புகளில் பரோடா ரோட்டரி சங்கத்தின் சமூகசேவைகளை எடுத்துரைத்தார். மேலும் அவரது விருந்தினர் சங்கத்தின் சமூக நடவடிக்கைகளிலும் தம்மை ஈடுபடுத்திக் கொண்டார்.

நிதி திரட்டும் முயற்சிகளிலும் அவர் தீவிரமாக பங்கேற்றார். இன்டர்மார்க் மற்றும் கிரெடிட் அக்ரிகோல் என்னும் அரசு சாரா தொண்டு நிறுவனங்களுக்கு தினசரி பொருட்களை வழங்க நன்கொடைகள் சேகரித்தார். புற்றுநோயால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்குத் தேவையான மருத்து உபகரணங்களை கொள்முதல் செய்யவும் உதவினார். ஒரு மறக்கமுடியாத திட்டம் ஆபரேஷன் 30,000 போம்ஸ். இது ஒரு ரோட்டரி நிதி திரட்டும் திட்டமாகும். பார்வையற்றோருக்கு வழிகாட்ட




*பிரான்சின் கஹோர்ஸில் பார்வையற்றோருக்கான வழிகாட்டி நாய்களை வழங்குவதற்காக நிதி திரட்டுவதற்காக RYE மாணவி காமாக்ஷி பகத் 30,0000 போம்ஸ் திட்டத்தில் பங்கேற்கிறார்.*



நாய்கள் வழங்குவதற்காக ஆப்பிள்கள் மற்றும் ஆப்பிளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பொருள்களை விற்று நிதி திரட்டப் பட்டது. இந்த நிகழ்வுக்கு கஹோர்ஸ் லயன்ஸ் சங்கம் ஆதரவளித்தது.

உலக உணவு வகைகளைக் கொண்டாடும் ஒரு திட்டமான "ரீபாஸ் இன்டர்நேஷனல்" நிகழ்ச்சியில் பங்கேற்பது வேடிக்கையாகவும் அறிவூட்டும் அனுபவமாகவும் இருந்தது. சங்கங்கள், பள்ளிகள் மற்றும் பொது நிறுவனங்களில் இந்திய கலாசார பழக்க வழக்கங்களை பரிமாறிக்கொள்ள எனக்கு பல வாய்ப்புகள் கிடைத்தன. ரோட்டரி இளைஞர் பரிமாற்றத் திட்ட சகோதர மாணவர்களிடமிருந்து பல நாடுகள் பற்றிய தகவல்களை நான் தெரிந்து கொண்டேன். உண்மையில் கடலைப் பார்ப்பதற்காக கிணற்றிலிருந்து வெளியே வருவதுபோல் இருந்தது" என்றார்.



*காமாக்ஷி ஒரு தனி சோப்ரானோவை நிகழ்த்துகிறார்.*

ஜூன் மாதம் 10-ம் தேதி இந்தியா திரும்பிய காமாக்ஷி, தமது பயணத்தை திரும்பிப் பார்க்கையில், இந்த அனுபவம் தம்மை முற்றிலும் மாற்றிவிட்டதாக கூறுகிறார். "நான் பிரான்ஸ் சென்றபோது, எனது பள்ளி அளவிலான பாடங்கள் எனக்கு உதவி செய்தாலும் நான் பிரெஞ்சு மொழியிலேயே தான் உரையாட வேண்டியிருந்தது. இப்போது என்னால் பிரெஞ்சு மொழியை எளிதாகப் பேச முடிகிறது". பிரெஞ்சு பள்ளியில் பாடப்படும் பாடலை அவர் அதே மொழியில் பாடி தனது தனித்திறமையை வெளிப்படுத்தினார். கடந்த 10 மாதங்களில் அவர் ஊரகப் பகுதியில் உள்ள குடும்பத்தினர் உள்பட பல குடும்பங்களில் விருந்தினராக வாழ்ந்திருக்கிறார். "புதிய சூழல்கள் மற்றும் பழக்க வழக்கங்களுக்கு ஏற்ப, வெவ்வேறு மக்கள் மற்றும் கண்ணோட்டங்களுக்கு ஏற்ப வாழ எனக்கு அது கற்றுக் கொடுத்தது.

என்னை விட மிகவும் வித்தியாசமான கலாசார, மொழி, பழக்க வழக்கங்கள் கொண்டவர்களை நான் எனது வாழ்நாள் நண்பர்களாக அடைந்தது தான் எனக்கு மிக்க மகிழ்ச்சி என்று கூறி புன்னகைக்கிறார் காமாக்ஷி.■

*பிற நாடுகளைச் சேர்ந்த பரிமாற்ற மாணவர்களுடன்*



# ரோட்டரியின் பல்வேறு திட்டங்கள்

## மாணவிகளுக்கு படுக்கைகள் நன்கொடை

சிங்புரம் கஸ்தூரிபா காந்தி பாலிகா வித்யாலயா என்னும் உண்டுறை பள்ளியில் 255 மாணவிகளுடைய நலத்துக்காகப் படுக்கைகளைக் கொடையளித்தது RC ஸ்ரீகாகுளம், RID 3020. இந்த முன்னெடுப்பு ஸ்ரீகாகுளம் பகுதி மாவட்டச் செயலாளர் சிவசங்கர் தேவரசெட்டி உள்ளிட்ட சங்க உறுப்பினர்களுடைய முயற்சிகளால் நடைபெற்றது.

KGBV முதல்வர் ஜம்பு லலிதா இந்தச் சங்கத்துக்கு நன்றி தெரிவித்தார், "எங்கள் மாணவர்களில் பலர் தொலைதூரப் பகுதிகளிலிருந்து வருகிறவர்கள், ஏழைக் குடும்பங்களைச் சேர்ந்தவர்கள். இந்த வசதியான படுக்கைகள் அவர்களுக்குக் கண்ணியமான, பாதுகாப்பான உணர்வை வழங்கும்."■




*RC ஸ்ரீகாகுளம் உறுப்பினர்களால் ஒரு பள்ளியில் பெண்களுக்கு படுக்கைகள் நன்கொடையாக வழங்கப்பட்டன.*



*கபுர்தலா மாவட்ட நீதிபதி அமித் குமார் பஞ்சால், RID 3070 PDG S P சேத்தி மற்றும் RC பக்வாரா ஜெம்ஸ் முன்னாள் தலைவர் பவன் குமார் கல்ரா முன்னிலையில் ஒரு பிணவறை வேனை கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.*

## பக்வாரா-வில் தொடங்கப்பட்ட சவ வண்டி

இந்த நகரத்திலும் அதைச் சுற்றியும் இறுதிச் சடங்குச் சேவைகளை வழங்குவதற்கென குளிர்விப்பு வசதி கொண்ட சவ வண்டி ஒன்றை RC பக்வாரா ஜெம்ஸ், RID 3070, ஆதரித்துள்ளது.

இந்த வண்டியைக் கபுர்தலா மாவட்ட நீதியரசர் அமித் குமார் பஞ்சால் தொடங்கிவைத்தார். இந்த நிகழ்ச்சியில் PDG S P சேதி, அப்போதைய சங்கத் தலைவர் பவன் குமார் கல்ரா, பிற உறுப்பினர்கள் பங்கேற்றனர். பக்வாரா மற்றும் அருகிலுள்ள கிராமங்களில் உள்ளோருக்குச் சேவையாற்றும் இந்த வண்டி ரோட்டரிச் சக்கரச் சின்னத்துடன் அமைந்துள்ளது. இது இந்தத் துணி நகரத்திலும் அதைச் சுற்றியும் இந்தச் சங்கத்தின் பொதுத் தோற்றத்தை மேம்படுத்தும்.■

## 15 பேருக்கு மின்-ஆட்டோக்கள்

RC பெங்களூர் வெஸ்ட், RID 3192, தன்னுடைய ஆண்டு CSR திட்டத்தின்கீழ் பெங்களூரு குரோனிக் அறக்கட்டளையில் நடத்திய நிகழ்ச்சியில் 15 பேருக்கு (இதில் 7 பேர் மாற்றுத் திறனாளிகள்) மின்-ஆட்டோக்களை வழங்கினார் IPDG மகாதேவ் பிரசாத். இந்தச் சங்கம் அடோஸ் இந்தியாவுடன் இணைந்து இதுவரை 40க்கும் மேற்பட்டோருக்கு மின்-ஆட்டோக்களைக் கொடையளித்துள்ளது.

இந்த வண்டிகளில் தீயணைப்பான்கள், முதலுதவிப் பொதிகள், தண்ணீர்ப் புட்டிப் பைகள், படிக்கும் பொருட்கள் பொருத்தப் பட்டுள்ளன. ஓட்டுநர்களுடைய மேலுடையில் ரோட்டரியின் சின்னம் அமைந்துள்ளது. இந்தத் திட்டத்தை RCகள் பெங்களூர் கிரீன்பார்க் மற்றும் ஓயாசிஸ், க்ரோனிக் அறக்கட்டளை ஆகியோர் ஆதரித்துள்ளனர். க்ரோனிக் அறக்கட்டளையின் மேலாண்மை அறங்காவலர் ரமேஷ் ஷிவண்ணா இந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். இந்தத் திட்டத்தின் தலைவர், நவீன் கொலவரா.■



*குரோனிக் பவுண்டேஷன் நிர்வாக அறங்காவலர் ரமேஷ் சிவண்ணா மற்றும் ரோட்டேரியன்கள் முன்னிலையில்,* RID 3192 IPDG *மகாதேவ் பிரசாத் ஒரு பயனாளிக்கு ஒரு மின்-ஆட்டோவை வழங்குகிறார்.*

## சம்பல்பூரில் ரோட்டரி கலைக் கல்விக்கழகம்

காட்சி, நிகழ்த்து, இலக்கியக் கலைகளை முன்னிறுத்தும் நோக்கத்துடன் RC வீரபூமி சம்பல்பூர், RID 3261 ரோட்டரி கலைக் கல்விக் கழகத்தை நிறுவியுள்ளது. இது இந்தச் சங்கத்தின் பதிவுத் தலைவர் மனோஜ் சௌத்ரி, ரோகித் சுபாகர் தலைமையில் தொடங்கியுள்ளது. கலையை அனைவருக்கும் கிடைக்கச் செய்கிற பயிலரங்குகள், கருத்தரங்குகள், போட்டிகள் இங்கு நடைபெறும்.

தொடக்க விழாவின் போது, சௌத்ரியின் தனி ஓவியக் கண்காட்சி நடைபெற்றது. சம்பல்பூர் பள்ளி மாணவர்களுக்கான ஹாக்கிப் போட்டியை இந்தக் கலைக் கல்விக் கழகம் ஆதரிக்கிறது. “இந்தக் கலைக் கல்விக் கழகத்தின் குறிக்கோள், கிராமப்புறத்தோரிடம் ஒளிந்துள்ள திறமையைப் பன்னாட்டு அரங்கில் காட்சிப்படுத்துவது” என்றார் சௌத்ரி. இவர்கள் ஒடிஷா கலைஞர்களுக்கான அபுதய் என்ற ஓவியப் பயிலகத்தை நடத்தினார்கள், பின்னர், RID 3261-ன் டிஸ்கானில் ஒரு கருத்தரங்கத்தை நடத்தினார்கள்.■



RC *வீர்பூமி சம்பல்பூர் பட்டயத் தலைவர் மனோஜ் சவுத்ரி கலைஞர்களைப் பாராட்டுகிறார்.* RID 3261 IPDG *அகில் மிஸ்ரா இடதுபுறத்தில் உள்ளார்.*

# ரோட்டரி அறக்கட்டளை அறங்காவலர்கள் 2025–26

*அறக்கட்டளையின் நிர்வாகத்தை அறங்காவலர்கள் நிர்வகிக்கின்றனர். RIPE, RI வாரியத்தால் 4 ஆண்டு காலத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அறங்காவலர்களை பரிந்துரைக்கிறார்.*




## ஹோல்கர் நாக்

தலைவர் 2025–26
அறங்காவலர் 2022–26
RC ஹெர்சோக்டம்
லாயன்பர்க்-மோலின், ஜெர்மனி

ஹோல்கர் நாக், நாக் கேஜி என்னும் ரியல் எஸ்டேட் நிறுவனம் மற்றும் 1868 ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட குடும்ப தொழிலான நாக் பேக்கரி என்டர்பிரசைஸ் நிறுவனத்தின் உரிமையாளராக இருந்தார்.

1993-ம் ஆண்டு முதல் ரோட்டேரியனாக இருக்கிறார். ரோட்டரி தலைவர், பொருளாளர், இயக்குநர், நடுவர், உறுப்பினர் மற்றும் பல்வேறு குழுக்களின் தலைவர், CoL பிரதிநிதி, அறக்கட்டளை மற்றும் பெருநன்கொடையாளர் ஆலோசகர் மற்றும் கற்றல் வசதியாளர் என பல பதவிகளை வகித்துள்ளார்.

அவரும் அவரது மனைவி சூசேனும் 40-க்கும் மேற்பட்ட RYE மாணவர்களை விருந்தினராக ஏற்றுள்ளனர். இருவரும் TRF-ன் பெரு நன்கொடையாளர். மேலும் பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டியின் உறுப்பனர்கள்.




## ஜெனிஃபர் ஜோன்ஸ்

Chair-elect 2025–26
அறங்காவலர் 2023–27
RC விண்ட்ஸர்-ரோஸ்லாண்ட்,
ஒன்டாரியோ

ஜென்னிஃபர் ஜோன்ஸ் 2022–23-ம் ஆண்டில் ரோட்டரி இன்டர்நேஷனல் தலைவராக இருந்தார். ரோட்டரியின் 117 ஆண்டுக்கால வரலாற்றில் தலைவர் பதவியை வகித்த முதல் பெண்மணி.

அவர் தலைவராக இருந்தபோது ரோட்டரியின் மீது தாக்கத்தை ஏற்படுத்த சுற்றுப்பயணம் மேற்கொண்டார். உலகம் முழுவதிலும் உள்ள ரோட்டரியின் செயல்பாட்டாளர் களின் நிலையான பெரிய திட்டங்களின் கதைகளை காட்சிப்படுத்த உயர்நிலை ஊடக வல்லுனர்கள் மற்றும் சமூகத்தில் செல்வாக்குபெற்றவர்களை தன்னுடன் அழைத்துச் சென்றார்.

சுயநலமில்லாத சேவைக்காக ரோட்டரி விருது, சிறப்புமிக்க சேவைக்கான ரோட்டரி அறக்கட்டளையின் விருது மற்றும் பாராட்டுப் பத்திரம் மற்றும் சில்வியா விட்லாக் தலைமைக்கான விருதையும் ஜோன்ஸ் பெற்றுள்ளார். மேலும் ஒய்.எம்.சி.ஏ. அமைதிப் பதக்கம், ராணியின் வைர விழா பதக்கம், மற்றும் வைன் ஸ்டேட் பல்கலைக்கழகத்தின் அமைதிகாப்பாளர் விருது (இந்த விருதை கனடா நாட்டைச் சேர்ந்த ஒருவர் பெருவது முதல் முறையாகும்) உள்பட பல கௌரவங்களைப் பெற்றுள்ளார்.



## கிரெக் இ போட்

துணைத் தலைவர் 2025–26
அறங்காவலர் 2022–26
RC எவர்கிரீன், கொலராடோ

கிரேக் போட், ஒய்வுபெற்ற, சான்றளிக்கப்பட்ட பொதுக்கணக்காளர் மற்றும் தனிபட்ட நிதி ஆலோசனை நிபுணர். 1979-ம் ஆண்டு சொந்தமாக ஒரு நிறுவனத்தை நிறுவினார்.

1982-ம் ஆண்டில் அவர் ரோட்டரியில் சேர்ந்தார். RI-ன் துணைத்தலைவர் மற்றும் இயக்குநராகப் பணியாற்றியுள்ளார்.

ரோட்டரி அறக்கட்டளையின் பெருநன்கொடையாளர் ஆலோசகர் என்ற முறையில் கிரெக், மில்லியன் டாலர் இரவு விருந்துக்கு ஏற்பாடு செய்திருந்தார். இதன் மூலம் ஒரே இரவில் 3.1 மில்லியன் டாலர் நிதி திரட்டினார். சுயநலமில்லாத சேவைக்கான ரோட்டரி விருதை வென்றவர். சிறப்பான சேவைக்காக TRF-ன் பாராட்டுப் பத்திரம் பெற்றவர். அவரும் அவரது மனைவி பாம் இருவரும் பெரு நன்கொடையாளர்கள். AKS உறுப்பினர்கள். அதுமட்டுமல்ல பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டி உறுப்பினர்கள்.



## ஆன்-பிரிட் அஸெபோல்

அறங்காவலர் 2024–28
RC ஃபலூன்-கொப்பர்வாகன், ஸ்வீடன்

டாலர்னா மாவட்டத்தின் கவுன்சிலராக பலமுறை பதவி வகித்த அஸெபோல், ரிக்ஸ்டாக் சார்பில் ஸ்வீடன் நாடாளுமன்றத்தில் உறுப்பினராகப் பதவி வகித்து 2022-ல் ஓய்வுபெற்றார். பெண் எம்.பி.யான அவர் சட்டம், கல்வி உள்ளிட்ட பல்வேறு குழுக்களில் உறுப்பினராக இருந்தவர். அரசியலுக்கு வருவதற்கு முன்பாக ஆசிரியராகவும், முதல்வராகவும் பணியாற்றினார்.

அஸெபோல் 1993-ம் ஆண்டு ரோட்டரியில் தமது சங்கத்தின் முதல் பெண் உறுப்பினராக சேர்ந்தார்.

ரஷியாவின் செயின்ட் பீட்டர்ஸ் பர்கில், கழிவுநீர் சுரங்கங்களில் வாழ்க்கை நடத்திவந்த குழந்தைகளுக்காக வீடு கட்டிக் கொடுத்ததுதான் அவரின் முதல் சர்வதேச திட்டமாகும். நேபாளத்தில் ஊரகப்பகுதியில் அமைந்திருந்த மருத்துவமனைக்கு நல்ல தண்ணீர் வழங்கும் சர்வதேச மானியத் திட்டத்தையும் தலைமையேற்று அவர் செயல்படுத்தினார். பால்டிக் நாடுகள் மற்றும் உக்ரைனில் பல்வேறு ரோட்டரி திட்டங்களையும் அவர் செயல்படுத்தினார். உக்ரைனிலிருந்து அகதிகளாக ஸ்வீடனுக்கு வந்தவர்களுக்கு உதவிசெய்தார்.

அஸெபோல் ரோட்டரி அறக்கட்டளையின் Benefactor. பெரு நன்கொடையாளர், பால் ஹாரிஸ் பெஃல்லோ மற்றும் பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர். சிறப்பான சேவைக்காக அங்கீகாரம் மற்றும் பாராட்டுப் பத்திரம் பெற்றவர்.



## மார்தா ஹெல்மேன்

அறங்காவலர் 2022–26

RC பூத்பே ஹார்பர், மைனே

மார்டி ஹெல்மேன், வர்த்தக நிர்வாகிகளுக்கான எழுத்தாளராகவும் மெக்ரா-ஹில் பத்திரிகை மற்றும் அமெரிக்க நிர்வாக சங்கத்தில் ஆசிரியராகவும் தனது வாழ்க்கையை கழித்தார். பின்னர் அவர், ஓட்டோ மற்றும் பிரான் வால்டர் அறக்கட்டளையின் தலைவராகப் பணியாற்றினார். வால்டர் அறக்கட்டளை TRF-உடன் கூட்டு சேர்ந்து 2025-ம் ஆண்டு இஸ்தான்புல்லில் உள்ள பஹ்செஷர் பல்கலைக்கழகத்தில் ரோட்டரி அமைதி மையத்தை ஏற்படுத்தியது. அதற்கு நிதியுதவியும் அளித்தது.

மார்டியும், மறைந்த அவரது கணவர் பிராங் இருவரும் 2003 ஆம் ஆண்டு பூத்பே ஹார்பர் ரோட்டரி சங்கத்தில் சேர்ந்தனர். மார்டி மண்டலங்கள் 28 மற்றும் 32-க்கு இயக்குநராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

TRF-க்கு நிதி திரட்டுவதில் மார்டி தீவிர ஆர்வம் காட்டியவர். ரோட்டரி அமைதி மையங்களுக்கு 1 மில்லியன் டாலர் நிதி திரட்டிய சகுஜி டனாகா ரோட்டரி அமைதி பெஃல்லோஷிப் முயற்சியை ஆதரித்தார்.

மார்டி ஒரு AKS உறுப்பினர். மேலும் பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் போலியோ பிளஸ் சொசைட்டி உறுப்பினராக இருந்து ஆதரிக்க தொடங்கினார். மார்டியும் பிராங்கும் TRF-ன் லெகசி சொசைட்டியின் நிறுவன உறுப்பினர்கள்.



## பிராங் சிங்-ஹு ஹார்ங்

அறங்காவலர் 2024–28

RC பஞ்சியாவ் வெஸ்ட், தைவான்

பிராங் ஹார்ங், 1988-ம் ஆண்டு டிரோஜன் பல்மருத்துவ சிகிச்சை மையத்தை நிறுவி, தலைமைவகித்து நடத்தி வந்தார். 1993-ம் ஆண்டு தனது சங்கத்தின் பட்டய உறுப்பினராக ரோட்டரியில் சேர்ந்தார்.

TRF-ன் தொழில்நுட்ப ஆலோசகர் குழுவின் உறுப்பினர் என்ற வகையில், பாலி மற்றும் தைவானில் உள்ள முகச்சீரமைப்பு அறுவைச்சிகிச்சை நிபுணர்களுடன் தொடர்பு கொண்டு மங்கோலியா மற்றும் நேபாளத்தில் தொழில் பயிற்சிக்குழுவை வழிநடத்தினார்.

அவரது துணைவியார் ஷு-யான் சுவாங்கும், அவரது சங்கத்தில் உறுப்பினராக உள்ளார். இருவரும் AKS உறுப்பினர்கள். ஹார்ங் சிறப்பான சேவைக்கான ரோட்டரியின் சுயநலமில்லா சேவைக்கான விருது பெற்றவர்.



## சுன்-வூக் ஹியூன்

அறங்காவலர் 2023–27

RC சியோல்-ஹன்சூ, கொரியா

சுன்-வூக் ஹியூன், சியோலை தளமாகக் கொண்டு செயல்படும் கிம் அண்ட் சாங் நிறுவனத்தின் கூட்டாளி. இது ஆசியாவிலேயே மிகப்பெரிய சட்ட நிறுவனமாகும். அங்கு அவர், 1981-ம் ஆண்டு முதல் தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு பயிற்சிக் குழுவின் தலைவராகப் பணியாற்றி வருகிறார்.

அவர், தனது சங்கத்தில் 1991-ம் ஆண்டு பட்டய உறுப்பினரானார். கொரியாவில் உள்ள ரோட்டரி அறக்கட்டளையின் இயக்குநராகவும் செயல்பட்டு வருகிறார்.

ஹியூன் மற்றும் அவரது மனைவி ஜங்-ரிம் ஓ-வும் AKS உறுப்பினர்கள்.



## கோர்டன் மெக்கினலி

அறங்காவலர் 2024–28

RC சௌத் குயீன்ஸ்ஃபெர்ரி, ஸ்காட்லாந்து

கோர்டன் மெக்கினலி, பிரிட்டிஷ் சிறார் பல் மருத்துவ சங்கத்தின் கிழக்கு ஸ்காட்லாந்து கிளையின் தலைவர் மற்றும் கல்வித்துறையில் பல்வேறு பதவிகளை வகித்தவர்.

அவர் 1984-ம் ஆண்டில் தனது 26 வது வயதில் ரோட்டரியில் சேர்ந்தார். 2023–24-ம் ஆண்டில் அவர் RI தலைவராகவும், கிரேட் பிரிட்டன் மற்றும் அயர்லாந்தின் ரோட்டரியின் சர்வதேச துணைத்தலைவராகவும் பணியாற்றினார். அவரும் அவரது மனைவி ஹீதரும் (இவர் பார்டர்லாண்ட் ரோட்டரி சங்கத்தின்- பாஸ்போர்ட் குழு) பால் ஹாரிஸ் உறுப்பினர்கள், பெரு நன்கொடையாளர்கள். ரோட்டரி அறக்கட்டளை Benefactor மற்றும் Bequest சொசைட்டியின் உறுப்பினர்கள்.



## இஜியோமா பேர்ள் ஓகோரோ


அறங்காவலர் 2024–28

RC போர்ட் ஹர்கோர்ட், நைஜீரியா

இஜியோமா பேர்ள், காப்பீட்டுத்துறை, சந்தை மேம்பாடு, நிர்வாக மேலாண்மைத்துறையில் 30 ஆண்டுகள் அனுபவம் வாய்ந்தவர். ஓகாரோ, தனது தந்தையின் நினைவாக ரோமனஸ் எமனுரு அறக்கட்டளையை நிறுவினார். பெண்களுக்கு அதிகாரமளித்தல், பெண்கள் மேம்பாடு, பெண்கள் கல்விக்காக இவரது நிறுவனம் செயல்பட்டு வருகிறது.

சர் எமேகா ஓஃபர் அறக்கட்டளைக்காகவும் சேவை செய்து வருகிறார்.

இஜியோமா 1999-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். 2019-ம் ஆண்டு போலியோவை முடிவுக்கு கொண்டுவருவதற்கான போராட்டத்தை வழிநடத்திய ஐந்து பெண்களில் இவரும் ஒருவர். ரோட்டரியின் சிறப்புமிக்க சேவைக்கான விருதையும், போலியோ இல்லாத உலகத்தை உருவாக்கும் முயற்சியில் பிராந்திய சேவைக்கான விருதையும் பெற்றுள்ளார். அவரும், அவரது கணவர் கிங்ஸிலியும் பெரு நன்கொடையாளர்கள். பெக்வெஸ்ட் சொசைட்டி உறுப்பினர்கள், Benefactors அவர்கள் இருவர் மற்றும் அவர்களின் இரு குழந்தைகளும் பால் ஹாரிஸ் உறுப்பினர்கள்.




## பரத் பாண்ட்யா

அறங்காவலர் 2022–26

RC போரிவிலி, இந்தியா

பரத் பாண்ட்யா, பொது மருத்துவர் மற்றும் லேப்ராஸ்கோபிக் அறுவைச்சிகிச்சை நிபுணர். அவரும், அவருடைய மனைவியும் மகப்பேறு மருத்துவருமான மாதவியும் இணைந்து மும்பையில் மருத்துவமனையை நடத்தி வருகிறார்கள். பாண்ட்யா 1989-ல் அவரது சங்கத்தில் பட்டய உறுப்பினராகச் சேர்ந்தார். அவர் 3140 மாவட்டத்தின் ஆளுநராக இருந்தபோது, அவரது மாவட்டம் TRF-க்கு 3 மில்லியன் டாலர் நிதிப் பங்களிப்புச் செய்தது. 2006–07-ம் ஆண்டில் உலக அளவில் அதிக நிதிப்பங்களிப்பு செய்த பட்டியலில் முதன்மை இடம் பெற்றது. அவர் பல்வேறு திட்டங்களை தலைமையேற்று செயல்படுத்தியுள்ளார். குடிநீர், சுகாதாரம் உள்ளிட்ட அறக்கட்டளை மானியத் திட்டங்கள் இதில் அடங்கும். கிராமத்தில் வசிக்கும் மக்கள் நீண்ட தொலைவு சென்று தண்ணீர் எடுத்துவர வேண்டிய அவசியம் இல்லாதவாறு தடுப்பணைகளை நிறுவியுள்ளார்.

RI இயக்குநர், பொருளாளர், ரோட்டரி உறுப்பினர் சேர்க்கை திட்டமிடல் குழு உறுப்பினர், தலைமைத்துவ மேம்பாடு மாநாடு மேம்பாட்டுக்குழு மற்றும் இந்தியாவில் போலியோ பிளஸ் குழு உறுப்பினர் என பல பதவிகளை வகித்துள்ளார். 2023–24-ல் அறங்காவலர் துணைத் தலைவராக பணியாற்றியுள்ளார். தமது மாவட்டத்தில் பால் ஹாரிஸ் சொசைட்டியின் நிறுவன உறுப்பினராகவும் உள்ளார். ரோட்டரியின் சுயநலமில்லா சேவைக்கான விருது, சிறப்புமிக்க சேவைக்கான பாராட்டுப் பத்திரம் பெற்றவர். ரோட்டரி அறக்கட்டளையின் சிறந்த சேவைக்கான விருது பெற்றவர். அவரும் அவரது மனைவி மாதவியும் பெருநன்கொடையாளர்கள்.




## விக்கி புலிஸ்

அறங்காவலர் 2025–29

RC ஸ்பார்க்ஸ், நெவாடா

விக்கி புலிஸ், 1992-ம் ஆண்டு அவரது சங்கத்தில் முதல் பெண் உறுப்பினராகச் சேர்ந்தார். இளைஞர்களுக்கான தலைமைத்துவ மேம்பாட்டில் ஆர்வம் கொண்டவர். ரோட்டரி அமைதி மையக்குழுவிலும் அவர் பணியாற்றி வருகிறார். பிராட்போர்டு, இங்கிலாந்து மற்றும் இஸ்தான்புல்லில் நடைபெற்ற நிகழ்வுகளிலும் அவர் பங்கேற்றுள்ளார்.

புலிஸ் மற்றும் அவரது கணவர் டிம் இருவரும் ரோட்டேரியன்கள். AKS உறுப்பினர்களாக அவர்கள் ரோட்டரி அறக்கட்டளையை ஆதரித்து வருகின்றனர். பால் ஹாரிஸ், பெக்வெஸ்ட் மற்றும் போலியோ பிளஸ் சங்கங்களின் உறுப்பினர்களாகவும் இருந்து வருகின்றனர்.



## கார்லோஸ் சாண்டோவால்

அறங்காவலர் 2023–27

RC சான் நிகோலாஸ் டீ லோஸ் கார்ஸா, மெக்ஸிகோ

கார்லோஸ் சாண்டோவால், எரிசக்தி துறையில் முன்னணி நிறுவனமான ஆர்ஸான் கார்ப். நிறுவனத்தின் தலைவர்.

1975-ம் ஆண்டில் அவர் ரோட்டரியில் சேர்ந்தார். மறைந்த தமது மகன் நினைவாக கார்லோஸ், மெக்ஸிகோ, டொமினிகன் குடியரசு மற்றும் கொலம்பியா முழுவதிலும் உள்ள பெண் தொழில் முனைவோர் மற்றும் பொருளாதார மற்றும் சமூக மேம்பாட்டுத் திட்டங்களை ஆதரிக்க TRF-க்கு நிதிப்பங்களிப்பு செய்திருந்தார்.

சிறந்த சேவைக்கான ரோட்டரி அறக்கட்டளையின் விருது பெற்றவர் சாண்டோவால். அவரும் அவரது மனைவி மார்தாவும் AKS உறுப்பினர்கள்.



## டென்னிஸ் ஷோர்


அறங்காவலர் 2023–27

RC ஹாவ்தார்ன், ஆஸ்திரேலியா

டென்னிஸ் ஷோர், நியூ சௌத் வேல்ஸ் பல்கலைக்கழகத்தில் இளங்கலை மற்றும் முதுகலை பட்டம் பெற்ற வேதியியல் பொறியாளர். அவர், ஆஸ்திரேலிய கூழ் மற்றும் காகித தொழிற்சாலை தொழில்நுட்ப சங்கத்தின் உறுப்பினர். சிறந்த சேவைக்கான விருது பெற்றவர்.

ஷோர் 1980-ம் ஆண்டில் ரோட்டரியில் சேர்ந்தார். உதவித்தொகை வழங்குவது முதல், கம்போடியாவில் தைமூர் லெஸ்டி ஜனநாயக குடியரசு மருத்துவமனையில் குடிநீர் தொட்டியை நிறுவுதல் உள்ளிட்ட திட்டங்களை தமது சங்கத்தின் ஆதரவுடன் நிறைவேற்றினார். தனது மண்டலத்தில் ரோட்டரி அறக்கட்டளை மானியங்களை வளர்ப்பதற்கு அடிமட்ட அளவில் பணிகளைச் செய்துள்ளார் ஷோர். 2017-ல் இரவு விருந்து நடத்தி ரோட்டரி அறக்கட்டளைக்கு 3.5 மில்லியன் டாலர் நிதி திரட்டினார்.


அவரும் அவரது மனைவி லிண்டாவும் பெரு நன்கொடையாளர்கள் மற்றும் பெக்வெஸ்ட் சொசைட்டி உறுப்பினர்கள். 9800 மாவட்டத்தின் பால் ஹாரிஸ் சொசைட்டி மற்றும் போலியோ பிளஸ் சொசைட்டி உறுப்பினர். சிறப்பு மிக்க சேவைக்கான TRF-ன் பாராட்டு பத்திரம் பெற்றவர்.



**கட்சுஹிகோ டட்ஸுனோ**
அறங்காவலர் 2025-29
RC டோக்கியோ-மேற்கு
ஜப்பான்

கட்சுஹிகோ டட்ஸுனோ, டட்ஸுனோ கார்ப். நிறுவனத்தின் தலைமைச் செயல் அதிகாரியாக பணியாற்றி வருகிறார். 1982-ம் ஆண்டு முதல் ரோட்டேரியனாக இருந்து வருகிறார். ஜப்பானில் பதிவு செய்யப்பட்ட மிக சக்திவாய்ந்த பூகம்பங்களில் ஒன்றான 2011 டோஹோகு பூகம்பம் மற்றும் சுனாமியால் பாதிக்கப்பட்டு மீண்டு வந்த மக்களுக்கு நிவாரண உதவி அளிக்கும் ஜப்பானிய ரோட்டரி குழுவின் உறுப்பினராக இருந்தார்.

AKS உறுப்பினர் என்ற வகையில் TRF-க்கு ஆதரவு அளித்து வருகிறார். பால் ஹாரிஸ் சொசைட்டி உறுப்பினர், Benefactor மற்றும் பெரு நன்கொடையாளர்.



**ஸ்டெஃபனி அர்ச்சிக்**
அறங்காவலர், 2025–29
RC மெக்முர்ரே, பென்சில்வேனியா

ஸ்டெஃபனி அர்ச்சிக் 2024–25 ஆம் ஆண்டில் RI தலைவாக பணியாற்றினார். RI இயக்குநர், TRF அறங்காவலர் மற்றும் திட்டமிடல் குழு மற்றும் TRF நூற்றாண்டு விழாக்குழு தலைவராகவும் செயலாற்றியிருக்கிறார்.

1991-ம் ஆண்டு முதல் ரோட்டரி உறுப்பினராக இருக்கும் ஸ்டெஃபனி, இந்தியா மற்றும் நைஜீரியாவில் தேசிய நோய்த்தடுப்பு தின நிகழ்வு உள்ளிட்ட பல்வேறு சேவைத் திட்டங்களில் பங்கேற்றுள்ளார். வியட்நாமில் ஒரு பள்ளியை கட்டுவதற்கு இதர சங்கங்களுடன் இணைந்து பணியாற்றியுள்ளார். டொமினிக்கன் குடியரசில் தண்ணீர் வடிகட்டிகளை நிறுவியுள்ளார்.

உக்ரைனில் புதிய ரோட்டரி உறுப்பினர்களுக்கு வழிகாட்டியாக இருந்துள்ளார். போலந்தில் உள்ள ஒரு மருத்துவமனைக்கு மாமோகிராபி (மார்பக ஊடுகதிர் பரிசோதனை கருவி) மற்றும் திசுக்கள் ஆய்வக பிரிவுக்கான அறக்கட்டளை மானியத்தை ஒருங்கிணைத்துள்ளார். 2025-ல் அவர் இஸ்தான்புல்லில் தலைமையின் அமைதி மாநாட்டை நடத்தினார்.

**ஜான் ஹியூகோ**
பொதுச் செயலாளர்
RC கீவ், உக்ரைன்

அவரைப் பற்றிய சுயசரிதைக்கு 2025 ஜூலை இதழைப் பார்க்கவும்.

©Rotary.org

# ரோட்டரி சங்கங்களை அழகுபடுத்தும் பால் ஹாரிஸ் சிலை

ரோட்டரி செய்திக்குழு




*சங்க வளாகத்தில் உள்ள ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸ் சிலைக்கு அருகில்,* RID 3090 PDG *பாக் சிங் பன்னு மற்றும்* RC *பொகாரோ ஸ்டீல் சிட்டி உறுப்பினர்கள்.*

இந்தியாவின் வடக்கு மற்றும் பிற பகுதிகளில் உள்ள ரோட்டரி சங்கங்களுக்குச் செல்கிறவர்கள் ஒரு பீடத்தில் நிறுவப்பட்ட ரோட்டரி நிறுவனர் பால் ஹாரிஸின் மார்பளவுச் சிலையைப் பார்ப்பது வழக்கம். கருவுலோகத்தால் ஆன இந்த மூன்றடிச் சிலையைப் பல சங்கங்களில் நிறுவிய பெருமை PDG பாக் சிங் பன்னு, RID 3090, அவர்களைச் சேரும். கடந்த சில ஆண்டுகளாக இவர் இந்த அழகிய சிலைகளைப் பரிசளித்துவருகிறார்.

பால் ஹாரிஸ் சிலைகள் இந்தியா முழுவதிலுமுள்ள ரோட்டரி பள்ளிகள், மருத்துவமனைகள், ரோட்டரி சங்கங்களுக்குச் சொந்தமான பிற அமைப்புகளிலும் நிறுவப்படுகின்றன. “இது ஒரு பரிசு. ஏனெனில், இந்தத் திட்டம்முழுவதற்கும் நான் நிதியளித்துள்ளேன். இதுவரை வட, கிழக்கு இந்தியாவில், கர்நாடகத்தில், ஆந்திரப் பிரதேசத்தில், கேரளாவில், புதுச்சேரியில் பல ரோட்டரி சங்கங்களில் 284 சிலைகளை நாங்கள் நிறுவியுள்ளோம்” என்கிறார் PDG பன்னு.

சமீபத்தில், பீகார், ஜார்கண்டை உள்ளடக்கிய RID 3250 முழுவதுமுள்ள சங்கங்களில் இவர் ஆறு சிலைகளை நிறுவியுள்ளார். இவருடைய நோக்கம் “உலகின் முதல் சமூக சேவை அமைப்பை உருவாக்கிய இந்த உயர்ந்த மனிதரைப் பெருமைப்படுத்தும்வகையில்” 800 பால் ஹாரிஸ் சிலைகளை நிறுவுவது.

ரோட்டரி நிறுவனர் சிலையைத் தங்கள் வளாகங்களில் நிறுவ விரும்பும் சங்கங்கள் இந்த மொபைல் எண்ணில் PDG பன்னு அவர்களைத் தொடர்புகொள்ளலாம்: 98142 21415.■



## RID 2982

### RC ஜலகண்டபுரம்

புதிய ரோட்டரி ஆண்டு 2025–26ன் முதல் நாளில், சங்க உறுப்பினர்கள் மாற்றுத் திறனாளிகள் பள்ளி ஒன்றில் சுமார் 120 குழந்தைகளுக்கு மதிய உணவு பரிமாறினார்கள். சுவையான இந்த உணவுக்காகப் பள்ளி அலுவலர்களும் சிறுவர்களும் சங்கத்துக்கு நன்றி தெரிவித்தனர்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3011

### RC தில்லி சஃப்தார்ஜங்

ஒரு பள்ளியைச் சேர்ந்த 250 ஏழைக் குழந்தைகளுக்கு நடத்தப்பட்ட பல் தூய்மை விழிப்புணர்வு நிகழ்வில் நீர் குளிர்விப்பான், தூய்மைப்படுத்தும் அமைப்பு நிறுவப்பட்டது.

## RID 3020

### RC விசாகப்பட்டினம்

ஆந்திரப் பிரதேசம் அல்லூரி சீதாராம ராஜு மாவட்டத்தின் அனந்தகிரி மண்டலத்தில் பூடி கிராமத்தில் ஒரு பழங்குடியினப் பள்ளிக்கு 12 இருக்கைகள் கொடையளிக்கப்பட்டன. அமெரிக்காவைச் சேர்ந்த இன்டராக்டர் நியா, மூன்று சங்க உறுப்பினர்கள் இதற்கு நன்கொடையளித்தனர்.






## RID 3090

### RC பாட்ரான் ராயல்

பாட்ரான் மாதா பிரேம் லதா சர்வ்ஹித்காரிப் பள்ளிக்கு 10 மின்விசிறிகள் கொடையளிக்கப்பட்டன. இது கோடைக் காலத்தில் மாணவர்களுக்குப் பெரிதளவு உதவும்.

## RID 3000

### RC மதுரை டௌன் டவுன்

கருப்பை வாய்ப் புற்றுநோய் மற்றும் சுற்றுச்சூழல் விழிப்புணர்வை உண்டாக்குவதற்காக எட்டு ரோட்டரியன்கள் கன்னியாகுமரியிலிருந்து மதுரைவரை ஒரு பேரணியை நடத்தினார்கள். இந்த பேரணியை 60க்கும் மேற்பட்ட ரோட்டரி சங்கங்கள் ஆதரித்தன.



## RID 3142

### RC டொம்பிவ்லி மிட்-டவுன்

டொம்பிவ்லி சாஸ்திரிநகர் நகராட்சி மருத்துவமனையின் தாய்மைப் பிரிவில் நாள்தோறும் 25 கர்ப்பிணிப் பெண்களுக்கு மதிய உணவுப் பொட்டலங்கள் வழங்கப்படுகின்றன.



## RID 3132

### RC பர்சி

இந்தச் சங்கம் கிராமப் பகுதிகளில் 11 புத்தக வங்கிகளைத் தொடங்கியுள்ளது. இவை ஒவ்வொன்றிலும் எல்லா வகைகளிலும் சுமார் 300 புத்தகங்கள் உள்ளன. இது 2,500 குழந்தைகள், மாணவர்களுக்குப் பலனளிக்கும்.

Rotary PEOPLE OF ACTION

# போதைப் பொருள் இல்லாத இந்தியாவுக்காக ஒரு பயணம்!

கிரண் ஜெஹரா




*இளையராஜா சுந்தரேசன் உலகின் மிக உயரமான மோட்டார் பாஸ் உம்லிங் லாவில்.*

சென்னை, நங்கநல்லூர் எலைட் ரோட்டரி சங்கத்தின் (RID 3234) சேவை இயக்குநரான இளையராஜா சுந்தரேசன், சென்னையிலிருந்து, உலகின் உயரமான (19,024 அடி) மோட்டார் பாதையான உம்லிங் லா என்னுமிடத்திற்கு தனியாக மோட்டார் சைக்கிள் பயணம் சென்று வந்துள்ளார். “போதைப் பொருள் இல்லாத இந்தியாவை” உருவாக்க மக்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்தவே அவர் இந்த பயணத்தை மேற்கொண்டார். இந்தியாவில் பல்வேறு நிலப்பரப்புகளில் சுமார் 5,000 கி.மீ. தொலைவுக்கு மேல் பயணித்து 17 நாட்களில் தமது பயணத்தை வெற்றிகரமாக முடித்துள்ளார்.

போதைக்கு எதிரான இந்த




*சென்னையில் சுந்தரேசனை IPDG N S சரவணன் (இடமிருந்து மூன்றாவது) கொடியசைத்து தொடங்கி வைக்கிறார்.*

விழிப்புணர்வு பயணத்தை கடந்த மே மாதம் 9-ம் தேதி சென்னையில், அப்போது DG -ஆக இருந்த என்.எஸ்.சரவணன் கொடியசைத்து தொடங்கிவைத்தார். அவரின் இந்த பயணத்துக்கு பல்வேறு சங்கங்களும், ரோட்டேரியன்களும் வழிநெடுக உற்சாகத்துடன் ஆதரவளித்தன. “நமது நாட்டில் இளைஞர்களிடையே போதைப் பழக்கம் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் நிலையில், போதை பழக்கத்தை ஒழிக்க போராடி வரும் நிலையில், இதுபோன்ற விழிப்புணர்வு பயணங்கள், இளைஞர்களின் மனதை மாற்றி அவர்கள் தங்கள் திறனை சரியான வழியில் பயன்படுத்த ஊக்குவிக்கும்” என்று சங்கத்தின் தலைவர் சதீஷ் ராஜசேகர் கூறினார்.

மே 13-ம் தேதி அன்று அவர் ஜம்முவை அடைந்தார். மறுநாள் மாலை ஸ்ரீநகர் சென்றார். “பூஜ்யத்துக்கும் குறைவான வெப்பநிலை மற்றும் ஆபத்தான மேடு-பள்ளங்களுடன் இருந்த சாலைகளை போராடி கடந்து சென்றேன். லே பகுதிக்கு சென்ற நான், அங்குள்ள தட்ப வெப்பநிலையை தாங்கும் வகையில் ஒருநாள் ஓய்வெடுத்தேன். அங்கிருந்து இறுதிக்கட்டமாக ஹன்லேயிலிருந்து உம்லிங் லா சென்றேன்” என்கிறார்.

தனது பிறந்த நாளான மே 18-ம் தேதி, “பனிபடர்ந்த சாலைகளைக் கடந்து உம்லிங் லாவை அடைந்து மோட்டார் சைக்கிள் பயணத்தை வெற்றிகரமாக முடித்தேன்”. இறுதிக்கட்ட பயணம் மிகவும் கடினமாக இருந்தது.

திரும்பி வரும் வழியில், செகந்திராபாதில், ஹைதராபாத் டெக்கான் ரோட்டரி சங்கம் “வாக் தி டாக்” (நடந்த ஒரு விஷயத்தை பற்றி உரையாடுவது) அமர்வை நடத்தியது. இளைஞர்கள் ஏன் போதைக்கு அடிமையாகிறார்கள் என்ற கேள்வியுடன் உரையாடல் தொடங்கியது. “போதைக்கு எதிரான போராட்டத்தில் இளம் ரோட்டேரியன்கள், ரோட்ராக்டர்கள் ஈடுபட வேண்டும் என்று அவர் வலியுறுத்தி கேட்டுக் கொண்டார். நீங்கள் இதற்காக நீண்டதூர பயணம் மேற்கொள்ள வேண்டியதில்லை. நீங்கள் அருகில் உள்ள பள்ளிக்குச் சென்றோ அல்லது குழந்தைகள் மறுவாழ்வு இல்லத்துக்குச் சென்று பேசுங்கள். அதுவே நீங்கள் எடுத்துவைக்கும் முதல்படியாக இருக்கட்டும்” என்றார்.

அவரின் இந்த முயற்சிக்கு பல மாநிலங்களில் உள்ள 19 ரோட்டரி சங்கங்களின் ஆதரவு கிடைத்தது. “போதைக்கு அடிமையானதால் பல இளைஞர்களின் வாழ்க்கை மங்கிப்போனதை நான் பார்த்திருக்கிறேன். இந்த பயணம் போதைக்கு எதிரான நடவடிக்கையை தொடங்குவதற்கான ஒரு வழியாகும். நான் எதையும் பிரசாரம் செய்யவில்லை. ஆனால், வாழ்க்கை வாழ்வதற்கே, வாழ்க்கை உயரமானது என்பதை மக்களுக்கு நினைவுபடுத்தவே இந்த பயணம்” என்று அவர் கூறினார்.■

---


# ரூர்கேலாவில் ரோட்டரி சதுக்கம்

ரூர்கேலா நகர நுழைவாயிலில் RC ரூர்கேலா மிட் டவுன், RID 3261, கட்டியுள்ள ரோட்டரி சதுக்கத்தை AKS உறுப்பினர் D R பட்நாயக் தொடங்கி வைத்தார். ரூர்கேலா ஸ்மார்ட் சிட்டி நிறுவனத்தின் ஆதரவுடன் இந்தப் பொதுத்தோற்றத் திட்டத்தைத் தொடங்கிய இந்தச் சங்கம் இரண்டு ஆண்டுகளாக இதை திட்டமிட்டு, வடிவமைத்துச் செயல் படுத்தியுள்ளது.

நாள்தோறும் இந்தத் திட்டக் களத்தின் வழியாகச் சுமார் 15,000 வண்டிகள் செல்கின்றன. இந்த ரோட்டரிச் சதுக்கத்தின் ஓர் அம்சம், GPS வசதி கொண்ட கடிகாரம். இந்த ஒட்டு மொத்த வடிவமைப்பும் “அழகியல் கவர்ச்சியைத் தொழில் நுட்பத்துடன் இணைத்துச் செயல் பாடு, தோற்றம் இரண்டையும் வழங்குகிறது” என்றார் சங்கச் செயலாளர் அங்கித் கேடியா.■



# பாட்ஷாக்கள், கெத்தானவர்கள் மற்றும் ரயில் பெட்டியில் புத்தகங்கள் பற்றி




*அனைத்தும் வெவ்வேறு, ஆனால் எல்லாம் ஒன்றோடு ஒன்று இணைந்தவை. மூன்று சிறந்த புத்தகங்கள், இது எப்படி சாத்தியம் என்பதை நமக்குக் காட்டுகின்றன.*




**சந்தியா ராவ்**

ஷாருக்கான், சோழர்கள் மற்றும் மகா மந்தநிலை காலத்து அமெரிக்காவைச் சேர்ந்த மூன்று பெண்களுக்கும் இடையே உள்ள பொதுவான விஷயம் என்ன? இதைக் கண்டறிய, நீங்கள் மோஹர் பாசு எழுதிய லெஜென்ட் ஐகான் ஸ்டார்: ஷாருக்கான், அனிருத் கனிசெட்டி எழுதிய லார்ட்ஸ் அஃப் எர்த் அண்ட் சி: எ ஹிஸ்டரி அஃப் தி சோழா எம்பையர், மற்றும் பிரியானா லபுஸ்கேஸ் எழுதிய தி பாக்ஸ்கார் லைப்ரேரியன் – முறையே சுயசரிதை, வரலாறு மற்றும் புனைகதை – ஆகிய புத்தகங்களுக்குள் செல்ல வேண்டும். ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தொடங்கி, இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பம் முதல் இடைப்பட்ட காலம் வரையிலும், இன்றைய காலம் வரையிலும் உள்ள பல்வேறு காலகட்டங்களில் உள்ள ஒற்றுமைகளைக் கண்டு நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள். நிச்சயமாக, பாட்ஷா ஷாருக்கான், கெத்தானவர்கள் சோழர்கள், மற்றும் அந்தப் புத்தகங்கள் அமெரிக்காவின் மொன்டானாவில் உள்ள சுரங்க சமூகத்தினரை அடைந்த ஒரு ரயில் பெட்டி நூலகத்தைக் குறிக்கின்றன.


பெங்களூருவின் கெம்பேகௌடா விமான நிலையத்தில் நான் ஷாருக் கான் புத்தகத்தை வாங்கினேன், பிரபலங்களைப் பற்றிப் படிக்கும் எவரையும் போலவே, நான் முதலில் தேடியது புகைப்படங்கள்தான். அதில் அழகான புகைப்படங்கள் இருந்தன. துரதிர்ஷ்டவசமாக, புகைப்படக் கலைஞர் பிரதீப் பண்டேகர், இந்தப் புத்தகம் வெளியிடப்படுவதற்கு முன்பே காலமானார், ஆனால் அவரது மகன் பிரதமேஷின் வார்த்தைகள், ஷாருக் கானுடன் அவரது தந்தைக்கு இருந்த தொடர்பை சுருக்கமாகச் சொல்கின்றன: "என் தந்தையின் ஷாருக் கான் மீதான நீடித்த அன்பை என்னால் முழுமையாகப் புரிந்துகொள்ள முடியவில்லை. 'என்னை விட அவரின் புகைப்படங்கள் தான் உங்களிடம் அதிகமாக உள்ளன! என்று நான் அடிக்கடி வேடிக்கையாகச் சொல்வேன். என் தந்தையின் மறைவுக்குப் பிறகுதான் ஷாருக் கானுடனான அவரது பிணைப்பை என்னால் புரிந்துகொள்ள முடிந்தது. அவர் என் தந்தையின் இரங்கல் கூட்டத்தில் பேசும் போது, 'பிரதீப் திரைப்படத் துறையில் எனது முதல் நண்பர்களில் ஒருவர். அவர் எனது முதல் புகைப்படத்தை எடுத்தபோது, நான் ஒரு நட்சத்திரம் போல் உணர்ந்தேன்... என்று சொன்னார்.

வழக்கமாக, பாலிவுட் தொடர்பான பெரும்பாலான விஷயங்கள் 'வட இந்திய சார்பு கொண்டவை; மகிழ்ச்சி என்னவென்றால், இந்தப் புத்தகத்தின் ஆசிரியர், மும்பையில் இருந்தாலும், மிட்-டேயின் தலைமை நிருபர் (பொழுதுபோக்கு) மற்றும் கொல்கத்தா சார்பு கொண்டவர், அவரது முக்கிய தகவல்கள் பெரும்பாலும் கொல்கத்தாவைச் சேர்ந்தவை. இது ஷாருக் கானின் நாடு கடந்த ரசிகர் பட்டாளத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகிறது. மோஹர் பாசு, தனது தாயிடமிருந்து தொடங்கி, எப்போதும் ஷாருக்கான் ரசிகர்களால் சூழப்பட்டதாகக் கூறுகிறார். இது 1980களில் நானும் என் அம்மாவும் சேர்ந்து 'ஃபௌஜி தொடரின் ஒரு பகுதியைப் பார்த்தபோது என் தாயின் கருத்தை நினைவூட்டுகிறது. அதில் ஷாருக் கானைப் பார்த்து, "இந்த பையன் தனித்துவமானவன். இவன் வெகுதூரம் செல்வான், என் வார்த்தைகளைக் குறித்துக் கொள்" என அவர் சொன்னார். இந்தப் புத்தகம் ஷாருக் கானுக்கான ஒரு காதல் பாடல் என்று நீங்கள் கூற முடிந்தாலும், அது அவரது தொழில் வாழ்க்கையை, தொடர் தொடராக, திரைப்படம் திரைப்படமாக ஆராய்கிறது. அதே சமயம் ரசிகர்களுக்கான அவரது அர்ப்பணிப்பு, பொழுது போக்கு மற்றும் பெண்களை மதிப்பது ஆகிய வற்றையும் மீண்டும் வலியுறுத்துகிறது.



சரி, அடுத்தது கெத்தானவர்கள்! இந்திய வரலாறு சொல்லப்படும் போதெல்லாம், அது பெரும்பாலும் விந்திய மலைகளுக்கும் மகாநதிக்கும் வடக்கே அடங்கிவிடுகிறது என்பது தான் உண்மை. தெற்கு நோக்கிப் பயணித்தால், அங்கு ராஷ்டகூடர்கள், சாளுக்கியர்கள், கடவர்கள், சேரர்கள், பல்லவர்கள், பாண்டியர்கள், ஹோய்சாளர்கள், இருக்குவேள்கள்... இவர்கள் அனைவருக்கும் மேலாக ஆண்ட சோழர்கள் உள்ளனர். வரலாற்றாசிரியர் அனிருத் கனிசெட்டி சோழர் வம்சத்தை வெளிக்கொணர புறப்படுகிறார். அந்த வம்சம், ஒரு காலத்தில் வடக்கே வங்காளம் மற்றும் கங்கை வரை பரவியது, அதே சமயம் தக்காணம், காவிரி சமவெளிகள் மற்றும் இன்றைய இலங்கை மற்றும் மலாய் தீபகற்பத்திலும் ஆதிக்கம் செலுத்தியது. சோழர்களுக்கு ஒரு வலிமை வாய்ந்த கடற்படை இருந்தது என்ற கருத்தில் நீங்கள் இருந்தால், அது தவறானதாகும். அவர்களின் பெயரையும் புகழையும் கடல்களுக்கு அப்பால் கொண்டு சென்றது வர்த்தகக் கப்பல்கள்தான், அவர்கள் அந்த இடங்களிலும் தங்கள் பெயரில் கோவில்களைக் கட்டினார்கள்.

“இந்தப் புத்தகத்தின் ஒரு முக்கிய கருப்பொருள், இந்திய மன்னர்கள் வெறுமனே அரியணையில் அமர்ந்த மன்னர்கள் அல்ல, அவர்கள் தங்கள் அதிகாரத்தையும், கீழ்ப்படியப்படுவதற்கான தங்கள் உரிமையையும் தொடர்ந்து நிரூபிக்க வேண்டியிருந்தது. இது எல்லா நாகரிகங்களுக்கும் உண்மை, இந்தியாவும் இதற்கு விதிவிலக்கல்ல. … சக்திவாய்ந்த பிராந்திய அமைப்புகள் இருந்த ஒரு நிலத்தை ஆள வந்த சோழ மன்னர்கள், இராணுவ ரீதியாக மட்டுமன்றி அரசியல் ரீதியாகவும் பிரச்சாரம் செய்ய வேண்டியிருந்தது, இன்றைய அரசியல்வாதிகளைப் போலவே, கோயில்கள் அரசியல் விளம்பரங்களுக்கு சிறந்த இடங்களாக இருந்ததை அவர்கள் உணர்ந்தனர்”என்று கனிசெட்டி எழுதுகிறார். இதற்கு எடுத்துக்காட்டு, தஞ்சாவூரில் உள்ள மாபெரும் இராஜராஜேஸ்வரர் அல்லது பிரகதீஸ்வரர் கோயில், ஒரு காலத்தில் எகிப்தின் பிரமிடுகளுக்கு அடுத்தபடியாக அளவில் இருந்தது.




பெயர்கள், தேதிகள் மற்றும் பிற ‘சலிப்பூட்டும் விஷயங்களால் வாசகரை சோர்வடையச் செய்யும் வழக்கமான வரலாற்றுப் புத்தகங்களுக்கு மாறாக, இங்கு, கனிசெட்டியின் விளக்கங்கள், விவரங்கள், சுவாரஸ்யமான கதைகள் மற்றும் வம்சங்கள், பரம்பரைகள், போர்கள், வெற்றிகள், உத்திகள் என அனைத்தும் மிக நுணுக்கமாக ஆராயப்பட்டு, ஆச்சரியம் மற்றும் நகைச்சுவையுடன் புறநிலையான ஆர்வத்துடன் வழங்கப்பட்டுள்ளன, மேலும் படிக்கவும் மிகவும் எளிதாக உள்ளது. தாங்கள் ஆட்சியாளர்களாக இல்லாவிட்டாலும், மகத்தான அதிகாரத்தையும் செல்வாக்கையும் செலுத்திய பெண்களின் முக்கிய பங்கையும் அவர் குறிப்பிடத் தவறவில்லை.

அவர்களின் செல்வாக்கின் முக்கிய வழி எது? கோயில் கட்டுதல்! மிகவும் புகழ்பெற்ற சோழ மன்னர் இராஜராஜ சோழனின் (985-1016) முன்னோடியான கண்டராதித்தரின் (949-957) மனைவி செம்பியன் மாதேவியால் புகழ்பெற்ற நடனமாடும் நடராஜர் எவ்வாறு முக்கியத்துவம் பெற்றார் என்பதை கனிசெட்டி விளக்குகிறார். தற்போது சிதம்பரம் என்று அழைக்கப்படும் தில்லை தலத்தில் உள்ள வெண்கலச் சிலையின், உக்கிரமான நடன வடிவத்தால் கவரப்பட்ட செம்பியன் மாதேவி, தான் ‘ஆடவல்லம்’ (சிறந்த நடனக் கலைஞர்) என்று அழைத்த அந்த தெய்வத்தின் ஒரு கல் சிற்பம், நல்லம் என்ற இடத்தில் அவர் கட்டிய கோவிலில் பிரதிஷ்டை செய்யப்படுவதை உறுதி செய்தார். மீதமுள்ளவை வரலாறு. “செம்பியன் மாதேவியின் எழுச்சி நடராஜரின் எழுச்சியாகும். அது ஒரு புதிய சோழ உலகப் பேரரசின் தோற்றத்தைக் குறித்தது,” என்று கனிசெட்டி குறிப்பிடுகிறார்.

மொன்டானாவின் மிசூலா கவுண்டியில், ரூத் வார்டன் என்ற ஒரு நூலகர் புத்தகங்கள் மூலம் வாழ்க்கையை வளப்படுத்தினார். அவரும், பெயர் அறியப்படாத மற்றொரு பெண்ணும் சேர்ந்து, தொழிலாளர்களின் பயன்பாட்டிற்காக ஒரு ஹோட்டலில் ‘லம்பர்மேன்ஸ் லைப்ரரி என்ற பெயரில் நூலகத்தை நிறுவினர். அவர் அனகோண்டா காப்பர் மைனிங் கம்பெனியைச் சேர்ந்த கென்னத் ராஸ் என்பவரை இந்த புத்தக சேகரிப்பை உருவாக்க உதவ அணுகினார். அவருக்கு இந்த யோசனை பிடித்தது, ஆனால் புத்தகங்கள் தொழிலாளர்களுக்கு ஒருவேளை சுதந்திரம், விடுதலை, தேர்வு போன்றவற்றை ‘வித்தியாசமான கருத்துக்களை கொடுக்கும் என்று அவர் கவலைப்பட்டார்! எப்படியிருந்தாலும், அவர் ரூத் வார்டன் மற்றும் அவரது கூட்டாளியை ஆதரித்தார், மேலும் இந்த திட்டம் சிறப்பாக செயல் படுவதைக் கண்டபோது, புத்தகங்களை வைப்பதற்காக அடுக்குகள் கொண்ட ஒரு ரயில் பெட்டியை உருவாக்க அவர் உதவினார். இப்படியாக, அந்த புத்தகங்கள் ரயில் மூலம் பாதை நெடுகிலும் உள்ள வாசகர்களைச் சென்றடைந்தன!

இந்தக் கதையினாலும், ஃபோர்ட் மிசூலாவில் உள்ள அசல் லம்பர்மேன்ஸ் லைப்ரரி ரயில் பெட்டியினாலும் ஈர்க்கப்பட்ட பிரியானா லபுஸ்கேஸ், தி பாக்ஸ்கார் லைப்ரேரியன் என்ற புத்தகத்தை எழுதினார். அதில், அலிஸ் மன்ரோ, கோலெட் டுராண்ட் மற்றும் மில்லி லாங் ஆகிய மூன்று துணிச்சலான பெண்களின் கதைகளை அவர் ஒன்றாகக் கொண்டு வருகிறார். அதில் அலிஸ் இந்த யோசனையைப் பெறுகிறார், மேலும் அவர் கோலெட்டை நூலகராக ஈடுபடுத்துகிறார். இந்தக் கதையில் மர்மமும் சாகசமும் சுவையாக பதியப்பட்டுள்ளன.

கட்டுரையாளர் குழந்தைகள் எழுத்தாளர் மற்றும் மூத்த பத்திரிகையாளர்.

# உங்கள் குழந்தைகளுக்கு நன்றாக கற்றுக்கொடுங்கள்!

ப்ரீதி மேஹரா

*பள்ளிகள் பாடத்திட்டத்தில் பருவநிலை மாற்றத்தை சேர்க்க வேண்டும்.*

“இன்றைய குழந்தைகள்தான் நாளைய குடிமக்கள்” என்று அடிக்கடி சொல்வதுண்டு. இந்த உண்மையை பின்பற்றி நாம் ஒரு சிறந்த உலகத்தை கட்டமைக்க வேண்டும் என்றால், பூமியின் பாதுகாப்பு மற்றும் அதன் குடிமக்களின் சிறந்த ஆரோக்கியம் மற்றும் நல்வாழ்வுக்கு பங்களிப்பது பற்றி நமது குழந்தைகளுக்கு நாம் சொல்லித்தருவதுடன் அதற்கு அவர்களைத் தயார் படுத்தவேண்டும்.

கடந்த சில தசாப்தங்களில் பூமித் தாய்க்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்களை சரி செய்ய நாம் தொடர்ந்து பணியாற்றி வருகிறோம். ஆனாலும் இன்னும் நிறைய செய்ய வேண்டும் என்பதையும் உணர்ந்துகொண்டுள்ளோம். பூமியை காப்பாற்ற நம் தலைமுறையினர் செய்ததைவிட நமது குழந்தைகள் அதிகம் செய்யவேண்டியதைத் தவிர வேறுவழியில்லை.

அதைச் செய்ய அவர்களை நாம் எப்படி தயார்ப்படுத்துவது? நாம் பசுமையாக வாழ்ந்து காட்டி அவர்கள் அதைப் பின்பற்ற முன்மாதிரியாக இருக்கலாம். கழிவுகளைப் பிரித்தல், பிளாஸ்டிக் பயன்பாட்டை குறைத்தல் மற்றும் தண்ணீர் மற்றும் எரிசக்தியை பாதுகாத்தல் உள்ளிட்ட அடிப்படை சுற்றுச்சூழல் பாதுகாப்பு விதிகளை நாம் வீட்டிலேயே கடைப்பிடிக்கலாம். அது பாராட்டத்தக்கது. ஆனால், அதுமட்டும் போதுமா? பருவநிலை மாற்றம், சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் தண்ணீர் பாதுகாப்பு போன்றவற்றை பள்ளி பாடத்திட்டத்தில் சேர்த்தல் முறையான கல்வி கற்கும் குழந்தைகளுக்கு மிகவும் முக்கியமானது என்று சுற்றுச்சூழலியல் ஆர்வலர்களான நண்பர்கள் வாதிடுகின்றனர்.

சென்னையைச் சேர்ந்த குடிமக்கள் நுகர்வோர் மற்றும் குடிமை நடவடிக்கை குழுவில் - Civic Action Group (CAG), பருவநிலை மற்றும் சுற்றுச்சூழல் நடவடிக்கை ஆராய்ச்சியாளரான மாலா பாலாஜி



கூற்றுப்படி, பருவநிலை மாற்றம் என்பது பள்ளிகளில் ஒரு முழுமையான பாடமாக இருக்க வேண்டும். அறிவியல் பாடபுத்தகங்களில் ஒரு அத்தியாயமாகவோ அல்லது சமூக அறிவியலில் ஒரு பாடமாகவோ இருக்கக்கூடாது. எனினும் இது புதிய பாடத்திட்டமாக இணைக்கப்படும் வரை, பள்ளிகள் உலக சுற்றுச்சூழல் தினத்தன்று மட்டும் பருவநிலை மாற்றத்தை நினைவில் கொள்ளாமல், அதுபற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும்.

பருவநிலை மாற்றம் குறித்து பள்ளிகள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு பாடத் திட்டத்தை CAG உருவாக்கி யுள்ளது. இதில் உரையாடல்கள், நிஜ உலக எடுத்துக்காட்டுகள் மற்றும் செயல்முறை நடவடிக்கைகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளன. “தனி பாடத்திட்டமாக வைக்க வேண்டும் என்ற நோக்கம் வெறும் தகவல் தெரிவிக்க மட்டுமல்ல, வகுப்பறை கற்றலை அன்றாட வாழ்க்கையில் இணைப்பதன் மூலம் செயலில் ஈடுபடுவது மற்றும் ஊக்குவிப்பது ஆகும். இப்படிச் செய்வதன் மூலம், பருவநிலை மாற்றத்தின் நெருக்கடியை மாணவர்கள் புரிந்துகொள்வதுடன் மட்டுமல்லாமல், இளம் வயதிலேயே இதற்கு தீர்வுகாண மாணவர்களுக்கு அதிகாரம் அளிப்பதாகும்” என்று மாலா கூறுகிறார்.

பள்ளிகள் மாணவர்களுக்கு பருவநிலை மாற்றம் அல்லது காலநிலை மாற்றம் தொடர்பாக சிக்கலான அறிவியல் விளக்கங்களை அளிப்பதைவிட அது தொடர்பான கருத்துக்களை அன்றாட வாழ்க்கை யுடன் பொருத்திப் பார்த்து அறிமுகப் படுத்த வேண்டும் என்று CAG பரிந்துரைக்கிறது. இதனால் கடுமையான வெப்ப அலைகள், காற்று மாசுபடுதல் மற்றும் பருவநிலை மாற்றத்தால் தங்களுக்கு ஏற்பட்ட விளைவுகளை அவர்கள் தொடர்புபடுத்தி பார்க்க முடியும். கிராமப்புறங்களில் உள்ள மாணவர்கள் பருவமழை தவறிப் பெய்வதால் எப்படி விவசாயம் பாதிக்கப்படுவது என்பதை அறிந்திருப்பார்கள். மாலா மேலும் கூறுகிறார்: “தங்களைச் சுற்றிநடக்கும் இந்த மாற்றங்களை மாணவர்கள் காணும்போது, பருவநிலை மாற்றப் பிரச்னைகள் எவ்வுளவு முக்கியமானது என்பது தெரியவரும்”.

CAG பாடத்திட்டம் மாணவர்கள் செயல் நடவடிக்கைகளுடன் கல்வி கற்பதை வலியுறுத்துகிறது. இது சோர்வு ஏற்படுத்தாமல் கற்றலை வேடிக்கையாக ஆக்குகிறது. பள்ளிகளில் சுற்றுச்சூழல் கல்வி மற்றும் நிலையான நடைமுறைகளை மேம்படுத்துவதற்காக வடிவமைக்கப் பட்ட, தில்லியை அடிப்படையாகக் கொண்ட அறிவியல் மற்றும் சுற்றுச் சூழல் பாதுகாப்பு மையம் – Centre for Science and Environment (CSE), பசுமைப் பள்ளிகள் திட்டத்திலும் இதே கவனம் செலுத்தப்படுகிறது. நிலைத்தன்மை பற்றி அறிய பள்ளிகள், தங்கள் வளாகங்களை ஆய்வகங்களாகப் பயன்படுத்துவதை இந்த திட்டம் ஊக்குவிக்கிறது.

பருவநிலை அல்லது காலநிலை தொடர்பான கவலைகளை மையமாகக் கொண்டு குழந்தைகள் எழுத்தாளர்களால் எழுதப்படும் புத்தகங்கள், இளைய தலைமுறையினர் இப்பிரச்னை குறித்து அறிவதில் ஆர்வமாக உள்ளார்கள் என்பதையே காட்டுகிறது. சுற்றுச்சூழலை மையமாகக் கொண்ட ஒரு வலைத்தள வாசலான “மோங்காபே” சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை குறித்த குழந்தைகள் இலக்கியத்தில் ஆர்வம் அதிகரித்து வருவதாகவும் இந்த முயற்சி சிக்கலான பிரச்னைகளை சமாளித்து நம்பிக்கையையும் நகைச்சுவையையும் புகுத்துவதாகவும் தெரிவிக்கிறது.

சுற்றுச்சூழல் குறித்த குழந்தை இலக்கியம் ஏழு ஆண்டுகளுக்கு முன்னர் ரூபால் கேவல்யாவின் “தி லிட்டில் ரெயின்மேக்கர்” புத்தகம் மூலம் வெளிவரத் தொடங்கியது. பத்து ஆண்டுகளாக மழை இல்லாத உலகம், மீண்டும் மழையைப் பார்க்க வேண்டும் என்னும் தனது தாத்தாவின் விருப்பத்தை நிறைவேற்ற பத்து வயதான அனுஷ்கா எப்படி விஞ்ஞானிகள் மற்றும் மந்திரவாதிகளின் உதவியை நாடுகிறார் என்பதை பற்றிய கதை அது. அதைத் தொடர்ந்து சித்தார்த்த சர்மாவின் “இயர் ஆஃப் தி வீட்ஸ்”, பிஜல்வச்சராஜனியின் “எ கிளவுட் கால்டு புரா”, ரஞ்சித் லாலின் “பட்கி, பிரிட்ஜ் அண்ட் பிக் டிஜின்” மற்றும் நந்திதா டா குன்ஹாவின் “ தி மிரகிள் ஆன் சுந்தர்பாக் ஸ்ட்ரீட்” உள்ளிட்ட ஏராளமான புத்தகங்கள வெளிவந்தன.

காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் கவலைகளுக்காக அர்ப்பணிக்கப்பட்ட குழந்தைகளுக்கான புத்தகங்கள் மீது அதிகரித்து வரும் ஆர்வம் அஸிம் பிரேம்ஜி பல்கலைக்கழத்தின் பருவநிலை மாற்றம் மற்றும் நிலைத்தன்மைக்கான மையத்தில் பிரதிபலிக்கிறது. இந்த மையம் “குழந்தைகளுக்காக இயற்கை எழுதுகிறது” என்னும் செய்திமடலையும் நடத்தி வருகிறது.

பருவநிலை மாற்றம் போன்ற பிரச்னைகளில் இளைஞர்களை ஊக்குவிப்பது பங்கேற்கவைப்பதன் அவசியத்தை மிகைப்படுத்த முடியாது. கடந்த ஆண்டு CSE 1931 பள்ளிகள் மற்றும் கல்லூரி மாணவர்களிடம் ஆய்வு நடத்தியபோது 94 சதவீதம் பேர் பருவநிலை மாற்றத்தால் ஏற்படும் இடையூறுகளின் தாக்கத்தை நேரடியாக உணர்ந்ததாக குறிப்பிட்டுள்ளனர். அவர்களுக்கு சுற்றுச்சூழல் பாதுகாப்பு என்பது தொலைதூர சாத்தியமில்லை. ஆனால், உடனடியான யதார்த்தமாகும்.

1973 முதல் 2023 வரையிலான தரவுகளின் பகுப்பாய்வு, இந்தியாவில் உள்ள மாவட்டங்களில் 85 சதவீதம் வெள்ளம், வறட்சி, புயல், சூறாவளி மற்றும் வெப்ப அலைகளால் பாதிக்கக்கூடியவை என்பதை குறிப்பிடுகின்றன. மேலும் இந்த மாவட்டங்களில் 45 சதவீதம் காலநிலை மாற்றத்தன்மையை வெளிப்படுத்தியுள்ளது. அதாவது வெள்ளத்தால் பாதிக்கப்படும் பகுதிகள் வறட்சியாக அல்லது மழை குறைவான மண்டலங்களாக மாறுகின்றன. மழை குறைவான மண்டலங்கள் அதிக மழையைப் பெறுகின்றன. இத்தகைய தாக்கங்களை கருத்தில் கொண்டு நமது குழந்தைகளுக்கு எதிர்கால சவால்களை அறிந்துகொண்டு அதை எதிர்கொள்ள உரிமை உண்டு. பூமித்தாய்க்கு ஏற்படும் சேதங்களை எப்படி கட்டுப்படுத்தலாம் என்பதையும் அவர்கள் கற்றுக்கொள்ள வேண்டும்.

எழுத்தாளர் மூத்த இதழாளர் சுற்றுச்சூழல் பிரச்சனைகளைப்பற்றி எழுதி வருகிறார்.

# “டிராம்போலைன்” ஒரு பயனுள்ள உடற்பயிற்சிக் கருவி

பரத் — ஷலன் சவூர்



“ஃபிட் ஃபார் லைஃப்” புத்தகத்தின் முன்னோடிகளும் ஆசிரியர்களுமான ஹார்வி மற்றும் மர்லின் டைமண்ட் இந்த மீள்தன்மை உடைய வலைப் பின்னல் கருவியை பாராட்டுகிறார்கள். மீள்தடுப்பு முறைகள் மூலம் ஃபிட்னஸ் இயக்கத்தில் புரட்சி செய்யமுடியும். உலகத் தரம் வாய்ந்த தடகள விளையாட்டு வீரர்கள். மட்டுமல்ல, பலவீனமானவர்கள் முதல் வலிமையானவர்கள் வரை, விகாரமானவர்கள் முதல் நீண்டகால்களுடன் வேகமாக ஓடக்கூடியவர்கள் வரை ஒவ்வொரும் உடல் தகுதியில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

அமெரிக்காவைச் சேர்ந்த ஜார்ஜ் நிஸ்ஸான் என்பவர் 1936-ம் ஆண்டில் முதன் முதலாக மீள்தன்மை கொண்ட உடற்பயிற்சிக் கருவியை வடிவமைத்தார். “பிக் டாப்” என்னும் அமெரிக்க சர்க்கஸில் கயிறுகளால் கட்டப்பட்ட கருவிகளைக் கொண்டு ஆடும் சர்க்கஸ் கலைஞர்களால் அவர் ஈர்க்கப்பட்டார். அவர்கள் பார் விளையாடி பின்னர், அங்கிருந்து வலைப்பின்னல் தடுப்பில் குதித்து எழுந்து பார்வையாளர்களை பரவசப்படுத்துவார்கள். இந்த கருவி கண்டுபிடிக்கப்பட்ட பிறகு, அமெரிக்காவின் ஆயுதப் படைகள் இந்த சாதனத்தை அமெரிக்க துருப்புகள் தங்கள் வான்வெளி போர் பயிற்சிக்காவும் மோட்டார் ஓட்டும் திறன் பயிற்சிக்காவும் பயன்படுத்தின.

இரண்டாம் உலகப்போர் நடந்து முடிந்து பல ஆண்டுகளுக்குப் பிறகு, அப்போது சோவியத் யூனியன், 1950-களின் பிற்பகுதியில் செயற்கைக்கோளை விண்ணில் செலுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டது. பின்னர் அமெரிக்க அதிபர் ஜான் எஃப் கென்னடியின் சீரிய முயற்சியால், நிலவுக்கு செயற்கைக்கோளை அனுப்பும் இயக்கம் தொடங்கியது. செயற்கைக்கோள் மூலம் நிலவுக்குச் சென்று கொடியை பறக்கவிட்ட முதல் நாடு என்ற பெருமையை அமெரிக்கா பெற்றது. அமெரிக்க விண்வெளி வீரர் நீல் ஆம்ஸ்டிராங், நிலவில் முதல் முதலாக கால்தடத்தை பதித்து சாதனை படைத்தார். இது வரலாறு. எனினும் பலரும் அறியாதது என்னவென்றால், விண்வெளி வீரர்கள் தங்கள் தசைகளையும் எலும்புகளையும் வலுப்படுத்த விண்வெளி கப்பலினுள் சுவர்களிலும் தரையிலும் தங்களின் உடல்களை மோதி உடற்பயிற்சி செய்தனர் என்பதுதான்.

ஈர்ப்பு விசைதான் பூமியில் மிகச்சிறந்த சமநிலைப்படுத்தியாகும். இது நமது பிரபஞ்சத்தை, தாங்கி நிற்கிறது. நட்சத்திரங்கள், கிரகங்கள் முதலானவை அதனதன் இடத்தில் வைக்கப்படுகின்றன. ஒவ்வொன்றுக்கும் தனித்தனியான புவிஈர்ப்புவிசை உண்டு. விண்வெளி ஒரு தெய்வீகமான வடிவமைப்பைக் கொண்டது. இது பொருள்களை அதன் அதன் இடத்தில் இருக்கும் வகையில் பாதைகள் மற்றும் கோடுகளைக் கொண்டது. ஈர்ப்புவிசைக்கு நன்றி. மீள்தன்மை கொண்ட வலைப்பின்னல் தளத்திலும் ஈர்ப்பு விசை உள்ளது. எப்படி என்று இங்கே பார்ப்போம்.

இடைமட்ட ஓட்டத்தை செங்குத்து ஓட்டமாக மாற்றுவது மட்டுமே சவால் நிறைந்தது. உங்களுக்கு கீழே

இருக்கும் மீள்தன்மை கொண்ட வலைப்பின்னல் தளத்தில் தாவிக் குதித்து உங்கள் உடலை சீர்செய்யலாம். நீங்கள் தாவிக்குதித்து மீண்டும் மேலே செல்லும்போது அதை உணர்வீர்கள். தொடக்கம், நிறுத்தம் மற்றும் ஈர்ப்பு விசை ஆகிய மூன்று இயற்கை சக்திகளைப் பயன்படுத்தும் உடற்பயிற்சியாளர் செங்குத்தான நிலைக்குச் செல்கிறார். மீள்தன்மை உடைய வலைப்பின்னல் தளத்தில் தாவிக் குதிக்கும்போது மனித உடலில் உள்ள உயிரணுக்கள் இந்த மூன்று சக்திகள் மூலம் தூண்டப்பட்டு புத்துணர்வு பெறுகின்றன. ஆழ்மனது இந்த மூன்று சக்திகளையும் வேறுபடுத்தி பார்ப்பதில்லை. அது அவற்றை மூன்று ஈர்ப்பு விசைகளாக கணக்கிட்டு, உயிரணுக்களை நேர்மறையாகச் செயல்பட கட்டளையிட்டு எதிர்வினையாற்றுகிறது.



எளிமையாகச் சொன்னால் மீள்தன்மை கொண்ட வலைப்பின்னல் தளம் என்பது ஒரு விரிப்பு, அதற்கு ஆதாரமான ஸ்பிரிங்குகள் மற்றும் நான்கு கால்கள் கொண்ட கருவியாகும். மீள்தன்மை கொண்ட இந்த வலைப்பின்னல் தளத்தில் தாவிக்குதிக்கும்போது 87 சதவீத அதிர்வுகளை அது தாங்கிக் கொள்வதாக அமெரிக்காவின், ஓக்லஹாமா பல்கலைக்கழகம் தெரிவிக்கிறது. விண்வெளி ஆய்வின் முக்கிய களமான நாஸா (NASA) ஜாக்கிங் செய்வதைவிட மீள்தன்மை உடைய வலைப்பின்னல் தளத்தில் (ரீபௌண்டர்) தாவிக்குதிப்பது 68 சதவீதம் அதிக செயல்திறன் கொண்டதாக கூறுகிறது. உண்மையில் மீள்தன்மை உடைய வலைப்பின்னல் தளத்தில் தாவிக்குதித்து உடற்பயிற்சி செய்வதால் உங்களின் உடல் உறுப்புகள், நரம்புகள் மற்றும் தமனிகள் தூண்டப்பட்டு புத்துணர்வு பெறுகின்றன. எலும்புகளையும் தசைகளையும் வலுவடையச் செய்கின்றன. மேலும் இரத்த ஓட்டத்தை அதிகரித்து நிணநீர் மண்டலங்களை சுத்தப்படுத்துகின்றன. ஏற்கெனவே குறிப்பிட்டபடிசெங்குத்தான சீரமைப்பு அதன் தனித்துவமான பாதுகாப்பு பண்பாகும்.

மூட்டு வலியைப் போக்குவதற்கு, உடலின் போர்வீரனாக இருக்கும் வெள்ளை அணுக்கள் பிரச்னையை ஏற்படுத்தும் ஊடுருவல்காரர்களை வெளியேற்ற விரைகிறது. இதன் விளைவாக நச்சுக்கள் மற்றும் வீக்கமடைந்த மூட்டுப்பகுதியில் சிக்கிய வெள்ளை அணுக்கள் செயலிழப்பதால் வலியை ஏற்படுத்துகிறது. பின் வலிகுறைந்து குணமானவுடன் தடைகள் விலகி, புதிய வெள்ளை அணுக்கள் உள்ளே செல்ல அனுமதிக்கின்றன.

எலும்பு தேய்மானத்தை தடுத்தல்– இதற்கு பல காரணங்கள் உள்ளன. செல்கள் தாங்கள் வெளியேற்றக்கூடிய தாதுக்களைவிட அதிக தாதுக்களை உறிஞ்சுவதால் இந்த நிலை ஏற்படுகிறது. தொடக்கம், நிறுத்தம் மற்றும் அதிகப்படியான ஈர்ப்பு விசையுடன் இணைந்து எலும்பு பகுதியில் உள்ள உயிரணுக்களை வெளியேற்றுவதை இலக்காக கொண்டுள்ளன.

மீள்சுழற்சி உடற்பயிற்சிகள் உங்கள் உடலில் உள்ள எலும்புகள் அடர்த்தியாகவும் வலுவாகவும் இருக்க உதவுகின்றன. நீங்கள் எலும்புத் தேய்மான பிரச்னையால் ஏற்கெனவே அவதிப்பட்டு வந்தால் மருத்துவரிடம் ஆலோசனை கேட்கவும். மருத்துவர் நீங்கள் என்ன சாப்பிட வேண்டும் என்று பரிந்துரைப்பார். மீள்தன்மை வலைப்பின்னல் தள உடற்பயிற்சி பற்றி அவரிடமும் கலந்து பேசவும்.

### சிறுநீர்பை அடங்காமை மற்றும் கட்டுப்பாடு:

இந்த பிரச்னையால் அவதிப்படுபவர்களுக்கு சிறுநீர் கழிப்பதா அல்லது வேண்டாமா என்பது ஒரு விருப்பம் அல்ல. இது இயற்கையின் அழைப்பு. இந்தப் பிரச்னை 30-களின் தொடக்கத்திலேயே மக்களுக்கு ஏற்படும். இதற்கான தீர்வு எளிது. சிறுநீர் பையிலிருந்து சிறுநீர் வெளியேறுவதை கட்டுப்படுத்தும் சுருக்கு தசைகள் அல்லது இறுக்கு தசைகளை வலுப்படுத்துங்கள். மீள்தன்மை கொண்ட வலைப்பின்னல் தள உடற்பயிற்சியை ஒரு நாளில் பல குறுகிய அமர்வுகளாக செய்யுங்கள்.

பின் குறிப்பு: டிராம்போலைன் 100 (மீள்தன்மை உடைய வலைப்பின்னல் தள கருவி) டெக்காத்லான் மற்றும் அமேசானில் சுமார் ரூ.3,000 விலையில் கிடைக்கிறது.

சிறுநீர்ப்பையில் இருந்து சிறுநீர் வெளியேறுவதைக் கட்டுப்படுத்தும் ஸ்பிங்டர் தசைகளை வலுப் படுத்துங்கள். உங்கள் ரீபவுண்டர் பயிற்சிகளை ஒரு நாளைக்கு பல குறுகிய அமர்வுகளில் பரப்புங்கள்.

**குறிப்பு:** டிராம்போலின் 100 டெகாத்லான் மற்றும் அமேசானில் சுமார் ரூ.3,000 விலையில் கிடைக்கிறது.

கட்டுரை ஆசிரியர்கள் இருவரும் Fitness for Life Simply மற்றும் Spritiual You Are Naturally Divinue என்ற ஆங்கில நூல்களின் எழுத்தாளர்கள்.



## RID 3160

**RC குல்பர்கா**

சங்க உறுப்பினர் சேதம் கங்க்ஜி தன் மறைந்த தந்தை லட்சுமன்சா கங்க்ஜி நினைவாக, கலாபுரகி கல்விச் சமூகத்தின் ஒரு பிரிவான VTS தொடக்க மற்றும் உயர்நிலைப் பள்ளிக்கு ஒரு நீர்த் தூய்மைப்படுத்தியை (ரூ.40,000) கொடையளித்தார்.

Rotary PEOPLE OF ACTION

# சங்கச் செய்திகள்





## RID 3192

**RC பெங்களூர் ஹெரிடேஜ் நார்த்**

இரண்டு அங்கன்வாடிகள் புதுப்பிக்கப்பட்டு (ரூ.3 லட்சம்), குழந்தைகள் முன்னிலையில் ஆசிரியர்களிடம் ஒப்படைக்கப் பட்டன.

## RID 3211

**RC ஆலப்பி கிரேட்டர்**

கடற்கரையில், ஆலப்புழா மாவட்டக் காவல்துறைத் தலைவர் மோகனசந்திரன் போதை மருந்துகளுக்கு எதிரான பரப்புரையைத் தொடங்கிவைத்தார். நலமான வாழ்க்கை முறைக்குப் போதைப் பொருட்களுக்கு அடிமையாகாமல் இருக்கவேண்டும் என்கிற விழிப்புணர்வை ரோட்டரியன்கள் பொது மக்களிடையில் உருவாக்கினார்கள்.





## RID 3212

**RC ராம்நாட்**

இந்தச் சங்கம் நடத்திவரும் திட்டத்தின்கீழ், ராமநாதபுரம் அரசு மருத்துவமனையுடன் இணைந்த மாவட்ட TB மையத்தில் TB நோயாளிகளுக்கு ஊட்டச்சத்துத் துணைப்பொருள் பைகள் வழங்கப்பட்டன.

## RID 3191

**RC பெங்களூர் மெட்ரோ**

TVM சிக்னலிங் அன்ட் டிரான்ஸ்போர்டேஷன் சிஸ்டம்ஸின் CSR நிதியளித்தலுடன் சிக்கஜலா-வில் உள்ள தொடக்க நல மையத்திற்கு ஒரு மருத்துவ உதவி வண்டி கொடையளிக்கப்பட்டது.






## RID 3261

**பிலாஸ்பூர் யுனைட்டெட் ரோட்டரி மின்-சங்கம்**

ஏழைச் சமூகங்களைச் சேர்ந்த குழந்தைகளுக்குக் குளிர்காலத்தின்போது ஒளி, கதகதப்பை வழங்குவதற்காக அவர்களுக்கு வீட்டு ஒளி விளக்குகள், குளிராடைகள் வழங்கப்பட்டன.

## RID 3262

**RC புபனேஸ்வர் மீடோஸ்**

ஜல சாத்ரா திட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட நீர் அரங்கத்தில் அவ்வழியாகச் சென்ற 650 பேருக்குக் கோடைக்கால உதவியாகக் குளிர்ந்த குடிநீர், மென்பானங்கள் வழங்கப்பட்டன. IPDG யக்யன்சிஸ் மொகாபாத்ரா, PDG அஸ்வினி கர், சங்கத் தலைவர் புத்தா மொகாபாத்ரா இந்நிகழ்வைப் பார்வையிட்டனர்.

ஒருங்கிணைப்பு: V முத்துகுமரன்

### கரூர் மருத்துவமனைக்கு ஒரு அதிநவீன சாதனம்

RC கரூர், RID 3000, கரூர் அரசு மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனையில் அதிவேக, தானியங்கி இரசாயனப் பகுப்பாய்வு கருவியை நிறுவியுள்ளது. இது PRID C பாஸ்கர் TRF-க்கு அளித்த $50,000 நேரடிப் பரிசின் மூலம் சாத்தியமானது. இந்த இயந்திரம் ரூ.40.12 லட்சம் செலவில் வாங்கப்பட்டது. இது ஒரு மணி நேரத்திற்கு 800 சிறுநீர் மற்றும் இரத்தப் பரிசோதனைகளை மேற்கொள்ள முடியும் என்றும், 125 வெவ்வேறு வகையான இரசாயனப் பகுப்பாய்வு களைச் செய்ய முடியும் என்றும் திட்டத்தின் முதன்மைத் தொடர்பாளர் K ரவீந்திரகுமார் தெரிவித்தார்.



*மருத்துவமனையில் ரசாயன பகுப்பாய்வியை நிறுவிய பிறகு, RC கரூர் உறுப்பினர்களுடன் PRID C பாஸ்கர்.*

### HPV தடுப்பூசி இயக்கம்

RC கவுகாத்தி லுயிட், RID 3240, ஒரு கருப்பை வாய்ப் புற்றுநோய் தடுப்பு பிரச்சாரத்தைத் தொடங்கியுள்ளது. இதில் 15 வயதுக்குட்பட்ட சிறுமிகள் மற்றும் பின்தங்கிய சமூகங்களைச் சேர்ந்த பெண்கள் உட்பட 144 பயனாளிகளுக்கு HPV தடுப்பூசிகள் போடப்பட்டன.



*ஒரு பயனாளிக்கு தடுப்பூசி போடப்படுகிறது.*

### வாழ்வாதாரத்திற்காக கூண்டு மீன் வளர்ப்பு

RC கும்டா, RID 3170, நேபாளத்தின் RC பிராட்நகர் ஃபியூஷன், RID 3292 உடன் இணைந்து, கடலோர கர்நாடகாவில் வாழ்வாதாரத்தை மீட்டெடுக்க உலகளாவிய மானியம் ஆதரவு பெற்ற கூண்டு மீன் வளர்ப்பு திட்டத்தைத் தொடங்கியுள்ளது. விதவைகள், இளைஞர்கள் மற்றும் பின்தங்கிய மீனவர்களை இலக்காகக் கொண்டு, இந்த முன்முயற்சி நிலையான மீன் வளர்ப்பிற்கான பயிற்சி, உபகரணங்கள் மற்றும் சந்தை இணைப்புகளை வழங்குகிறது.




*மே 25-ல் திட்டத்தின் தொடக்க விழாவில் மண்டல ஒருங்கிணைப்பாளர் ஜெயஸ்ரீ காமத், பத்மஜா மற்றும் IPDG ஷரத் பாய், DRFC வினய் ராய்கர் மற்றும் கிளப் IPP அதுல் காமத்.*

### மருத்துவர்கள், பட்டயக் கணக்காளர்கள் கௌரவிக்கப்பட்டனர்

RID 3090 DG பூபேஷ் மேத்தா, ஜூலை 1-ம் தேதி RC ஃபாசில்கா நடத்திய ஒரு வண்ணமயமான நிகழ்வில் மருத்துவர்கள் மற்றும் பட்டயக் கணக்காளர்களைக் கௌரவித்தார். “இரு வல்லுநர்களும் இன்று நம் வாழ்வில் இன்றியமையாத பகுதியாக உள்ளனர். அவர்களின் அர்ப்பணிப்பை நாங்கள் வணங்குகிறோம், அவர்களை கௌரவிக்கிறோம்,” என்று அவர் கூறினார். இந்த சங்கம் BSF அதிகாரிகளையும் அவர்களின் நாட்டு சேவைக்காக கௌரவித்தது.



*நிகழ்வில் DG பூபேஷ் மேத்தா (நடுவில்), மற்றும் சங்க தலைவர் அன்மோல் குரோவர் (இடமிருந்து மூன்றாவது).*

# RI தெற்காசிய அலுவலகத்திலிருந்து செய்தி

**ஒவ்வொரு வருடமும் ஒவ்வொரு ரோட்டரி உறுப்பினரும்**

TRF-ன் வருடாந்திர நிதிக்கு நீங்கள் அளிக்கும் நன்கொடை, ரோட்டரி உறுப்பினர்களை, உலகெங்கிலும் உள்ள சமூகங்களில் நேர்மறையான மாற்றத்தை உருவாக்கவும் அதிகாரம் அளிக்கிறது.

நீங்கள் வருடாந்திர நிதி-SHARE-க்கு நன்கொடை அளிக்கும்போது, உங்கள் பங்களிப்புகள் உள்ளூர் மற்றும் சர்வதேச திட்டங்கள், உதவித்தொகைகள் மற்றும் பிற செயல்பாடுகளுக்கு நிதியளிக்கும் மானியங்களாக மாற்றப்படுகின்றன.

TRF-கொடுப்பது பற்றிய விவரங்களுக்கு, rotary.org/donate-ஐ பார்வையிடவும்.

ஆண்டு நிதியைப் பற்றி மேலும் அறிய, my.rotary.org/annual-fund-ஐ பார்வையிடவும்.


**Zones 4, 5, 6 & 7 — The Rotary Foundation Zonal Team 2025–26**

| Zone-4 | | Zone-5 | Zone-6 | Zone-7 |
|---|---|---|---|---|
| Designation | Name | Name | Name | Name |
| RRFC | N Subramanian | Gowri Rajan | Debashish Das | Surendra Reddy Bommireddy |
| E/MGA | Ashish Ajmera | Aruljothi Karthikeyan | Ajay Agarwal | Sam Movva |
| EPNC | Ashes Ganguly | V R Muthu | Uttam Ganguli | Girish Gune |
| ARRFC | Ashok Agarwal | Chandra Bob Calidas | Anand Jhunjhunuwala | Gaurish Dhond |
| ARRFC | Sanjiv Mehra | Sridhar Jagannathan | Pawan Agarwal | Thirupathi Naidu |
| ARRFC | Sandip Agarwala | Zameer Pasha | Manjit Singh Arora | Krishna Shetty |
| ARRFC | Kailash Jethani | S Balaji | Sudip Mukherjee | Deepak Pophale |
| ARRFC | Gustad Anklesaria | Pubudu De Zoysa | Rajan Gandotra | Bhaskar Ram |
| ARRFC | Shrikant Indani | Vijaykumar Thandassery R | | |
| AEPNC | Manish Gyani | T Shanmugasundaram | Ashok Gupta | Harish Motwani |
| AEPNC | Arun Mongia | Gunasekaran | V N Singh | Jagadeeswararao Maddu |
| AEPNC | Sangita Shukla | A L Chokkalingam | Pratim Banerjee | Muralidharan Nagarajan |
| AEPNC | Sarthika Narang | P Bharanidharan | Saurab Deb Roy | Nasir Huseni |
| AEPNC | Namrata Suri | S Sundararajan | K S Rajan | Deepak S |
| AEPNC | Sudhir Mangla | Scaria Jose Kattor | | |
| AE/MGA | Dhiran Datta | Balaji Babu | Bipin Chachan | Satish Madhavan |
| AE/MGA | Chetan Desai | J K N Palani | Rajib Pokhrel | Sharat Babu Chilukuri |
| AE/MGA | Tushar V Shah | G Chandramohan | Shashank Rastogi | Pramod Sasikant Parikh |
| AE/MGA | Sharat Jain | Rajmohan Nair | Chandu Agarwal | Vinay Pai Raikar |
| AE/MGA | Maulin M Patel | J Jesiah Vilavarayar | Krishnendu Gupta | B Rajaram Bhat |
| AE/MGA | Sanjay Malviya | Dhamodharan | | |



# ஆங்கிலம் பேசும் ஆயாக்கள் தேவை!

LBW



**TCA ஸ்ரீனிவாச ராகவன்**

குழந்தைகளை ஆயாக்கள் வசம் ஒப்படைக்க விரும்பும் ஒரு குறிப்பிட்ட வகை இந்தியர்கள் உள்ளனர். அவர்களை இங்கிலாந்தில் கவர்னஸ்கள் என்றும், இந்தியாவில் ஆயாக்கள் என்றும், கிழக்கு ஆசியாவில் அம்மாக்கள் என்றும் அழைப்பார்கள். இந்தச் சார்புநிலை எப்போதும் இருந்ததில்லை. மக்கள் நடமாட்டம் குறைவாகவும், கூட்டுக் குடும்பங்கள் சாதாரணமாகவும் இருந்த நாட்களில், குழந்தைகளைப் பற்றி யாரும் கவலைப் படவில்லை. வீட்டில் எப்போதும் குழந்தைகளுடன் போதுமான உறவினர்கள் இருந்தனர்.

ஆனால், உள்நாட்டு இடப்பெயர்வு ஒரே கூரையின் கீழ் வசித்த கூட்டுக் குடும்பங்களை மெதுவாகப் பிரித்தது. அப்போதும், கணவர் மட்டுமே வேலை செய்ததால், மனைவி எப்போதும் வீட்டிலேயே இருந்ததால் குழந்தைகள் கவனித்துக் கொள்ளப்பட்டனர். பின்னர், கணவன், மனைவி இருவரும் வேலை செய்யும் இரட்டை வருமானக் குடும்பங்கள் தோன்றின. அவர்கள் தங்கள் குழந்தைகள் நர்சரிகள் மற்றும் பள்ளிகளுக்கு அனுப்பப்படும் வரை அவர்களைக் கவனித்துக் கொள்ள யாராவது தேவைப்பட்டனர். இறுதியாக, சுமார் 25 ஆண்டுகளுக்கு முன்பு, வெளிநாடு வாழ் இந்தியர்கள் (NRI) வந்தனர். ஒரு தம்பதியினர் விடுமுறைக்காக இந்தியாவிற்குத் திரும்புவார்கள். வெளிநாட்டில் இருக்கும் போது தங்கள் குழந்தைகளிடமிருந்து ஒரு கணம் கூட ஓய்வு கிடைக்காததால், இந்தியாவில் இருக்கும் போது குழந்தைகளிடமிருந்து முழுமையான சுதந்திரத்தை அவர்கள் விரும்பினர். தாத்தா, பாட்டிகள் இருந்தாலும் அவர்கள் வயதானவர்கள் என்பதால் ஒரு குறிப்பிட்ட அளவுதான் உதவ முடிந்தது. இவ்வாறாக, பிரிட்டிஷ் சாகிப்களால் இந்தியாவில் கடைப்பிடிக்கப்பட்ட ஒரு விசித்திரமான அம்சமாக இருந்த ஆயா, தற்போது சர்வசாதாரணமாகி விட்டார். அனைவரிடமும் ஆயாக்கள் உள்ளனர்.

எல்லாம் மிகவும் நேரடியானது, இல்லையா? உண்மையில் இல்லை. இந்தியா ஒரு பெரிய நாடு, அதில் ஏராளமான மொழிகள் உள்ளன. பழைய நாட்களில் குறைந்த வருமான மட்டங்களில் உள்நாட்டு இடம்பெயர்வு அதிகமாக இல்லை, குறிப்பாக பெண்களிடம். ஆனால் படிப்படியாக அது மாறிவிட்டது, கடந்த இரண்டு தசாப்தங்களாக ஆண் மற்றும் பெண் என உள்நாட்டு இடம் பெயர்வு அதிகரித்துள்ளது.


இது ஆயாக்கள் எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு வழிவகுத்துள்ளது, இது நல்லதுதானே? ஆம் என்றும் சொல்லலாம், இல்லை என்றும் சொல்லலாம். பிரச்சனை மொழிதான். பிரிட்டிஷ் ஆட்சியின் போது ஆயாக்கள் ஆங்கிலக் குழந்தைகளுடன் தொடர்பு கொள்ள சிரமப் பட்டதைப் போலவே, இப்போது இந்திய ஆயாக்கள் அதே சிரமத்தை எதிர்கொள்கிறார்கள். இந்த சேவைகளின் மிகப்பெரிய சப்ளையரான ஜார்கண்டிலிருந்து வந்த ஒரு பெண், பெற்றோர்கள் வேறு மாநிலத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையுடன் எப்படி பேசுவார்? இரு பெற்றோர்களும் வெவ்வேறு மாநிலங்களைச் சேர்ந்தவர்களாக இருந்தால், இந்த பிரச்சனை இன்னும் தீவிரமாகிறது, ஏனெனில் குழந்தைகளுக்கும் ஆயாவிற்கும் இடையில் மட்டுமின்றி, பெற்றோர்களுக்கும் கூட ஒருவருக்கொருவர் தொடர்பு கொள்ள கடினமாக இருக்கும். எனவே அனைவரும் ஆங்கிலம் பேசுவார்கள் - ஆயாவைத் தவிர.

ஆகையால், ஆங்கிலம் பேசத் தெரியாவிட்டாலும், புரிந்துகொள்ளக்கூடிய ஆயாக்களுக்கு அதிக தேவை உள்ளது. அவர்கள் ஒரு நாளைக்கு ரூ.1,200 முதல் ரூ.2,000 வரை வசூலிக்கிறார்கள். அவர்களுக்கு தனி குளியலறை யுடன் தங்க ஒரு அறை தேவை. சிலர் அறையில் ஏசி மற்றும் டிவியையும் கேட்கிறார்கள். அத்துடன், ஒரு நாளைக்கு நான்கு வேளை உணவு தேவை. இவையெல்லாம் சேர்த்து ஒரு பெரிய தொகை ஆகும், ஆனால் வெளிநாடு வாழ் இந்தியர்களுக்கு (NRI) இது முழுமையாக மலிவானது இல்லை என்றாலும், கட்டுப்படியாகக்கூடியதே. இங்கு ஒரு மாதத்திற்கு அத்தம்பதியினர் செலவழிக்கும் தொகையை, அவர்கள் வெளிநாட்டில் வெறும் மூன்று அல்லது நான்கு நாட்களுக்கு நான்கு மணி நேரம் குழந்தையை பார்த்துக் கொள்ள செலவழிப்பார்கள்.

வயது வரம்பின் மறுமுனையில் வயதானவர்கள் உள்ளனர். அவர்களுக்கும் ஆயாக்கள் தேவை, ஆனால் இவர்கள் உதவியாளர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். ஆனால், சில காரணங்களால், இந்த உதவியாளர்கள், ஆயாக்கள் வாங்குவது போல் கட்டணம் வசூலிப்பதில்லை, அதே கடமைகள் இருந்தாலும், ஆயாக்களுக்கு இல்லாத அடிப்படை செவிலியர் பயிற்சி அவர்களுக்கு உள்ளது. குழந்தைகள் மற்றும் முதியவர்களிடமிருந்து வரும் இந்த தேவை, ஒரு செழிப்பான ஏஜென்சி வணிகத்திற்கு வழிவகுத்துள்ளது. ஆயா அல்லது உதவியாளரின் மாத சம்பளத்தில் 15 சதவீதத்தை ஏஜென்ட்கள் எடுத்துக் கொள்கிறார்கள். எனவே நீங்கள் இரண்டு நபர்களுக்கு பணம் செலுத்துகிறீர்கள்.

அப்போதுதான் சந்தை செயல்படத் தொடங்குகிறது. சேவை வழங்குநர்கள் முகவரை எளிதாகப் புறக்கணிக் கிறார்கள், அதனால் தான் ஏஜென்ட்கள் ஒரு முன்பணத்தைக் கேட்கிறார்கள். நான் சொன்னது போல், இது ஒரு மிகவும் விலையுயர்ந்த யோசனையாகும்.■

ADVT.




www.rjmantra.com 9489067789 | 8903660689 admin@rjmantra.com

Posted at Egmore RMS Patrika Channel. Date of posting: 9–15 every month. Regd with RNI TNTAM/2018/76372. Rotary News Tamil Published 1st week of every month.
Registered No. TN/CCN/677/2025-2027
Licensed to post WPP No.TN/PMG(CCR)/WPP/611/25-27
Total number of pages in this monthly issue, including cover, 84. Price: ₹40

ADVT.

PIONEERING SUSTAINABILITY IN ROTARY DISTRICT 3212

Congratulations



N KANCHANA DEVI

President

ROTARY CLUB OF SIVAKASI DIAMONDS

The club has achieved resounding success, with a notable achievement of recovering 127 kilograms of recyclables from being dumped in landfills through our Plogging activity.

This accomplishment not only showcases the club's commitment to environmental stewardship but also sets a precedent for other clubs in the district to follow. We look forward to collaboratively work with lot more Rotary clubs exploring innovative ways to promote sustainability in our Nation.

LEKHA ads/Aug 25/ Rotary/BW

HEADING TOWARDS CREATING 1 LAKH RESPONSIBLE ECO CHAMPIONS BY 2030

LET US PRACTICE SOURCE SEGREGATION: LET US GO FOR ZERO GARBAGE

LEND A HAND | Meri LiFE | DPIIT #startupindia | RJ GARBAGE BANK குப்பை வங்கி

rj_garbagebank www.ilovewaste.in rjgarbagebank@gmail.com 87542 04222